# இந்திய தணிக்கைத் தலைவரின்
# தமிழ்நாட்டில்
# சீர்மிகு நகரத் திட்டத்தை செயல்படுத்துதல்
# மீதான செயலாக்கத் தணிக்கை - மார்ச் 2023

**தமிழ்நாடு அரசு**

**2025 *ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண்* 11**

**(*சிவில்*)**

# இந்திய தணிக்கைத் தலைவரின்
# தமிழ்நாட்டில்
# சீர்மிகு நகரத் திட்டத்தை செயல்படுத்துதல்
# மீதான செயலாக்கத் தணிக்கை –
# மார்ச் 2023

**தமிழ்நாடு அரசு**

**2025ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண் 11**

**(சிவில்)**

## பொருளடக்கம்


| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | v |
| நிர்வாகச் சுருக்கம் | | vii |
| **அத்தியாயம் I – முன்னுரை** | | |
| திட்டம் பற்றி | 1.1 | 1 |
| சீர்மிகு நகரத் திட்டத்தின் நோக்கங்கள் | 1.1.1 | 1 |
| தேர்ந்தெடுக்கும் முறை | 1.1.2 | 3 |
| திட்ட அமைப்பு (நிருவாக அமைப்பு) | 1.2 | 4 |
| தணிக்கை நோக்கங்கள் | 1.3 | 5 |
| தணிக்கை அளவுகோல்கள் | 1.4 | 5 |
| தணிக்கையின் வரம்பு, ஆய்வு முறை மற்றும் தெரிவு செய்தல் | 1.5 | 6 |
| ஏற்பு | 1.6 | 7 |
| **அத்தியாயம் II - திட்டமிடல் மற்றும் நிதி மேலாண்மை** | | |
| திட்டமிடல் | 2.1 | 9 |
| சீர்மிகு நகரத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல் | 2.1.1 | 10 |
| திண்டுக்கல் நகரத்திற்கான SCP தயாரிப்பில் குறைபாடு – நகரத்தை சீர்மிகு நகரமாக மேம்படுத்தும் வாய்ப்பின் இழப்பு | 2.1.2 | 11 |
| SCPல் முன்மொழியப்பட்ட பணிகளை செயல்படுத்தாமை | 2.1.3 | 12 |
| திட்டமிடப்படாத பணிகளை நிறைவேற்றுதல் | 2.1.4 | 14 |
| ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்ட பணிகள் | 2.1.5 | 16 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| நிதி மேலாண்மை | 2.2 | 19 |
| முன்மொழிவின் மானியக் கூறு | 2.2.1 | 19 |
| பணிகளின் நிலை | 2.2.2 | 20 |
| நிதி வெளியிடுவதில் தாமதம் மற்றும் தவறாக வட்டித்தொகையை செலுத்துதல் | 2.2.3 | 21 |
| நிதி திரட்டுதல் | 2.2.4 | 24 |
| A&OE நிதி திருப்புதல் (Diversion of A&OE Funds) | 2.2.5 | 26 |
| நிதி திருப்புதல் | 2.2.6 | 28 |
| சென்டேஜ் கட்டணங்கள் | 2.2.7 | 29 |
| அத்தியாயம் III - செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு | | |
| SCM வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் | 3.1 | 32 |
| சிறப்பு நோக்க நிறுவனங்களை நிறுவுதல் | 3.1.1 | 32 |
| குறைந்தபட்ச செலுத்தப்பட்ட மூலதனத்தின் பங்களிப்பு இல்லாமை | 3.1.2 | 32 |
| தலைமை செயல்பாட்டு அதிகாரியை நியமனம் செய்யாமை | 3.1.3 | 34 |
| செயல்பாட்டு சுதந்திரமின்மை | 3.1.4 | 35 |
| வருவாய் ஈட்டாமை | 3.1.5 | 36 |
| திட்டங்களை செயல்படுத்துவதில் கவனிக்கப்பட்ட குறைபாடுகள் | 3.2 | 38 |
| பான்-சிட்டி பணிகள் | 3.2.1 | 38 |
| தொடர்புடைய துறைகளில் இருந்து முன் ஒப்புதல்/அனுமதி பெறாமை | 3.2.2 | 39 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| முக்கிய உள்கட்டமைப்பின் கீழ் திட்டங்களை செயல்படுத்துவதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் | 3.3 | 40 |
| குடிநீர் வழங்கல் | 3.3.1 | 41 |
| மின்சாரப் பணிகள் | 3.3.2 | 44 |
| திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட சுகாதாரம் | 3.3.3 | 47 |
| திறமையான நகர்ப்புர இயக்கம், பொது போக்குவரத்து (பாதசாரிகளுக்கு உகந்த பாதைகள் மற்றும் மோட்டார் அல்லாத போக்குவரத்து - நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பு) | 3.3.4 | 52 |
| சமூக உள்கட்டமைப்பு - சுகாதாரம் மற்றும் கல்வி | 3.3.5 | 58 |
| மின் ஆளுகை | 3.3.6 | 61 |
| நீடித்த நிலையான சுற்றுச்சூழல் | 3.3.7 | 64 |
| பிற திட்டங்கள் | 3.3.8 | 70 |
| கவனம் ஈர்க்கும் மற்ற குறிப்புகள் | 3.4 | 77 |
| ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஒப்பந்த மேலாண்மை | 3.4.1 | 77 |
| உயர் அதிகாரம் கொண்ட திட்ட ஒப்புதல் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தாமை | 3.4.2 | 79 |
| கண்காணிப்பு | 3.5 | 81 |
| கண்காணிப்பு அமைப்பு | 3.5.1 | 81 |
| தேசிய மற்றும் மாநில அளவிலான கண்காணிப்பு | 3.5.2 | 82 |
| நகர அளவிலான கண்காணிப்பு | 3.5.3 | 82 |

## இணைப்புகள்


| இணைப்பு எண் | விவரங்கள் | பக்க எண் |
|---|---|---|
| 2.1 | SCPல் முன்மொழியப்பட்டு செயல்படுத்தப்படாத பணிகள் | 87 |
| 2.2 | தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்களால் செயல்படுத்தப்பட்ட திட்டமிடப்படாத பணிகள் | 89 |
| 2.3 | ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்ட பணிகள் | 91 |
| 2.4 | SCMன் கீழ் மேற்கொண்ட பணிகளின் நகர வாரியான நிலை | 95 |
| 3.1 | தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்களால் செயல்படுத்தப்படும் தகுதியற்ற பான்-சிட்டி பணிகள் | 96 |
| 3.2 | DTCP/CMDA/PWD/TNPCBகளின் ஒப்புதல்கள் பெறப்படாதவை எனக் குறிப்பிட்டு – தெரிவு செய்யப்பட்ட நேர்வுகள் | 99 |
| 3.3 (அ) | குடிநீர் வழங்கல் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை | 101 |
| 3.3 (ஆ) | மின்சாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை | 101 |
| 3.3 (இ) | திடக்கழிவு மேலாண்மை (UGSS மற்றும் மழைநீர் வடிகாலையும் சேர்த்து) உட்பட சுகாதாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை | 102 |
| 3.3 (ஈ) | திறமையான நகர்ப்புற இயக்கம், பொதுப் போக்குவரத்து மற்றும் NMT ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை | 102 |
| 3.3 (உ) | சமூக உள்கட்டமைப்பு - சுகாதாரம் மற்றும் கல்வியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை | 103 |
| 3.3 (ஊ) | மின்-ஆளுமையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை (வலுவான தகவல் தொழில்நுட்ப இணைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல்) | 103 |
| 3.3 (எ) | நீடித்த நிலையான சூழலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை | 104 |
| 3.3 (ஏ) | பிற திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலை | 104 |
| 3.4 | உயர் அதிகாரம் கொண்ட திட்ட ஒப்புதல் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்படாத பணிகள் | 105 |
| | சுருக்கங்களின் சொற்களஞ்சியம் | 110 |

## முகவுரை

மார்ச் 2023-உடன் முடிவடைந்த ஆண்டிற்கான இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2)வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு, சட்டமன்றத்தில் வைக்கப்படும் பொருட்டு தமிழ்நாடு ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்திய தணிக்கைத் தலைவரின் இவ்வறிக்கை, ஏப்ரல் 2016 முதல் மார்ச் 2024 வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட தமிழ்நாட்டில் சீர்மிகு நகரத் திட்டத்தை செயல்படுத்துதல் மீதான செயலாக்கத் தணிக்கையின் முடிவுகளைக் கொண்டுள்ளது.

இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள நேர்வுகள், செப்டம்பர் 2022 முதல் மே 2023 வரை மற்றும் ஜூலை 2024 வரையில் மேற்கொள்ளப்பட்ட இச்செயலாக்கத் தணிக்கையில் கவனிக்கப்பட்டவை. இத்தணிக்கை காலத்திற்கு அப்பாற்பட்ட தணிக்கைக் குறிப்புகளும் இவ்வறிக்கையில் தேவைப்படும் இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய தணிக்கைத் தலைவரால் வெளியிடப்பட்ட தணிக்கைத் தரங்களுக்கு இணங்கும் வகையில் இத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ள இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரப்பூர்வமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

# நிர்வாகச் சுருக்கம்

## நிர்வாகச் சுருக்கம்

மக்கள் தொகை கணக்கெடுப்பு, 2011ன் படி, 63 விழுக்காடு மக்கள் வசிக்கும் நகரங்களின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், நகரங்களின் அடிப்படை, நிறுவன, சமூக மற்றும் பொருளாதார உள்கட்டமைப்பின் விரிவான வளர்ச்சியை அடைவதற்கும் சீர்மிகு நகரத் திட்டம் (SCM), 2015ல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இந்த திட்டம், 100 நகரங்களில் செயல்படுத்த முன்மொழிந்தது. மத்திய அரசு, தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 11 நகரங்களுக்கும் சராசரியாக ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு நகரத்திற்கும் ₹100 கோடி வீதம், ஐந்து ஆண்டுகளில் ₹5,500 கோடி அளவிற்கு நிதியுதவி வழங்க முன்வந்தது. மேலும், மாநில/நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பும், சமமான தொகையைப் பங்களிக்கும்.

'சீர்மிகு தீர்வுகள்' மூலம் போதுமான குடிநீர் வழங்கல், மின்சாரம், தூய்மை, சுகாதாரம் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பினையும், நீடித்து நிலைத்திருக்கும் சுற்றுப்புறச் சூழலையும் மற்றும் உயர்ந்த தரத்துடன் கூடிய வாழ்க்கையை குடிமக்களுக்கு அளிக்கும் வகையில் நகரங்களை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த திட்டத்தின் தேர்வு, போட்டி மற்றும் கூட்டுறவு கூட்டாட்சி என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட இரண்டு கட்ட தேர்வு முறையாக உள்ளது. நிலை-1: மாநிலத்திற்குள் மற்றும் நிலை-2: நகர சவால் ஆகியவற்றை உள்ளடக்கியது. நிலை-1ன் கீழ், நகரங்கள் மாநில அளவிலான உயர் அதிகாரம் கொண்ட வழிகாட்டுதல் குழுவிற்கு (HPSC) தகவல்களை வழங்கிய பின் , குழுவால் ஆய்வு செய்யப்பட்டு சீர்மிகு நகரத்திற்காக பரிந்துரைக்கப்படுகின்றன. நிலை-2ன் கீழ், சாத்தியமான நகரங்கள், நகரவாசிகள் மற்றும் பங்குதாரர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் விவரங்களுடன் முன்மொழிவுகளை (SCP), வருவாய் ஈட்டுவதற்கான நிதி மாதிரியை உள்ளடக்கித் தயாரிக்கின்றன. இம்முன்மொழிவுகள், தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் அடங்கிய குழுவால் மதிப்பீடு செய்யப்படுகிறது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர நல அமைச்சகத்தால் (MoHUA) வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுகின்றனர்.

இத்திட்டத்தைச் செயல்படுத்தும் நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் (SPV) மூலம், இந்த திட்டத்தின் செயலாக்கம் மேற்கொள்ளப்படுகிறது. சீர்மிகு நகரங்கள், MoHUAன் ஒப்புதலுடன், ஒரு முழு நேர தலைமை செயல்பாட்டு அதிகாரியை நியமனம் செய்வதுடன், குறைந்தபட்ச செலுத்தப்பட்ட மூலதனமாக ₹200 கோடியைக் கொண்டிருக்க வேண்டும். SCM வழிகாட்டுதல்கள், சீர்மிகு நகரங்கள், தன்னிச்சையாக செயலாற்றுதல் மற்றும் முடிவெடுப்பதிலும், செயலாக்கத்திலும் சுய அதிகாரமும் உறுதி செய்கிறது. மேலும், இவ்வழிகாட்டுதல்கள், SPV தன்னை நிலையானதாக ஆக்கவும், கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காகவும், அதன் சொந்த கடன் தகுதியை வளர்த்துக் கொள்ள ஒரு முழுமையான மற்றும் அதிக வருவாய்க்கான வழி ஏற்படுத்தப்படுவதையும் உறுதி செய்கிறது. SCPகள், பணிகளின்

முழுமையான வாழ்க்கைச் சுழற்சிக்கான நிதித் திட்டத்தை உள்ளடக்கியது. இதில் மூலதனச் செலவு, இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவு மற்றும் சீர்மிகு நகரத் திட்டங்களிலிருந்து பெறப்படும் வருவாய் ஆகியவை அடங்கும்.

இந்த திட்டம், குறிப்பிட்ட பகுதிகளில் கவனம் செலுத்துவதன் மூலமும், மற்ற வளர்ச்சி அடையக்கூடிய நகரங்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக செயல்படும் ஒரு பிரதி மாதிரியை உருவாக்குவதன் மூலமும் அதன் நோக்கங்களை அடைவதை குறிக்கோளாகக் கொண்டது. இந்த திட்டத்தின் உத்திகளுக்கான கூறுகள், மறுசீரமைப்பு, மறுமேம்பாடு, பசுமை வளைய மேம்பாட்டுடன், நகரத்தின் அதிக அளவு பகுதிகளை உள்ளடக்கிய சீர்மிகு தீர்வுகளின் பயன்பாட்டினை ஈடுபடுத்தும் பான்-சிட்டி முன்முயற்சி போன்ற பகுதி அடிப்படையிலான வளர்ச்சிக் (Area Based Development - ABD) கூறுகளை உள்ளடக்கியது. தொடக்கத்தில், திட்டக் காலம் ஐந்து ஆண்டுகளாக இருந்தபோதிலும், பின்னர் மார்ச் 2025 வரை நீட்டிக்கப்பட்டது.

திட்டத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, 11 நகரங்களில், ஏழு நகரங்களை தணிக்கை தெரிவு செய்தது. திட்ட நோக்கங்களின்படி, தொலைநோக்குப் பார்வை, நிதி ஆதாரங்களைத் திரட்டுதல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் இருந்ததா எனவும், திட்டமிட்டபடி நிதி விடுவிக்கப்பட்டதா எனவும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடையும் வகையில், பணிகள் திறம்பட நிறைவேற்றப்பட்டதா எனவும், உள் கட்டுப்பாட்டு நடைமுறைகள் போதுமானதாக இருந்ததா எனவும் மதிப்பீடு செய்வதற்காக இச்செயலாக்கத் தணிக்கை நடத்தப்பட்டது.

### முக்கிய தணிக்கை கண்டுபிடிப்புகள்

தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 12 நகரங்களில், 11 நகரங்கள் மட்டுமே ‘சீர்மிகு நகரங்களாக’ மேம்படுத்தப்பட தேர்வு செய்யப்பட்டன. முதலில் திண்டுக்கல் நகரம் தேர்வு செய்வதற்காகப் பரிசீலிக்கப்பட்டாலும், வழிகாட்டுதலில் பரிந்துரைக்கப்பட்டவாறு, முதல் முன்மொழிவு, சாத்தியமான, பகுதிவாரியான பான்–சிட்டியை உள்ளடக்கியதுடனான ABDல் சேர்க்கப்பட வேண்டிய பணிகளின் விவரத்தைக் கொண்ட வடிவத்தில் வழங்கப்படாததால் தேர்வு செய்யப்படவில்லை. வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததால், மாநிலத்தில் மற்றுமொரு சீர்மிகு நகரத்தை மேம்பாடு செய்வதற்கான வாய்ப்பு மறுப்பிற்கு வழிவகுத்தது.

SPVகள் உருவாக்கப்பட்டபோதிலும், நிறுவனங்கள் சட்டம், 2013ல் குறிப்பிடப்பட்ட சட்டரீதியிலான ஏற்பாடுகளை தவிர்க்கும் வகையில், செலுத்தப்பட்ட மூலதனம் ₹10 இலட்சம் (₹200 கோடிக்குப் பதிலாக) வைக்கப்பட்டிருந்தது. சென்னையைத் தவிர மற்ற தெரிவு செய்யப்பட்ட ஆறு நகரங்களிலும், ஒரு முழு நேர தலைமை செயல்பாட்டு அதிகாரி நியமிக்கப்படவில்லை. SPVகளின் நடவடிக்கைகள், தொடக்கப் பணி ஒப்புதலுக்கும் (நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் (ULBகள்) முன்மொழிவின் அடிப்படையில்), நிதி விடுவித்தலுக்கும்

கட்டுப்படுத்தப்பட்டது. மேலும், வைப்புத் தொகை, குத்தகை-வாடகை, வாகன நிறுத்துமிட/பயனர் கட்டணங்கள் வாயிலாக ஈட்டப்பட்ட வருவாய் ₹57.72 கோடியும் ULBகளால் மட்டுமே பெறப்பட்டது. அந்த வருவாய் SPVகளுக்கு மாற்றப்படவில்லை என்பதால், வருவாய் பங்கீடு மாதிரியும் தோல்வியுற்றது.

தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களில், ஐந்து நகரங்கள், தங்களின் SCM மானியத்திற்கும் அதிகமாக பணிகளைத் திட்டமிட்டன. தமிழ்நாடு அரசிடமிருந்து திட்ட இயக்குநகரத்திற்கும், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திலிருந்து (TUFIDCO) அந்தந்த SPVகளுக்கும், நிதியை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டது.

SCPகளில் குடிநீர் வழங்கல், கழிவுநீர் வடிகால் போன்றவைகளுக்கு ஒருங்கிணைத்தல் மற்றும் பொது தனியார் பங்களிப்பு (PPP) மாதிரிகள் திட்டமிடப்பட்டப் போதிலும், SCM மானியங்கள் அப்பணிகளை நிறைவேற்றுவதற்காக மற்ற துறைகளுக்கு மாற்றப்பட்டன. இதன் விளைவாக, மதிப்புமிக்க நிதி ஆதாரங்களின் பயன்பாடு மறுக்கப்பட்டதில் முடிந்தது. உதாரணமாக, பணி செயல்பாட்டில் உள்ள 24x7 குடிநீர் வழங்கும் பணிக்காக ₹150.73 கோடி ஒருங்கிணைப்பு நிதியாக மாற்றப்பட்டது. PPPன் கீழ் மொத்தம் ₹1,630.03 கோடி திட்டமிடப்பட்டபோதிலும், PPP முறையின் கீழ் சென்னை மற்றும் கோயம்புத்தூர் SCLகளால் ₹16.57 கோடி மதிப்புள்ள நான்கு பணிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டன. சந்தைக் கடன்கள், ULB பங்களிப்பு போன்ற மற்ற ஆதாரங்களிருந்து நிதி திரட்டப்படவில்லை. இவ்வாறு, SCLகள் மற்ற ஆதாரங்களிருந்து நிதி திரட்டாததாலும், தன்னிச்சையான செயலாற்றல் இல்லாததாலும் பணிகளை நிறைவேற்றுவற்கு முழுவதுமாக அரசு மானியங்களை மட்டுமே சார்ந்திருந்தது. இதன் விளைவாக, SCPகளில் சேர்க்கப்பட்ட அனைத்து பணிகளும் நிறைவேற்றப்படாததற்கு வழிவகுத்தது.

தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களின் அனைத்து முன்மொழிவுகளில், பசுமை வளைய மேம்பாட்டுக் கூறு சேர்க்கப்படவில்லை. இதனால், நிலையாக பெருகிவரும் நகர்ப்புர மக்கள்தொகைக்கு, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களுடன் இன்ன பிற வசதிகளுடன், தனியாக ஒரு புதிய பசுமை வளைய டவுன்ஷிப்பாக, குடியிருப்புகளின் உருவாக்கம்/ கட்டுமானம் மறுக்கப்பட்டது.

மேலும், ₹1,602.20 கோடி மதிப்புள்ள 52 பணிகள் (திட்டமிடப்பட்ட பணிகளில் 15.97 விழுக்காடு) தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களின் முன்மொழிவுகளில் சேர்க்கப்பட்ட போதிலும், அவை செயல்படுத்தாததால் ABD பகுதிகளில் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி இழக்கப்பட்டது. இந்த வகையில், பலன்களும் மறுக்கப்பட்டது. திட்ட வழிகாட்டுதலின்படி, குடிமக்களின் ஆலோசனைக்குப் பிறகு பணிகள் முதல் முன்மொழிவில் சேர்க்கப்பட்டிருந்தன. இருப்பினும் இந்த வழிகாட்டுதல்களை மீறி முதல் முன்மொழிவில் சேர்க்கப்படாத ₹623.86 கோடி மதிப்புள்ள 44 பணிகள் செயல்படுத்தப்பட்டன. மேற்கூறிய 44 பணிகளில், ஐந்து பணிகள் வழக்கமாக மேற்கொள்ளப்படுபவையாதலால், தொடர்புடைய

மாநகராட்சியால் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். மேலும், 21 பணிகள் ABD பகுதிக்கு வெளியே திட்ட நிதியைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டது, மாநகராட்சி தங்கள் சொந்த நிதியிலிருந்து செய்ய வேண்டிய பணிகளுக்கு திட்ட நிதியைப் பயன்படுத்தியதைக் குறிக்கிறது. திருநெல்வேலி SCL, ₹314.62 கோடி மதிப்புள்ள 15 திட்டமிடாத பணிகளை நிறைவேற்றி, 25.84 விழுக்காடாகக் கணக்கிடப்பட்டது. இது தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களுள் அதிகமாக இருந்தது.

மேலும், ₹655.43 கோடி செலவினத்தில் 70 பணிகள் பெரும்பாலும் ABD பகுதிக்கு வெளியே நிறைவேற்றப்பட்டன.

செயலாக்கத்திற்கு மேற்கொள்ளப்பட்ட 414 பணிகளில், மே 2025 நிலவரப் படி, 405 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பான்–சிட்டியின் கீழ் செயல்படுத்தப்பட்ட ₹780.77 செலவிலான 69 பணிகளில், ₹209.24 கோடி அளவிற்கான 22 பணிகள் மட்டுமே வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்ட பான்–சிட்டி வரையறைகளின்படி தகுதியானவையாகும்.

திருநெல்வேலி SCL, ₹46.67 கோடி மதிப்பீட்டிலான செலவில் திட்டமிடப்படாத SCADA (மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு ஈட்டல்) அமைப்பைச் செயல்படுத்தியது. நான்கு மின்சார அளவிகளுள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு மின்சார அளவி டிசம்பர் 2023 முதல் வேலை செய்யவில்லை. நீர் ஓட்டத்தை கண்காணிப்பதற்காகவும், முக்கியமான தரவு சேகரிப்புக்காகவும் செயல்படும் தொலை முனைய அலகுகள் மற்றும் கட்டுப்பாட்டு சாதனங்கள் அமைக்கப்படவில்லை. சேலம் SCL நிறுவனம், SCADA அமைப்பு 24x7 குடிநீர் வழங்கல் அமைப்புடன் தற்போதுள்ள வலையமைப்பை மேம்படுத்துவதற்கும் மறுசீரமைப்பதற்கும் ₹74.88 கோடி செலவில் செயல்படுத்தியது. பணி நிறைவுக்காக முதலில் எதிர்பார்க்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் பணிகள் நிறைவடையவில்லை. மதுரை SCL, ₹79.93 கோடி செலவில் ‘குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்துதல்' என்ற பணியை மேற்கொண்டது. இருப்பினும், பணி நிறைவுக்கான எதிர்பார்க்கப்பட்ட தேதியிலிருந்து 42 மாதங்களுக்குப் பிறகும் பணி இன்னும் நடைபெற்று கொண்டிருந்தது.

தெரிவு செய்யப்பட்ட நான்கு நகரங்களில்[1], ₹48.59 கோடி செலவில் கட்டப்பட்ட 70 நுண்ணுர உற்பத்தி மையங்களுள் (MCC), 23 MCCகள் இயங்கவில்லை. இதனால், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் முழுமையாக அடையப்படவில்லை.

பேட்டரியால் இயக்கப்படும் வாகனங்கள் (BOVகள்) சரியான நேரத்தில் பராமரிக்கப்படாததால், சேலம் SCLன் 129 BOVகளும், மதுரை SCLன் 82 BOVகளும் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பயன்படுத்த முடியாமல் போனதால், வாகனங்கள் உரிய நோக்கத்திற்கான பயனை அடையவில்லை.

1 கோயம்புத்தூர், மதுரை, சேலம் மற்றும் திருப்பூர்.

தெரிவு செய்யப்பட்ட நான்கு நகரங்களில்[2] ₹115.92 கோடி செலவில் திட்டமிடப்பட்ட பன்னடுக்கு கார் பார்க்கிங் (MLCP) மற்றும் வணிக வளாகம் ஆகியவை ஆட்டோமேஷன் வசதி, லிஃப்ட், பிளம்பிங் பணிகள் போன்ற துணைப் பணிகள் முடிக்கப்படாததால் பயன்படுத்தப்படாமல் இருந்தன. உருவாக்கப்பட்ட MLCPகளை இலக்கு நேரத்தில் பயன்படுத்த முடியாததால் பார்க்கிங் வசதி மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து வருவாய் ஈட்டுதல் ஆகியவற்றின் நோக்கம் முழுமையாக அடையப்படவில்லை.

திருநெல்வேலி SCL, மின்–ரிக்ஷாக்கள் மற்றும் மின்–பேருந்துகள் போன்ற மின்–வாகனத் திட்டங்களை PPP முறையில் மேற்கொள்வதற்கான ₹8.25 கோடி திட்டத்திற்குப் பதிலாக, SCL நிதியைத் திருப்பி துப்புரவு இயந்திரம், ஜெட் ராடிங் இயந்திரம், ஹைட்ராலிக் பொருத்தப்பட்ட இயந்திரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான BOVகளை ₹16.50 கோடிக்கு வாங்கியது. இவை சீர்மிகு நகர்ப்புர இயக்கத்திற்கான மின்–வாகன வரையறையின் கீழ் வராது. மேலும், அவை மாநகராட்சி நிதியில் இருந்து செலவிடப்பட்டிருக்க வேண்டும். இதன் விளைவாக நோக்கங்கள் அடையாதது மட்டுமல்லாமல் திருநெல்வேலி SCLல் இருந்து திருநெல்வேலி மாநகராட்சிக்கு ₹16.50 கோடி SCP நிதி திருப்பிவிடப்பட்டது.

மதுரை மற்றும் திருநெல்வேலியில் ₹24.81 கோடி செலவில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC) முன்மொழியப்பட்டது. இருப்பினும், மதுரையில் நகராட்சி செயல்பாடுகளின் அனைத்து தொகுதிகளையும் ஒருங்கிணைப்பதற்கு பதிலாக, குறை தீர்க்கும் மற்றும் வாகன கண்காணிப்பு மட்டுமே ஒருங்கிணைக்கப்பட்டன. மேலும், ULB பங்கான ₹9.86 கோடியை SCL இன்னும் பெறவில்லை. திருநெல்வேலியில், கண்காணிப்பு கேமரா போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படவில்லை.

மதுரை SCL நிறுவனம் ₹2.62 கோடி செலவில் சுற்றுலா பிளாசாவை கட்டியது. இது பயன்படுத்தப்படாமலும், பராமரிக்கப்படாமலும் இருந்ததால் உருவாக்கப்பட்ட சொத்து மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படுத்தப்படாமல் போனது.

SCPகளில் எதிர்பார்க்கப்பட்ட முக்கிய உள் கட்டமைப்புகளை நிறைவேற்றுவதில், பணியை முடிப்பதில் தாமதம், உருவாக்கப்பட்ட சொத்துகளை பயன்படுத்தாமை மற்றும் பராமரிப்பின்மை போன்ற குறைபாடுகளும் கண்டறியப்பட்டன.

பல்வேறு அரசு விதிமுறைகளுக்கு இணங்க, மாசு கட்டுப்பாட்டு வாரியம், நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநரகம் (DTCP) மற்றும் பொதுப் பணி துறை போன்றவைகளின் அனுமதி/ஒப்புதல் தேவைப்படும் 93 பணிகள், அத்தகைய அனுமதி பெறாமல் தொடங்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட அனைத்து நகரங்களில், நகர அளவிலான ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்ட போதிலும், இரண்டு ஆண்டு

---

2 கோயம்புத்தூர், ஈரோடு, சேலம் மற்றும் திருப்பூர்.

தாமதத்திற்கு பிறகு கூட்டப்பட்டது. மேலும், பல்வேறு பங்குதாரர்களின் ஒத்துழைப்பிற்கான கூட்டம் குறிப்பிட்ட கால இடைவெளியில் கூட்டப்படவில்லை.

இவ்வாறு, செயலாக்கத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பணிகள் முடியும் தருவாயில் உள்ள போதிலும், தன்னிச்சையான இயக்கம், சொத்துக்கள் மற்றும் வருவாய் பகிர்வில்லா நிலையில் முடிதல், பணிகளை ஒருங்கிணைத்தல், PPP போன்ற மற்ற முறைகளில் செயல்படுத்த திறம்பட்ட ஆய்வு மேற்கொள்ளாமல், SCM மானியங்களில் பணிகளை நிறைவேற்றுதல் ஆகியவற்றில் ஒட்டுமொத்த குறைபாடு இருந்தது.

மேலும், பணிகள் ABD பகுதிக்கு வெளியே நிறைவேற்றப்பட்டன மற்றும் பான்-சிட்டியின் கீழ், தகுதியற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பணிகள் தாமதமாக முடிக்கப்பட்டன. முடிக்கப்பட்டவைகளும் பிறகு பயன்பாட்டில் இல்லாமல் வைக்கப்பட்டிருந்தன. சில பணிகள் தேவையான ஒப்புதல்கள் இல்லாமல் தொடங்கப்பட்டன. நகர அளவிலான ஆலோசனைக் குழு வழங்கிய பரிந்துரைகளும் பின்பற்றப்படவில்லை. மேற்கண்ட குறைபாடுகள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எட்டப்படாமைக்கு காரணமாக அமைந்தது.

### தணிக்கையின் பரிந்துரைகள்

தணிக்கையில் பின்வரும் பரிந்துரைகள் கொடுக்கப்பட்டுள்ளன:

### திட்டமிடல் மற்றும் நிதி மேலாண்மை:

- அதிகரித்து வரும் நகர்ப்புர மக்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பசுமை வளைய மேம்பாட்டு உத்தியை அரசு எதிர்காலத்தில் பரிசீலிக்க வேண்டும்.
- எதிர்காலத்தில், முன்மொழியப்பட்ட பணிகளைக் கைவிடுவது அல்லது திட்டமிடப்படாத பணிகளை செயல்படுத்துதல் மற்றும் நடப்பில் உள்ள பணிகளைக் குறித்தும் SCLகள் குடிமக்களுக்கு வெளிப்படையாக இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- குடிமக்களின் நலனுக்காக SCLகளின் செயல்பாடுகளை விரிவுபடுத்தும் வகையில் நிதி ரீதியாக அதனை நிலையானதாக்க, ULBகளின் பங்களிப்புகள், நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்குதல் போன்றவற்றை உறுதி செய்வதோடு, அதன் வருவாய் ஆதாரத்தை அதிகரிக்கும் பொருட்டு, ஒருங்கிணைப்பு/PPP முறையில் நிதி உதவி பெறுவதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

**செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு:**

- SCM வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பின்படி SPVல் செலுத்தப்பட்ட மூலதனத்தை பங்களிப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். SPVகளின் நிலைத்தன்மைக்காக அதன் சம பங்கு தளங்களை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், எதிர்கால திட்டங்களை செயல்படுத்துவதற்கும், O&M செலவை ஈடுகட்டுவதற்கும், சந்தை/நிதி நிறுவனங்களிலிருந்து நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு, SPVகளில் ULBகள் அதன் பங்குகளை அளித்து உதவுமாறு அரசு தீர்வு காண வேண்டும்.
- SPVகளின் செயல்பாடுகளை நிர்வகிக்க முழுநேர தலைமை செயல்பாட்டு அதிகாரிகளை அரசு நியமிக்க வேண்டும், இதனால் திட்டங்களை பயனுள்ள மற்றும் உரிய நேரத்தில் முடிக்க செயல்படுத்தும் நிறுவனமாக SPV செயல்பட முடியும்.
- அரசு, திட்ட வழிகாட்டுதல்களின்படி செயல்பாட்டு சுதந்திரத்துடன் கூடிய சிறந்த நடைமுறையைப் பின்பற்றுவதற்கு SPVகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும்.
- SPVன் நிதி நிலைத்தன்மைக்காக ULB மற்றும் SPVக்கு இடையே வருவாய் பகிர்வு நடைமுறையை அரசு உருவாக்க வேண்டும்.
- பணியை உரிய நேரத்தில் முடிக்கவும், அது சுற்றுச்சூழலின் மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதால் அதன் பயன்பாட்டை உறுதி செய்யவும், எதிர்காலத்தில் பணிகளைத் தொடங்குவதற்கு முன், தொடர்புடைய துறைகளில் இருந்து தேவையான சட்டப்பூர்வ ஒப்புதல்களைப் பெறுமாறு SCLகளை அரசு அறிவுறுத்த வேண்டும்.
- அரசு, நடப்பில் உள்ள பணிகளை விரைவாக முடிப்பதற்காக, காலவரம்பைத் தீவிரமாக பின்பற்றுமாறும் மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துக்களை திறம்பட பயன்படுத்துமாறும் SCLகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.
- TNTTAன் விதிகள் எதிர்காலத்தில் முற்றிலுமாகப் பின்பற்றப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- CLAF கூட்டங்களின் போது, போதுமான குடிமக்கள் பங்களிப்பையும், கொடுக்கப்படும் பரிந்துரைகளை செயல்படுத்துவதையும் உறுதி செய்யும் வகையில், CLAF கூட்டங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்துமாறு SCLகளுக்கு அரசு அறிவுறுத்த வேண்டும்.

# அத்தியாயம் I

# முன்னுரை

# அத்தியாயம் I

# முன்னுரை

## 1.1 திட்டம் பற்றி

நகரங்களின் மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், நகரங்களின் அடிப்படை, நிறுவன, சமூக மற்றும் பொருளாதார உள்கட்டமைப்பின் விரிவான வளர்ச்சியை அடைவதற்கும், சீர்மிகு நகரத் திட்டம் (Smart City Mission - SCM) 25 ஜூன் 2015 அன்று மத்திய அரசால் தொடங்கப்பட்டது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 63 விழுக்காடு மக்கள் நகரங்களில் வசிக்கின்றனர். இந்த திட்டம் ஐந்து ஆண்டு (2015-16 முதல் 2019-20 வரை) காலகட்டத்தில் 100 நகரங்களை உள்ளடக்குவதாக இருந்தது, மார்ச் 2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

### 1.1.1 சீர்மிகு நகரத் திட்டத்தின் நோக்கங்கள்

'சீர்மிகு தீர்வுகள்' மூலம் அடிப்படை உள்கட்டமைப்பு, சுத்தமானதும் நீடித்து நிலைத்திருக்கும் சூழலையும் மற்றும் உயர்ந்த தரத்துடன் கூடிய வாழ்க்கையைக் குடிமக்களுக்கு அளிக்கும் நகரங்களை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். சீர்மிகு நகரத்தின் அடிப்படை உள்கட்டமைப்பு கூறுகளில் போதுமான நீர் வழங்கல், உறுதி செய்யப்பட்ட மின்சாரம், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட சுகாதாரம், திறமையான நகர்ப்புற இயக்கம் மற்றும் பொது போக்குவரத்து, மலிவு விலையில் குறிப்பாக ஏழைகளுக்கான வீடுகள், வலுவான தகவல் தொழில்நுட்ப இணைப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல், நல்லாட்சி, குறிப்பாக மின்-ஆளுமை மற்றும் குடிமக்கள் பங்கேற்பு, நீடித்து நிலைத்திருக்கும் சுற்றுச்சூழல், சுகாதாரம், கல்வி, குடிமக்களின், குறிப்பாக பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு ஆகியவை அடங்கும்.

இந்த திட்டம், குறிப்பிட்ட பகுதிகளில் கவனம் செலுத்துவதன் மூலமும், மற்ற வளர்ச்சி அடையக்கூடிய நகரங்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக செயல்படும் ஒரு பிரதி மாதிரியை உருவாக்குவதன் மூலமும் அதன் நோக்கங்களை அடைவதை குறிக்கோளாகக் கொண்டது. இந்த திட்டத்தின் உத்திகளுக்கான கூறுகளில் பகுதி அடிப்படையிலான வளர்ச்சிக் (Area Based Development - ABD) கூறுகள் மற்றும் சீர்மிகு தீர்வுகளை நகரத்தின் பெரிய பகுதிகளை உள்ளடக்கி செயல்பட ஈடுபடுத்தும் ஒரு நகர முழுமைக்கான (பான்–சிட்டி) முன்முயற்சி ஆகியவை அடங்கும். ABD மற்றும் பான்–சிட்டியின் மாதிரிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

---

இவ்வறிக்கையில் உபயோகிக்கப்பட்ட சுருக்கச் சொற்றொடர்களின் திரட்டு 110ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

### (i) பகுதி அடிப்படையிலான வளர்ச்சி

**மறுசீரமைப்பு**: இதில், சீர்மிகு நகர நோக்கங்களை அடைய, தற்போதுள்ள நகர்ப்புறத்தில் 500 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் திட்டமிடலை அறிமுகப்படுத்துவதுடன், இன்னும் பிற நோக்கங்களையும் சேர்த்து தற்போதுள்ள பகுதியை மிகவும் வாழக்கூடியதாக மாற்றுவது அடங்கும். மறுசீரமைப்பில், பகுதியானது, குடிமக்களுடன் கலந்தாலோசித்து அந்தந்த நகரத்தால் அடையாளம் காணப்படும்.

**மறுமேம்பாடு**: இதில் தற்போதுள்ள நகர்ப்புற சூழலை மாற்றுவதும், பலதரப்பட்ட நிலத்தின் பயன்பாடு மற்றும் அதிகரித்த மக்கள் நெருக்கத்தைப் பயன்படுத்தி மேம்பட்ட உள்கட்டமைப்புடன் புதிய நகர அமைப்பை உருவாக்குவதும் அடங்கும். குடிமக்களுடன் கலந்தாலோசித்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் (Urban Local Bodies - ULBகள்) அடையாளம் காணப்பட்ட 50 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் மறுமேம்பாடு எதிர்நோக்கப்பட்டது.

**பசுமை வளையம்**: இதில் மலிவு விலையில், குறிப்பாக ஏழைகளுக்கு வீடு வழங்கும் பொருட்டு, புதுமையான திட்டமிடல், திட்ட நிதி மற்றும் திட்டம் செயல்படுத்துவதற்கான கருவிகளை (எ.கா. நில இணைப்பு/நில மறுசீரமைப்பு) பயன்படுத்தி, ஏற்கனவே காலியாக இருந்த பகுதியில் (250 ஏக்கருக்கும் அதிகமான), பெரும்பாலான சீர்மிகு தீர்வுகளை அறிமுகப்படுத்துவது அடங்கும். இதன் மூலம், அதிகரித்து வரும் மக்கள்தொகை வளர்ச்சியின் தேவைகளை பூர்த்தி செய்வதை இந்த திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

### (ii) பான்-சிட்டி மேம்பாடு

இதில், நகர அளவிலான தற்போதுள்ள உள்கட்டமைப்பில், உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்த தொழில்நுட்பம், தகவல் மற்றும் தரவுகளின் பயன்பாட்டினை உள்ளடக்கிய தேர்ந்தெடுக்கப்பட்ட சீர்மிகு தீர்வுகளைப் பயன்படுத்துவது அடங்கும்.

ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட நகரத்தின் சீர்மிகு நகர திட்டத்தின் முன்மொழிவு, மறுசீரமைப்பு அல்லது மறுமேம்பாடு அல்லது பசுமை வளையம் மேம்பாடு மாதிரி அல்லது சீர்மிகு தீர்வுகளுடன் கூடிய பான்-சிட்டி அம்சத்தையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

### 1.1.2 தேர்ந்தெடுக்கும் முறை

இந்த திட்டம், சமமான அளவுகோல்களின்[1] அடிப்படையில் ஒவ்வொரு மாநிலமும் குறைந்தது ஒரு சீர்மிகு நகரத்தைக் கொண்டவாறு, 100 நகரங்களை உள்ளடக்கியது. தொலைநோக்கு பார்வை, நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான திட்டம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் அதன் சீர்மிகு பயன்பாடுகளின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் விளைவுகளைக் கொண்ட ஒரு சீர்மிகு நகரத் திட்ட முன்மொழிவு (Smart City Proposal - SCP), ஆலோசனை நிறுவனங்களை பணியமர்த்தியோ[2] அல்லது ஆதரவு நிறுவனங்களை ஈடுபடுத்தியோ,[3] தொழில்நுட்ப உதவி ஆதரவு பெற்று மாநிலங்கள்/ULBகளால் தயாரிக்கப்பட வேண்டும். மேலும், SCPகளைத் தயாரிக்கும் போது, மாநிலங்கள்/ULBகள், விரிவான வளர்ச்சி அடைய முடியும் என்பதால் மத்திய/மாநில அரசின் பல துறைசார் திட்டங்களை[4] சீர்மிகு நகர திட்டத்துடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த திட்டம் இரண்டு கட்ட தேர்வு முறையைக் கொண்டது. நிலை-1: மாநிலத்திற்குள் மற்றும் நிலை-2: நகர சவால் - போட்டி மற்றும் கூட்டுறவு கூட்டாட்சி என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டவற்றை உள்ளடக்கியது. SCM வழிகாட்டுதல்களின் பிரிவு 9 சீர்மிகு நகரங்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை விவரிக்கிறது. இது **விளக்கப்படம் 1.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது:

1. மாநிலம்/யூனியன் பிரதேசத்தின் நகர்ப்புற மக்கள்தொகைக்கும், மாநிலம்/யூனியன் பிரதேசத்தில் உள்ள சட்டப்பூர்வ நகரங்களின் எண்ணிக்கைக்கும் சமமான மதிப்பு (50:50) வழங்கும் ஒரு விதிமுறைப் பயன்படுத்தப்பட்டது.
2. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற நல அமைச்சகம் ஆலோசனை நிறுவனங்களின் குழுவை தொழில்நுட்ப ரீதியாக தகுதிப்பெறச் செய்தது, மேலும் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் இந்தக் குழுவைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றன. மாநில நிதி விதிகளின்படி வெளிப்படையான மற்றும் நியாயமான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் குழுவிற்கு வெளியே ஒரு ஆலோசனை நிறுவனத்தை நியமிக்கும் வாய்ப்பும் மாநிலங்களுக்கு இருந்தது.
3. உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், அமெரிக்க வர்த்தக மற்றும் மேம்பாட்டு நிறுவனம், பிரெஞ்சு வளர்ச்சி நிறுவனம் (French Development Agency) போன்ற இருதரப்பு மற்றும் பலதரப்பு நிறுவனங்கள் உட்பட பல வெளிநாடுகள், தொழில்நுட்ப உதவி ஆதரவை வழங்க முன்வந்தன.
4. அடல் புத்துணர்ச்சி மற்றும் நகர்ப்புற மாற்றத்திற்கான திட்டம் (AMRUT), தூய்மை இந்தியா திட்டம் (SBM), தேசிய பாரம்பரிய நகர மேம்பாடு மற்றும் பெருக்குதல் திட்டம் (HRIDAY), டிஜிட்டல் இந்தியா, திறன் மேம்பாடு, அனைவருக்கும் வீட்டுவசதி போன்றவை.

**விளக்கப்படம் 1.1: தேர்ந்தெடுக்கும் முறை**




நான்கு சுற்றுத் தேர்வில், தமிழ்நாட்டிலிருந்து பதினொரு நகரங்கள்[5] தேர்ந்தெடுக்கப்பட்டன.

## 1.2 திட்ட அமைப்பு (நிருவாக அமைப்பு)

இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் ஈடுபட்ட நிருவாக இயந்திரத்தின் மூன்று அடுக்குகள் **விளக்கப்படம் 1.2ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

[5] சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் வேலூர்.

விளக்கப்படம் 1.2: திட்டத்தை செயல்படுத்துவதில் நிருவாக இயந்திரம்




* TUFIDCO - தமிழ்நாடு நகரப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்.

## 1.3 தணிக்கை நோக்கங்கள்

செயலாக்கத் தணிக்கையின் நோக்கங்களானது:

- சீர்மிகு நகரத் திட்ட முன்மொழிவு, தொலைநோக்கு பார்வை, நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான திட்டம் மற்றும் திட்ட நோக்கங்களின்படி எதிர்பார்க்கப்படும் விளைவுகள் ஆகியவற்றைக் கொண்டிருந்ததா,
- மாநில அரசால் நகரங்கள்/SPV-களுக்கு விடுவிக்கப்பட்ட நிதியும், நகரங்கள்/SPV-களால் திரட்டப்பட்ட மீதமுள்ள நிதியும் திறமையானதாகவும், திட்டத்தின் நோக்கங்களுக்கு இசைவாகவும் இருந்ததா,
- சீர்மிகு நகரத் திட்டத்தின் நோக்கங்களை அடையும் பொருட்டு திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட்டனவா,
- செயல்படுத்தலின் மீது திறமையான மற்றும் பயனுள்ள கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்கு உள் கட்டுப்பாட்டு செயல்முறைகள் போதுமானதாக இருந்ததா என்பதனை மதிப்பிடுவதாகும்.

## 1.4 தணிக்கை அளவுகோல்கள்

செயலாக்க தணிக்கைக்கான தணிக்கை அளவுகோல்கள் பின்வரும் ஆதாரங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன:

- MoHUAன் சீர்மிகு நகர வழிகாட்டுதல்கள்
- SCM வழிகாட்டுதல்களுக்கான ஆலோசனைகள்
- நிறுவனங்கள் சட்டம், 2013

- சீர்மிகு நகர முன்மொழிவுகள், வாரியம் மற்றும் சபையின் தீர்மானங்கள்
- தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் ஒப்பந்தப்புள்ளி விதிகள், 2000.
- நகராட்சி பொறியியல் கையேடு
- பொதுப்பணித் துறையின் குறியீடு
- குழுக்களுடைய கூட்டங்களின் குறிப்புகள்
- நிருவாக/தொழில்நுட்ப ஒப்புதல்கள்/செயல்முறை ஆணைகள்
- தொடர்புடைய அரசு உத்தரவுகள்/சுற்றறிக்கைகள்/ அறிவுறுத்தல்கள்
- விரிவான திட்ட அறிக்கைகள் (DPRகள்), மதிப்பீடுகள்
- விவரக்குறிப்புகள், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை

## 1.5 தணிக்கையின் வரம்பு, ஆய்வு முறை மற்றும் தெரிவு செய்தல்

தணிக்கை காலம் 2015-16 முதல் 2022-23 வரை எட்டு ஆண்டுகள் ஆகும். செயலாக்கத் தணிக்கை (Performance Audit - PA) செப்டம்பர் 2022 முதல் மே 2023 வரை நடத்தப்பட்டது மற்றும் மார்ச் 2024 வரைக்கான அறிக்கையின் புதுப்பித்தல் ஜூலை 2024ல் செய்யப்பட்டது. 05 செப்டம்பர் 2022 அன்று ஒரு தொடக்கக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் செயலாக்கத் தணிக்கையின் நோக்கங்கள், அளவுகோல்கள் மற்றும் ஆய்வு முறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், சிறப்பு நோக்க நிறுவனங்கள் மற்றும் தலைமை, திட்ட இயக்குநரகமான TUFIDCO-ன் நிருவாக அதிகாரிகள் ஆகியோருக்கு விளக்கப்பட்டன. இச்செயலாக்கத் தணிக்கை மேற்கொள்ளும் போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மற்றும் TUFIDCO ஆகியவற்றின் ஆவணங்கள் தணிக்கை ஆய்வு செய்யப்பட்டதுடன், திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளில் தேவைப்படும் இடங்களில் நேரடி கூட்டு தேர்ந்தாய்வு நடத்தப்பட்டது.

மே 2022 நிலவரப்படி, ₹2,311.78 கோடி மதிப்புள்ள 194 பணிகள் நிறைவடைந்தன. மீதமுள்ளவை பல்வேறு கட்டங்களில் நிறைவடையும் நிலையில் உள்ளன (மே 2022). IDEA தொகுப்பைப் பயன்படுத்தி சீரற்ற தெரிவு செய்யும் முறையின் அடிப்படையில், தமிழ்நாட்டின் 11 நகரங்களுள் ஏழு[6] நகரங்களில் மே 2022 நிலவரப்படி, நிறைவடைந்த அனைத்து 194 பணிகள் மற்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் 44 பணிகள்

[6] சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம், திருநெல்வேலி மற்றும் திருப்பூர்.

(நடந்து கொண்டிருக்கும் 183 பணிகளில் 24 விழுக்காடு) ஆகியவை விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

மார்ச் 31, 2024 நிலவரப்படி, தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களில், ₹5,230.41 கோடி மதிப்புள்ள 387 பணிகள் நிறைவடைந்துள்ளன மற்றும் மீதமுள்ளவை (27 பணிகள்) பல்வேறு கட்டங்களில் நிறைவடையும் நிலையில் உள்ளன. இவை **அட்டவணை 1.1ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1.1: தேர்வு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்களால் செயல்படுத்தப்படும் பணிகள்**

| சீர்மிகு நகரத்தின் பெயர் | செயல்படுத்தப் பட்ட மொத்த பணிகள் | செயல்படுத்தப் பட்ட ABD பணிகள் | ABDக்கு வெளியே செயல்படுத்தப் பட்ட பணிகள் | செயல்படுத்தப் பட்ட பான்–சிட்டி பணிகள் |
|---|---|---|---|---|
| சென்னை | 49 | 31 | 13 | 5 |
| கோயம்புத்தூர் | 54 | 39 | 2 | 13 |
| ஈரோடு | 55 | 33 | 4 | 18 |
| மதுரை | 44 | 24 | 19 | 1 |
| சேலம் | 103 | 62 | 23 | 18 |
| திருநெல்வேலி | 81 | 70 | 4 | 7 |
| திருப்பூர் | 28 | 16 | 5 | 7 |
| **மொத்தம்** | **414** | **275** | **70** | **69** |

(ஆதாரம்: சீர்மிகு நகரங்களால் வழங்கப்பட்ட தகவல்கள்)

தணிக்கை முடிவுகளைப் பற்றி விவாதிக்க, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA&WS) துறையின் கூடுதல் தலைமைச் செயலாளருடன் 06 ஜூன் 2023 அன்று ஒரு நிறைவு கூட்டம் நடைபெற்றது. நிறைவு கூட்டத்தின் போது மற்றும் மே 2025ல் திருத்தப்பட்ட வரைவு அறிக்கைக்கும் அளிக்கப்பட்ட பதில்கள் அறிக்கையில் பொருத்தமாக இணைக்கப்பட்டுள்ளன.

## 1.6 ஏற்பு

செயலாக்கத் தணிக்கையை நடத்துவதற்கு MA&WS துறை, அனைத்து சீர்மிகு நகரங்களின் நிறுவனங்கள் (SCLகள்), TUFIDCO, ULBகள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் உதவிக்குத் தணிக்கை ஏற்பு அளிக்கிறது.

# அத்தியாயம் II

# திட்டமிடல்
# மற்றும்
# நிதி மேலாண்மை

# அத்தியாயம் II

## திட்டமிடல் மற்றும் நிதி மேலாண்மை

**தெரிவு செய்யப்பட்ட ஏழு சீர்மிகு நகரத் திட்ட முன்மொழிவுகளிலும், பசுமை வளைய மேம்பாட்டின் கூறுகள் சேர்க்கப்படாததின் விளைவாக பெருகும் மக்கள் தொகையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்தன. முதல் நிகழ்வில் திண்டுக்கல் SCP தயாரிப்பில் SCM வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததால் மாநிலத்தில் மற்றொரு சீர்மிகு நகரத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டு இருந்தது. மேலும், தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களின் முன்மொழிவில் ₹1,602.20 கோடி (திட்டமிடப்பட்ட பணிகளில் 15.97 விழுக்காடு) மதிப்புள்ள 52 பணிகள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் செயல்படுத்தப்படவில்லை. மாற்றாக, ₹623.86 கோடி மதிப்புள்ள 44 பணிகள் முதலில் திட்டமிடப்படாமல் இருந்த போதிலும் செயல்படுத்தப்பட்டன. மேலும், ₹655.43 கோடி செலவில் 70 பணிகள் ABD பகுதிக்கு வெளியே நிறைவேற்றப்பட்டன.**

**தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களுள் ஐந்து நகரங்கள், ஒவ்வொரு நகரத்திற்கும் இருப்பில் இருந்த மொத்த SCM மானியத்தில் 96.50 விழுக்காட்டிற்கும் அதிகமான பணிகளைத் திட்டமிட்டிருந்தன. திட்ட இயக்குநரகத்திற்கு தமிழ்நாடு அரசு நிதியை விடுவிப்பதில் இரண்டு முதல் 714 நாட்கள் வரையும் TUFIDCOல் இருந்து அந்தந்த SCLகளுக்கு நிதியை விடுவிப்பதில் 15 முதல் 960 நாட்கள் வரையும் தாமதம் ஏற்பட்டது. SCPல் குடிநீர் விநியோகம், கழிவு நீருக்கு ஒருங்கிணைப்பு, பொது மற்றும் தனியார் பங்களிப்பு (PPP) மாதிரிகள் திட்டமிடப்பட்ட போதிலும், மதிப்புமிக்க நிதி ஆதாரங்களின் பயன்பாட்டினை மறுக்கும் விதமாக SCM மானியங்கள் அத்தகைய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வேறு துறைகளுக்கு மாற்றப்பட்டன. தகுதியற்ற திட்டத்திற்காகவும் ULBன் வருவாய் செலவினங்களை ஈடுசெய்வதற்காகவும் நிதி திசைதிருப்பப்பட்டது தணிக்கையில் கண்டறியப்பட்டது.**

### 2.1 திட்டமிடல்

சீர்மிகு நகரங்களைத் தேர்ந்தெடுப்பது இரண்டு கட்டப் போட்டிகளை உள்ளடக்கியது. முதலாவது மாநிலத்திற்குள்ளேயான நகரங்களின் தேர்வு மற்றும் இரண்டாவது நிபுணர்கள் குழுவின் மதிப்பீட்டின் அடிப்படையில் தேசிய அளவிலான தேர்வு ஆகும். போட்டியின் முதல் கட்டத்தில், திறன் வாய்ந்த நகரங்கள், MoUD வழிகாட்டுதல்களில்[1] குறிப்பிடப்பட்டுள்ள

[1] MoUD வழிகாட்டுதலின் இணைப்பு 3 முதல் பிரிவு 9.1.1.

நிபந்தனைகள்[2] மற்றும் மதிப்பெண் அளவுகோல்களின்[3] அடிப்படையில் போட்டியிடுகின்றன. பெறப்பட்ட அதிகபட்ச மதிப்பெண்களின் அடிப்படையில் திறன் வாய்ந்த நகரங்கள் தேர்வு செய்யப்பட்டு திட்ட இயக்குநரகத்தால் ஆராயப்பட்டு, மாநிலத்தால் MoUDக்கு அனுப்பப்படும். இரண்டாவது கட்டப் போட்டியில் பங்கேற்பதற்கான 100 சீர்மிகு நகரங்களின் பட்டியலை MoUD அறிவிக்கிறது.

மாநிலங்களுக்குள்ளேயான முதலாவது கட்டப் போட்டியில் பின்வரும் முரண்பாடுகள் காணப்பட்டன:

### 2.1.1 சீர்மிகு நகரத் திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்

ஒவ்வொரு திறன் வாய்ந்த சீர்மிகு நகரமும் அதன் தொலைநோக்குப் பார்வை, நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான திட்டம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சீர்மிகு பயன்பாடுகளின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் முடிவுகளைக் கொண்ட சீர்மிகு நகர முன்மொழிவுகளைத் (Smart City Proposals - SCPs) தயாரிக்கின்றன. வழிகாட்டுதல்களின் பிரிவு 5ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளபடி, பகுதி அடிப்படையிலான மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் பான்-சிட்டி முன்முயற்சிகளைக் கொண்ட உத்திசார் திட்டமிடல் செயல்முறையின் கொள்கைகளைப் பயன்படுத்தி SCP தயாரிக்கப்படுகிறது. இது ஒரு மறுசீரமைப்பு அல்லது புதுப்பித்தல் அல்லது பசுமை வளைய மேம்பாட்டு மாதிரி அல்லது அவைகளின் கலவையுடன் சீர்மிகு தீர்வு(கள்) கொண்ட பான்–சிட்டி அம்சத்தை உள்ளடக்கியது.

விரிவடைந்து வரும் மக்கள்தொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நகரங்களைச் சுற்றி பசுமை வளைய மேம்பாடுகள் அவசியம் என்று பிரிவு 5.1.3 எதிர்நோக்குகிறது. மறுசீரமைப்பு மற்றும் புதுப்பித்தல் போலல்லாமல், பசுமை வளைய மேம்பாடுகள், ULBன் வரம்புகளுக்குள் அல்லது உள்ளூர் நகர்ப்புற மேம்பாட்டு ஆணையத்தின் வரம்புகளுக்குள் அமைந்திருக்கலாம்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஏழு தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரத் திட்டங்களிலும், அதன் SCPல் முன்மொழியப்பட்ட பணிகளில் பசுமை வளைய மேம்பாட்டின் கூறுகள் சேர்க்கப்படவில்லை என்பது தணிக்கையில் அறியப்பட்டது. ABD பகுதியை மறுசீரமைக்க மற்றும்/அல்லது புதுப்பிக்க முன்மொழியப்பட்டது. எந்தவொரு சீர்மிகு நகரத்திலும் பசுமை வளைய மேம்பாட்டை ஆராய்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடங்கப்படவில்லை.

நகராட்சி அதிகார வரம்பிற்கு அருகில் பெரிய வளர்ச்சியடையாத நிலப்பகுதிகள் இல்லாமையும்/நிலம் கையகப்படுத்துவதில் உள்ள

[2] (i) நகரத்தை சீர்மிக்கதாக ஆக்க மாநில அரசு பொறுப்பேற்பு, (ii) அரசு சார்பு அமைப்புகள், ULB, நகர்ப்புற மேம்பாட்டு அதிகார அமைப்புகள் ஆகியவற்றைக் கொண்டு துறைகளுக்கு இடையேயான சிறப்புப் பணிப் பிரிவு அமைத்தல் (iii) தேர்ந்தெடுக்கப்பட்ட நகர சபையின் தீர்மானம் மற்றும் (iv) நகர மேம்பாட்டு முன்னுரிமைகள் குறித்து குடியிருப்பாளர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகள்.

[3] (i) தற்போதுள்ள சேவை நிலைகள், (ii) நிறுவன அமைப்புகள்/திறன்கள், (iii) சுயநிதி மற்றும் (iv) கடந்த கால சாதனை மற்றும் சீர்திருத்தங்கள்.

சவால்களும் ஆகியவையே பசுமை வளைய மேம்பாட்டைத் தொடங்காததற்கான காரணங்கள் என்றும், இடஞ்சார்ந்த, ஒழுங்குமுறை மற்றும் சமூக-பொருளாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, மறுசீரமைப்பு-புதுப்பித்தல் கலப்பின மாதிரிகள் சாத்தியமானதாகக் கருதப்பட்டது என்றும் அரசு பதிலளித்தது (மே 2025).

அதிகரித்து வரும் நகரமயமாக்கல், நகர்ப்புற மக்கள் தொகை மற்றும் சுற்றுச்சூழல் மீது அதன் தாக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களுடன் பிற வசதிகளும் கூடிய வீட்டுவசதி சமூகங்களை பசுமை வளைய டவுன்ஷிப்பாக நிர்மாணித்தல் போன்ற பசுமை வளைய உத்திகளை செயல்படுத்துவது சீர்மிகு நகரங்களை மேம்படுத்துவதற்கான சிறந்த தீர்வாக இருந்திருக்கும் என்பதால், இப்பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

**பரிந்துரை 1: அதிகரித்து வரும் நகர்ப்புற மக்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பசுமை வளைய மேம்பாட்டு உத்தியை அரசு எதிர்காலத்தில் பரிசீலிக்க வேண்டும்.**

### 2.1.2 திண்டுக்கல் நகரத்திற்கான SCP தயாரிப்பில் குறைபாடு – நகரத்தை சீர்மிகு நகரமாக மேம்படுத்தும் வாய்ப்பின் இழப்பு

மத்திய அரசு, உள்கட்டமைப்பு மற்றும் சீர்மிகு பயன்பாடுகளின் தரத்தை உயர்த்துவதன் மூலம் 'சீர்மிகு நகரங்களாக' மேம்படுத்த நாடு முழுவதும் 100 நகரங்களை[4] தேர்ந்தெடுத்திருந்தது. அதன்படி, திண்டுக்கல் உட்பட தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட திறன் வாய்ந்த சீர்மிகு நகரங்களின் எண்ணிக்கை 12ஆக இருந்தது.

தமிழ்நாடு அரசால் டிசம்பர் 2015ல் அனுப்பப்பட்ட திண்டுக்கல்லின் SCP தொடர்பாக பின்வருவனவற்றை மத்திய அரசு கண்டறிந்தது (ஜூலை 2017):

- சீர்மிகு நகரத்திற்காக அருகில் உள்ள 28 பகுதிகளை உள்ளடக்கிய 8.51 சதுர கி.மீ. பரப்பளவானது, உள்ளூர் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதன் வாயிலாக, தமிழ்நாட்டின் மிகவும் வாழக்கூடிய நகரங்களாக மாற்றும் உத்தியுடனான தொடர்பினை இழக்கிறது.
- வருடம் முழுவதற்குமான நீர் ஆதாரம் இல்லாத அபாயம், அடுத்தடுத்த சீர்மிகு நகரத் திட்டங்கள் மூலம் குறைக்கப்பட வேண்டிய முக்கிய ஆபத்தாக முன்னிலைப்படுத்தப்பட்டது.
- முன்மொழிவு, 28 பகுதிகளுக்குள் உள்ள உள்கட்டமைப்பு இடைவெளிகளை நிவர்த்தி செய்ய சீர்மிகு நகரத் திட்ட நிதியைப் பயன்படுத்துவதில் முடிந்தது.

[4] நகர்ப்புற மக்கள் தொகை மற்றும் சட்டப்பூர்வ நகரங்களின் சமமான அளவுகோலின் அடிப்படையில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கிடையில் 100 நகரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- ஒப்புதல்கள்/தீர்மானங்கள்/இணைப்பு ஏதும் இல்லை.

மேலே குறிப்பிட்டவை, திண்டுக்கல்லுக்கான முதல் முன்மொழிவு, SCM வழிகாட்டுதல்களின்படி, ABDல் சேர்க்கப்படக்கூடிய பிரிவு வாரியான பணிகளின் பட்டியலுடன், பான்-சிட்டி கையாள்வதையும் கொள்ளும் விதமாக ஒரு கட்டமைக்கப்பட்ட முறையில் முன்வைக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது.

நகர்ப்புற பொறியியல், வாகனங்களின் போக்குவரத்து, நகர்ப்புற திட்டமிடல், பொது தனியார் பங்களிப்பு (PPP), குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் மேலாண்மை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய திருத்தப்பட்ட முன்மொழிவு அனுப்பப்பட்ட போதிலும் (நவம்பர் 2017), மத்திய அரசு அந்த முன்மொழிவை பரிசீலிக்கவில்லை. இதனால், சீர்மிகு நகரத் திட்டத்தை செயல்படுத்த திண்டுக்கல் நகரம் தேர்ந்தெடுக்கப்படவில்லை. மேலும், முதல் நிகழ்வில் SCP தயாரிப்பதில் SCM வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததின் விளைவாக மாநிலத்தில் மற்றொரு சீர்மிகு நகரத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது.

அரசு தனது பதிலில் (மே 2025) SCP தயாரிப்பதின் செயல்முறை பற்றி விளக்கியது. இருப்பினும், ஆரம்ப கட்டத்திலேயே (முதல் முன்மொழிவு) SCP தயாரிப்பில் SCM வழிகாட்டுதல்களைப் பின்பற்றாதது குறித்து பதில் அளிக்கவில்லை.

### 2.1.3 SCPல் முன்மொழியப்பட்ட பணிகளை செயல்படுத்தாமை

சீர்மிகு நகர நிறுவனங்கள், ABD பகுதி மற்றும் பான்-சிட்டி தீர்வுக்கான முக்கிய கூறுகளைக் கொண்டு SCP தயாரிப்பதற்காக திட்ட மேலாண்மை ஆலோசகரை (Project Management Consultant - PMC) ஈடுபடுத்தின. ஆரம்பத்தில் SCPகள் (தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்கள்), மானியங்கள், PPP, ஒருங்கிணைப்பு மற்றும் ULBகளின் சொந்த/கடனாகப் பெற்ற நிதிகள் ஆகியவை மூலம் ₹10,035.58 கோடி மதிப்புள்ள 243 பணிகளைச் செயல்படுத்த முன்மொழிந்தன. MoHUA ஆலோசனை (செப்டம்பர் 2018 மற்றும் ஜனவரி 2019ல் வெளியிடப்பட்ட எண் 13) பணிகளைக் கைவிடுவது/நீக்குவது அவசர சூழ்நிலைகளில் மட்டுமே அனுமதிக்கப்படும் என்றும், நகரங்கள் பணியை மேற்கொள்ளாததற்கு தெளிவான காரணத்தைத் தெரிவிக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தது.

மொத்தம் 52 பணிகள், ₹1,602.20 கோடி செலவில் செயல்படுத்தப்படுவதற்குப் பரிசீலிக்கப்படவில்லை, இது திட்டமிடப்பட்ட பணிகளில் 15.97 விழுக்காடு ஆகும்.

SCPல் முன்மொழியப்பட்டு செயல்படுத்தப்படாத பணிகள் குறித்த நகர வாரியான விவரங்கள் **அட்டவணை 2.1** மற்றும் **இணைப்பு 2.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.1: SCPல் முன்மொழியப்பட்டு செயல்படுத்தபடாத பணிகள்**

**(₹ கோடியில்)**

| வ. எண் | நகரத்தின் பெயர் | திட்டமிடப்பட்ட மொத்த பணிகளின் எண்ணிக்கை | மதிப்பு | செயல்படுத்தப்படாத பணிகள் | மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 48 | 1,366.25 | 8 | 279.03 |
| 2 | கோயம்புத்தூர் | 45 | 1,570.28 | 9 | 249.92 |
| 3 | ஈரோடு | 21 | 1,543.52 | 1 | 250.00 |
| 4 | மதுரை | 22 | 1,342.00 | 10 | 236.55 |
| 5 | சேலம் | 27 | 1,740.00 | 0 | 0.00 |
| 6 | திருநெல்வேலி | 34 | 1,217.80 | 14 | 389.95 |
| 7 | திருப்பூர் | 46 | 1,255.73 | 10 | 196.75 |
| | **மொத்தம்** | **243** | **10,035.58** | **52** | **1,602.20** |

(ஆதாரம்: தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்களால் வழங்கப்பட்ட விவரங்கள்)

- சேலம் SCL மட்டுமே முன்மொழியப்பட்ட அனைத்து பணிகளையும் செயல்படுத்தியுள்ளது.
- பணிகளைப் பரிசீலிக்காததற்கு எந்த குறிப்பிட்ட காரணமும் பதிவு செய்யப்படவில்லை.
- திருநெல்வேலி SCL ₹1,217.80 கோடி மதிப்புள்ள 34 பணிகளை முன்மொழிந்தது. ஆனால், ₹389.95 கோடி மதிப்புள்ள 14 பணிகளை மேற்கொள்ளவில்லை. இது தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களில் மிக அதிகமாக 32.02 விழுக்காடாக இருந்தது.
- மேற்கொள்ளப்படாத பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மொத்தம் ₹1,602.20 கோடியாக இருந்தது. இதில் ₹623.86 கோடி SCPல் (திட்டமிடப்படாத பணிகள்) சேர்க்கப்படாத பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட நகரங்களில் செயல்படுத்தப்படாத சில முக்கிய பணிகள் **அட்டவணை 2.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.2: தெரிவு செய்யப்பட்ட நகரங்களில் செயல்படுத்தப்படாத முக்கியப் பணிகள்**

| வ. எண் | நகரத்தின் பெயர் | செயல்படுத்தப்படாத பணிகள் | தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | சென்னை | தெரு விளக்குகள் கண்காணிப்பு அமைப்பு | 248.47 |
| 2 | கோயம்புத்தூர் | வடிகால் மேம்பாடு | 120.34 |
| 3 | ஈரோடு | மின்-சுகாதாரம் | 250.00 |
| 4 | மதுரை | சூரிய ஆற்றல், சூரியக் கூரை | 80.00 |
| 5 | திருநெல்வேலி | ஸ்மார்ட் ஸ்கை வாக் மற்றும் நிலத்தடி மின்சார குழாய் | 159.00 |
| 6 | திருப்பூர் | ஒளியிழை வலையமைப்பு (ஃபைபர் ஆப்டிக்), நகர தொடர்பு மற்றும் சீர்மிகு பள்ளி | 54.00 |

(ஆதாரம்: தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்களால் வழங்கப்பட்ட விவரங்கள்)

SCPன்படி பணிகளை செயல்படுத்தாமை, வழிகாட்டுதல்களை மீறுதல் மற்றும் ABD பகுதிகளில் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியின்மை தவிர குடிமக்களின் கலந்துரையாடலுக்கு பின் எடுக்கப்பட்ட மேற்கண்ட பணிகளால் எழும் பலன்களை மறுத்ததற்கு சமம் ஆகும்.

பொதுவாக முடிவுகள் SCL வாரியங்களின் வழிகாட்டுதல்களின்படி எடுக்கப்பட்டதாகவும், சில பணிகள் மாற்றங்களுடன் பிற திட்டங்கள் மூலமாகவோ அல்லது அந்தந்த மாநகராட்சிகளால் அவற்றின் நிதியிலிருந்தோ செயல்படுத்தப்பட்டதாகவும் அரசு பதிலளித்தது (மே 2025).

நகரத் தேவை மற்றும் குடிமக்கள்/பங்குதாரர்களுடனான கலந்துரையாடலின் அடிப்படையில் பணிகள் முன்மொழியப்பட்டுள்ளதால், இந்தப் பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. பணிகள் செயல்படுத்தப்படாமை, திட்டமிடல் நிலையின் போதே மதிப்பீடு செய்யாததை வெளிப்படுத்துகிறது.

### 2.1.4 திட்டமிடப்படாத பணிகளை நிறைவேற்றுதல்

திட்ட மேலாண்மை மற்றும் கண்காணிப்பு தொடர்பாக வெளியிடப்பட்ட ஆலோசனை[5], புதிய பணிகளைச் சேர்க்க அனுமதிப்பதற்காக **அட்டவணை 2.3ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி நிபந்தனைகளை விதித்தது.

[5] MoHUAஆல் 08/09/2018 மற்றும் 21/01/2019 அன்று வெளியிடப்பட்ட ஆலோசனை எண். 13.

**அட்டவணை 2.3: பணிகளை அனுமதித்ததற்கான நிபந்தனைகள்**

| வகை | அனுமதிப்பதற்காக |
|---|---|
| SCPல் புதிய பணிகளைச் சேர்த்தல். | SCM வழிகாட்டுதல்கள் மற்றும்/அல்லது அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்கள் மற்றும் சரியான நிதி இருப்புக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது. |
| ABDக்கு வெளியே சேர்த்தல். | வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டாலன்றி அனுமதிக்கப்படாது. |
| பான்-சிட்டி முன்முயற்சியாக ICT அல்லாத திட்டங்கள். | அனுமதிக்கப்படாது. |
| பகுதியளவு ABDக்கு வெளியே. | அ. பணியின் கணிசமான பகுதி ABD நிலப்பரப்பு பகுதிக்குள் இருக்க வேண்டும். இதுபோன்ற நேர்வுகளில், ABDக்குள் உள்ள பணியின் பகுதி விகிதாசார செலவை SCMன் கீழ் பரிசீலிக்கலாம்.<br>ஆ. பணியின் நோக்கம் முதல் மைல்/கடைசி மைல் இணைப்புக்கானது என்ற நிபந்தனையில் அனுமதிக்கப்படுகிறது. |

(ஆதாரம்: MoHUAஆல் வழங்கப்பட்ட ஆலோசனை)

இணைப்பு 1ல் உள்ள பத்தி 7ல் உள்ள திட்ட வழிகாட்டுதல்கள், திட்டத்தில் குடிமக்களின் பங்கேற்பு மிகவும் முக்கியமானதாக குறிப்பிடப்படுகிறது. இந்த முன்மொழிவுகள் தொடக்கத்திலிருந்தே குடிமக்கள் சார்ந்தவை மற்றும் குடிமக்கள் ஆலோசனைகள் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இருப்பினும், முதல் முன்மொழிவில் சேர்க்கப்படாத போதிலும், ₹623.86 கோடி மதிப்புள்ள 44 பணிகள் நிறைவேற்றப்பட்டது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

நகர வாரியாக, செயல்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட திட்டமிடப்படாத பணிகளின் விவரங்கள் (மார்ச் 2024) **அட்டவணை 2.4** மற்றும் **இணைப்பு 2.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.4: திட்டமிடப்படாமல் நிறைவேற்றப்பட்ட பணிகள்**

**(₹ கோடியில்)**

| வ. எண் | நகரத்தின் பெயர் | திட்டமிடப்பட்ட மொத்த பணிகளின் எண்ணிக்கை | மதிப்பு | நிறைவேற்றப்பட்ட திட்டமிடப்படாத பணிகள்[6] | மதிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 48 | 1,366.25 | 20 | 189.66 |
| 2 | கோயம்புத்தூர் | 45 | 1,570.28 | 4 | 20.28 |
| 3 | ஈரோடு | 21 | 1,543.52 | 0 | 0 |
| 4 | மதுரை | 22 | 1,342.00 | 3 | 60.00 |
| 5 | சேலம் | 27 | 1,740.00 | 0 | 0 |
| 6 | திருநெல்வேலி | 34 | 1,217.80 | 15 | 314.62 |
| 7 | திருப்பூர் | 46 | 1,255.73 | 2 | 39.30 |
| | **மொத்தம்** | **243** | **10,035.58** | **44** | **623.86** |

(ஆதாரம்: தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்களால் வழங்கப்பட்ட விவரங்கள்)

[6] தெரிவு செய்யப்பட்ட நகரங்களைப் பொறுத்தவரை, SCPன்படி, மொத்த பணிகளின் எண்ணிக்கை 243 ஆகும். இருப்பினும், நிறைவேற்றப்படாதப் பணிகளின் எண்ணிக்கை 52 மற்றும் நிறைவேற்றப்பட்ட மொத்த திட்டமிடப்படாத பணிகள் 44 ஆகும். மேலும், SCPல் ஒரே பணியாக சேர்க்கப்பட்ட பணிகள் பின்னர் செயல்படுத்தலின் போது ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில், செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை 414 ஆகும்.

திட்டமிடப்படாத 44 பணிகளில், 21 பணிகள் ABD பகுதிக்கு வெளியே நிறைவேற்றப்பட்டதாக தணிக்கை ஆய்வில் தெரியவந்துள்ளது. மேலும், மூன்று திட்டங்கள் நகரின் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டன.

மேலும் தணிக்கையில் அறியப்பட்டவை பின்வருமாறு:

திட்டமிடப்படாத பணிகள் (எண்ணிக்கையில் 44) திட்டமிடப்பட்ட பணிகளில் சுமார் 18.11 விழுக்காடாகக் கணக்கிடப்பட்டது. 44 பணிகளில், ₹21.42 கோடி செலவில் ஐந்து திட்டங்கள்[7] வழக்கமாக மேற்கொள்ளப்படுபவை ஆதலால் அவை சம்பந்தப்பட்ட மாநகராட்சியால் தங்கள் சொந்த நிதியில் இருந்து செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். திட்டமிடப்படாத பணிகளை மேலும் பகுப்பாய்வு செய்ததில், 44 பணிகளில், ₹184.71 கோடியை உள்ளடக்கிய 21 பணிகள் முழுமையாக ABD பகுதிக்கு வெளியே நிறைவேற்றப்பட்டன என்பது தெரியவந்தது. இது மாநகராட்சி தங்கள் சொந்த நிதியில் இருந்து நிறைவேற்ற வேண்டிய பணிகளுக்கு திட்ட நிதியை தெரிந்தே பயன்படுத்தியது என்பதைக் குறிக்கிறது.

திருநெல்வேலி SCL ₹314.62 கோடி மதிப்பிலான 15 திட்டமிடப்படாத பணிகளைச் செயல்படுத்தியது. இது தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களில் மிக அதிகமாக 25.84 விழுக்காடாகக் கணக்கிடப்பட்டது.

முதல் முன்மொழிவுகளில் சேர்க்கப்படாவிட்டாலும், பின்னர் திட்டமிடப்படாத பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்ட சில பணிகளாவன, சென்னையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி வளாகத்தில் பசுமை கட்டிடம், கோயம்புத்தூரில் உள்ள நேரு விளையாட்டு அரங்கில் பேரொளி விளக்குகள், திருநெல்வேலியில் விருந்தினர் மாளிகை கட்டுமானம் மற்றும் மதுரையில் மாநாட்டு மையம்.

இந்தத் திட்டங்கள் மேற்கண்ட ஆலோசனையை மீறியும், குடிமக்களைக் கலந்தாலோசிக்காமலும் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பணிகள் குறிப்பாக சுற்றுச்சூழல் அழுத்தம் மற்றும் நகர்ப்புற சவால்களுக்கு உள்ளாகும் பகுதிகளில், நகரத்தின் உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளை பிரதிபலிப்பதாக அரசு பதிலளித்தது (மே 2025).

திட்டமிடப்படாத பணிகள், மாநகராட்சியால் தங்கள் சொந்த நிதியில் இருந்து நிறைவேற்றுவதற்குப் பதிலாக சீர்மிகு நகர நிதியின் கீழ் மேற்கொண்டதால் பதில் ஏற்புடையதாக இல்லை.

### 2.1.5 ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்ட பணிகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட ABD பகுதி குடிமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் விதமாக ABD பகுதியில் பணிகள் அவசியமாக செயல்படுத்தப்பட வேண்டும் என MoHUAன் ஆலோசனை எண் 13ல்

[7] (i) சென்னை கண்ணம்மாபேட்டை சுடுகாட்டின் நவீனமயமாக்கல், (ii) சென்னை பள்ளிகளுக்கு இரட்டை மேசைகள் கொள்முதல் (iii) கோயம்புத்தூரில் உள்ள நேரு விளையாட்டு அரங்கில் பேரொளி விளக்குகள், (iv) கோயம்புத்தூரில் உக்கடத்தில் பம்ப் நிலைய கட்டுமானம் மற்றும் (v) திருநெல்வேலி மாநகராட்சியில் வண்ணாரந்துறை கட்டுமானம் (3 இடங்கள்).

மீண்டும் வலியுறுத்தப்பட்டது. பணியின் கணிசமான பகுதி ABD நிலப்பரப்பு பகுதிக்குள் இருந்தால், ABD இடத்திற்கு வெளியே பகுதியளவு உள்ள பணிகளைச் சேர்ப்பது அனுமதிக்கப்படுகிறது. மேலும், பணியின் நோக்கம் முதல் மைல்/கடைசி மைல் இணைப்புக்காக இருக்கும் பட்சத்தில், ABDக்கு வெளியே சிறு பகுதியைக் கொண்ட பணிகளையும் பரிசீலிக்கலாம். எடுத்துக்காட்டாக, மழை நீர் வடிகால், குடிநீர் வழங்கல், மின்சாரம் போன்றவை. இருப்பினும், அத்தகைய பணிகளின் இணைப்புப் பகுதி திட்ட செலவில் குறிப்பிடத்தக்க பங்காக இருக்கக்கூடாது.

தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களில், திட்ட வழிகாட்டுதல்களுக்கு முரணாக ஒப்புதல் அளிக்கப்பட்ட ABD பகுதிக்கு வெளியே ₹655.43 கோடி மதிப்பிலான 70 பணிகள் செயல்படுத்தப்பட்டது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

நகர வாரியான ஒப்புதல் அளிக்கப்பட்டு ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்படும் பணிகளின் விவரங்கள் **அட்டவணை 2.5ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.5: ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்ட பணிகள்**

| வ. எண் | நகரத்தின் பெயர் | ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்ட பணிகள் | மார்ச் 2024 நிலவரப்படி செலவினம் (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | சென்னை | 13 | 76.32 |
| 2 | கோயம்புத்தூர் | 2 | 67.89 |
| 3 | ஈரோடு | 4 | 90.57 |
| 4 | மதுரை | 19 | 71.54 |
| 5 | சேலம் | 23 | 178.39 |
| 6 | திருநெல்வேலி | 4 | 41.60 |
| 7 | திருப்பூர் | 5 | 129.12 |
| | **மொத்தம்** | **70** | **655.43** |

(ஆதாரம்: தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்களால் வழங்கப்பட்ட விவரங்கள்)

தணிக்கையில் பின்வருபவை கண்டறியப்பட்டது:

- 70 பணிகளில், ABD பகுதிக்கு வெளியே 26 பணிகள் மட்டுமே முழுமையாக செயல்படுத்தப்பட்டதாக SCLகள் கூறியிருந்தாலும், தணிக்கை ஆய்வில் 34 பணிகள் முழுவதுமாக ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்டது தெரியவந்தது.
- சேலம் SCL ₹178.39 கோடி செலவில் 23 பணிகளை ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தியதே அதிகபட்சமாக இருந்தது.
- உயிரியல் அகழ்ந்தெடுத்தல் (bio-mining) மற்றும் சூரிய மின் நிலையத் பணிகள் வழக்கமாகவே ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்டன.

- ABD பகுதியில் மட்டுமே செயல்படுத்தப்பட வேண்டிய தெரு விளக்குகள், பாதாளச் சாக்கடை அமைப்பு (UGSS), குடிநீர் வழங்கல் பணிகள் மற்றும் நுண்ணுயிர் உர மையங்கள் போன்ற பணிகள், ABD மற்றும் ABD பகுதிகளுக்கு வெளியே ஆகிய இரண்டு பகுதிகளில் நிறைவேற்றப்பட்டன.

ஒப்புதல் அளிக்கப்பட்டு ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்ட பணிகளின் பட்டியல் **இணைப்பு 2.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே, ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்ட பணிகள் வழிகாட்டுதல்களை மீறியதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியை மேம்படுத்துதல் மற்றும் சீர்மிகு நகரத்துக்குள்ளேயும் மற்றும் வெளியேயும் ஒரு பிரதி மாதிரியை உருவாக்குதல் என்ற திட்டத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்யவில்லை. மேலும், இது நிதி ஆதாரங்களில் குறைவுகளை ஏற்படுத்தியதோடு தேர்ந்தெடுக்கப்பட்ட ABD பகுதியின் குடிமக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் கிடைப்பதை தடை செய்தது.

அரசு, (i) ABD பகுதிக்குள் நிலம் கிடைக்காததால், சூரிய மின் நிலையங்கள் போன்ற பணிகள் ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்டன, (ii) சேலத்தில் ABD பகுதி விரிவாக்கம் (2017) காரணமாக, பணிகள் விரிவாக்கம் செய்யப்பட்ட ABD பகுதியில் நிறைவேற்றப்பட்டன, (iii) மதுரையில் அனைத்து பணிகளும் 12.9 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட ABD பகுதிக்குள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன என பதிலளித்தது (மே 2025).

மதுரையைப் பொறுத்தவரை, முதல் முன்மொழிவின்படி, ABD பகுதி 1,305 ஏக்கரை (5.28 சதுர கிலோமீட்டராக மட்டுமே இருந்தது) மட்டுமே உள்ளடக்கியது என்பதால் இப்பதில் ஏற்புடையதாக இல்லை. மேலும், ஜூன் 2024ல் விரிவாக்கம் செய்யப்பட்ட ABD பகுதியில் பணிகள் செயல்படுத்தப்பட்டது என பதிலளிக்கப்பட்டது. மேலும், நுண்ணுர மையம், மாநாட்டு மையம் மற்றும் நூலகம் ஆகிய பணிகள் ABD பகுதிக்கு வெளியே செயல்படுத்தப்பட்டிருந்தால், மாநகராட்சி நிதியிலிருந்து செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவை SCM நிதியிலிருந்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

**பரிந்துரை 2: எதிர்காலத்தில், முன்மொழியப்பட்ட பணிகளைக் கைவிடுவது அல்லது திட்டமிடப்படாத பணிகளை செயல்படுத்துதல் மற்றும் நடப்பில் உள்ள பணிகளைக் குறித்தும் SCLகள் குடிமக்களுக்கு வெளிப்படையாக இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

## 2.2 நிதி மேலாண்மை

### 2.2.1 முன்மொழிவின் மானியக் கூறு

SCM வழிகாட்டுதல்களின் பத்தி 11.2ன் படி, ஒவ்வொரு சீர்மிகு நகர முன்மொழிவில் திட்டச் செலவும், எதிர்பார்ப்பின் நிலை, மாதிரி மற்றும் நிறைவேற்றும் மற்றும் திருப்பிச் செலுத்தும் திறனைப் பொறுத்து மாறுபடும். மானியம் (சீர்மிகு நகரத் திட்டம்), பொது தனியார் பங்களிப்பு (PPP), திட்ட ஒருங்கிணைப்பு (மத்திய/மாநில அரசு திட்டங்கள்), ULBகளின் நிதி மற்றும் அதன் கடன்கள் ஆகியவற்றிலிருந்து நிதி ஆதாரங்களைத் திரட்டுவது என SCP எதிர்நோக்கியது. மத்திய அரசு, ஐந்து ஆண்டுகளில் ₹5,500 கோடி அளவிற்கு அதாவது, சராசரியாக ஆண்டுக்கு ஒரு நகரத்திற்கு ₹100 கோடி வீதம் திட்டத்திற்கு நிதி உதவி வழங்க முன்மொழிந்தது. மாநிலம்/ULB சமமான தொகையை வழங்கும். SCMக்கான நிதி பங்களிப்பு **அட்டவணை 2.6ல்** விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.6: SCMன் கீழ் நிதி பங்களிப்பு**

**(₹ கோடியில்)**

| நிதி வகை | மத்திய அரசு | தமிழ்நாடு அரசு | மொத்தம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| திட்ட நிதி | 465 (93 விழுக்காடு) | 500 (100 விழுக்காடு) | 965 | திட்டம் |
| நிருவாக மற்றும் அலுவலகச் செலவுகள் (MoUD) நிதி | 10 (2 விழுக்காடு) | 0 | 10 | பணி இயக்குநரகம் மற்றும் தொடர்பான செயல்பாடுகள்/கட்டமைப்புகள், ஆராய்ச்சி, முன்னோடி ஆய்வுகள், திறன் மேம்பாடு மற்றும் உடன் நிகழ் மதிப்பீடு |
| நிருவாக மற்றும் அலுவலகச் செலவுகள் (மாநில/ULB) நிதி | 25 (5 விழுக்காடு) | 0 | 25 | SCPகளைத் தயாரிப்பதற்கும், PMCகளுக்கும், பகுதி அடிப்படையிலான வளர்ச்சி மற்றும் சீர்மிகு தீர்வுகளின் நிலைப்படுத்துதலும், உருவாக்கமும் குறித்த முன்னோடி ஆய்வுகள், சவால் மற்றும் இணைய சேவைகளில் ஒப்புதலளிக்கப்பட்டவாறான திறன் மேம்பாடு |
| **மொத்தம்** | **500** | **500** | **1,000** | |

(ஆதாரம்: SCM வழிகாட்டுதல்கள்)

மத்திய அரசால் வழங்கப்படும் நிதிகள், பிணைக்கப்பட்ட மானியங்களின் வடிவில் தனி மானிய நிதியில்[8] வைக்கப்பட வேண்டும் மற்றும் மானியங்கள் வழங்கப்பட்ட நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற MoHUA வகுத்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

தணிக்கை ஆய்வில், வழிகாட்டுதல்கள் 96.50 விழுக்காடு மானியம் மட்டுமே திட்டச் செலவாக ஒதுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயித்திருந்தாலும், தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களுள் ஐந்து நகரங்கள், ஒவ்வொரு

[8] சீர்மிகு நகர திட்டத்தின் வழிகாட்டுதல்கள், ஜுன் 2015ன் இணைப்பு 5.

நகரத்திற்குமான மொத்த மானியத்தில் 96.50 விழுக்காட்டிற்கும் அதிகமான பணிகளைத் திட்டமிட்டுள்ளன என்பது தெரியவந்தது.

மேலும், ஒவ்வொரு நகரமும், சமூக புள்ளிவிவரப் பட்டியல் **(அட்டவணை 2.7)** மற்றும் மக்கள்தொகையில் வேறுபட்டு இருந்த போதிலும், ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கப்பட்ட நிதி ₹1,000 கோடியாக இருந்தது.

**அட்டவணை 2.7: தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்கள்- சமூக புள்ளிவிவரங்கள்**

| வ. எண் | நகரத்தின் பெயர் | உருவாக்கப்-பட்ட ஆண்டு | SCM மானியத்திலிருந்து முன்மொழியப்பட்ட பணிகளின் மொத்த மதிப்பு (₹ கோடியில்) | மொத்த பரப்பளவு (ச.கி.மீ.ல்.) | மொத்த மக்கள் தொகை (இலட்சத்தில்) | ABD பகுதி (ச.கி.மீ.ல்) | ABD பகுதி மக்கள் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1688 | 976.00 | 426.00 | 66.80 | 6.95 | 2.26 |
| 2 | கோயம்புத்தூர் | 1981 | 974.00 | 257.00 | 16.02 | 17.00 | 2.25 |
| 3 | ஈரோடு | 2008 | 998.00 | 109.52 | 5.15 | 9.11 | 1.10 |
| 4 | மதுரை | 1971 | 1,000.00 | 148.00 | 14.71 | 5.28 | 2.61 |
| 5 | சேலம் | 1994 | 1,000.00 | 91.34 | 8.35 | 2.50 | 0.71 |
| 6 | திருநெல்வேலி | 1994 | 964.00 | 108.65 | 4.75 | 3.67 | 0.46 |
| 7 | திருப்பூர் | 2008 | 919.00 | 159.35 | 8.77 | 11.33 | 2.07 |

(ஆதாரம்: ஏழு சீர்மிகு நகரங்களால் வழங்கப்பட்ட விவரங்கள்)

மேலே உள்ள **அட்டவணை 2.7லிருந்து**, தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களுள் ஐந்து நகரங்கள், ஒவ்வொரு நகரத்திற்கான SCM மானியத்திலிருந்து, நிர்ணயிக்கப்பட்ட விழுக்காட்டிற்கும் (96.50 விழுக்காடு அதாவது ₹965 கோடி) மேலான பணிகளைத் திட்டமிட்டுள்ளன என்பதைக் காண முடிகிறது. மேலும், ஒதுக்கப்பட்ட நிதி சமமாக இருந்தாலும், ABD பகுதியின் மக்கள் தொகை 0.46 இலட்சத்திலிருந்து 2.61 இலட்சம் வரை இருந்தது. இதனால், பகுதியின் பரப்பளவுக்கும் இருப்பிலுள்ள சீர்மிகு நகர நிதிகளுடன், தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்மொழியப்படும் மக்கள்தொகைக்கும் ஏற்ப SCPகளைத் தயாரிப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

### 2.2.2 பணிகளின் நிலை

மத்திய மற்றும் தமிழ்நாடு அரசுகள் நிர்வாக மற்றும் அலுவலக செலவுகளை (A&OE) ஈடுசெய்வதற்கான நிதி உட்பட, SCM பணிகளைச் செயல்படுத்துவதற்காக அனைத்து ஏழு நகரங்களுக்கும் ₹6,930 கோடியை விடுவித்தன. மொத்த நிதி விடுவிப்பான ₹6,930 கோடியில், திட்ட இயக்குநரகம் (TUFIDCO) ₹6,923 கோடியை (ஒவ்வொரு சீர்மிகு நகரத்திற்கும் ₹989 கோடி) விடுவித்தது. TUFIDCO மொத்த நிதி விடுவிப்பில், ₹6,341.81 கோடி செலவினம் சீர்மிகு நகரங்களால் செய்யப்பட்டுள்ளது (31 மார்ச் 2024).

SCPன்படி தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களால் நிறைவேற்றுவதற்காக ₹10,035.58 கோடி செலவில் திட்டமிடப்பட்ட பணிகளின் எண்ணிக்கை 243[9] ஆகும். ஆனால், இதற்கு மாறாக, செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த திட்டங்கள் 414 ஆகும். அவற்றில் மார்ச் 2024 நிலவரப்படி முடிக்கப்பட்டுள்ள 387 பணிகள் **இணைப்பு 2.4ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

SCMன் நிதியை நிர்வகிப்பதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் பின்வரும் பத்திகளிலும் மற்றும் பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்துவதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் **அத்தியாயம் IIIலும்** விவாதிக்கப்பட்டுள்ளன.

₹793.83 கோடி மதிப்புள்ள ஒன்பது பணிகள் மட்டுமே முடிக்கப்படாமல் இருப்பதாக அரசு பதிலளித்தது (மே 2025).



### 2.2.3 நிதி வெளியிடுவதில் தாமதம் மற்றும் தவறாக வட்டித்தொகையை செலுத்துதல்

மத்திய அரசின் நிதி விடுவிப்பு உத்தரவின் பத்தி 2 (iii)ன் படி, மத்திய அரசால் விடுவிக்கப்பட்ட நிதி, ஈடு கட்டுதல் அடிப்படையில் மாநிலத்தால் வழங்கப்படும் சமமான தொகையுடன், பெறப்பட்ட ஏழு நாட்களுக்குள் SCLன் வங்கிக் கணக்கிற்கு மின்னணு முறையில் மாற்றப்பட வேண்டும்.

மத்திய அரசின் தற்போதைய விதிகள் மற்றும் அறிவுறுத்தல்களின்படி[10], விடுவிக்கப்பட்ட நிதியிலிருந்து ஈட்டப்பட்ட வட்டி மத்திய அரசு தொகுப்பு நிதி (CFI) மற்றும் மாநில அரசு தொகுப்பு நிதி (CFS) ஆகியவற்றிற்கு விகிதாசார அடிப்படையில் மற்றும் ஒப்புதலளிப்பட்ட நிதிமுறையின்படி[11] கட்டாயமாக செலுத்தப்படுவதை ஒரு ஒற்றை முதன்மை முகமை (single nodal agency) உறுதி செய்ய வேண்டும்.

ஒற்றை முதன்மை முகமையால் நிதி வெளியிடுவதிலும் மற்றும் ஒற்றை முதன்மை முகமையால் வட்டி செலுத்தப்படுவதிலும் பின்வரும் முரண்பாடுகள் இருந்தது தணிக்கையில் கண்டறியப்பட்டது:

(அ) மத்திய அரசின் பங்கினை தமிழ்நாடு அரசு விடுவிப்பதிலும், தமிழ்நாடு அரசின் பங்கை திட்ட இயக்குநரகத்துக்கு (TUFIDCO) விடுவிப்பதிலும் ஏற்பட்ட தாமதம் 02 முதல் 714 நாட்கள் வரை **(அட்டவணை 2.8)** இருந்தது.

---

9 SCPன்படி தெரிவு செய்யப்பட்ட நகரங்களைப் பொறுத்தவரை, மொத்த பணிகளின் எண்ணிக்கை 243 ஆகும். இருப்பினும், நிறைவேற்றப்படாத பணிகளின் எண்ணிக்கை 52 மற்றும் நிறைவேற்றப்பட்ட மொத்த திட்டமிடப்படாத பணிகள் 44 ஆகும். மேலும், SCPல் ஒரு பணியாக சேர்க்கப்பட்ட பணிகள் பின்னர் செயல்படுத்தலின் போது ஒன்றுக்கு மேற்பட்ட பணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதனால் நிறைவேற்றப்பட்ட பணிகளின் எண்ணிக்கை 414 ஆகும்.

10 GFR, 2017ன் விதி 230(8) மற்றும் 23-03-2021 தேதியிடப்பட்ட மத்திய அரசின் அறிவுறுத்தல்கள்.

11 30-06-2021 தேதியிடப்பட்ட மத்திய அரசின் அறிவுறுத்தல்கள்.

மேலும், TUFIDCO அந்தந்த SCLகளுக்கு நிதியை தாமதமாக விடுவித்தது. இந்த தாமதம் அரசிடமிருந்து நிதி பெறப்பட்ட நாளிலிருந்து 15 முதல் 960 நாட்கள் வரை இருந்தது (**அட்டவணை 2.8**).

**அட்டவணை 2.8: நிதி விடுவிப்பதில் தாமதம்**

| தமிழ்நாடு அரசு TUFIDCOவிற்கு பங்கை விடுவிப்பதில் தாமதம் (நாட்களின் எண்ணிக்கை) | நேர்வுகளின் எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) | TUFIDCOவிலிருந்து SCLக்கு பங்கு விடுவிப்பதில் தாமதம் (நாட்களின் எண்ணிக்கை) | நேர்வுகளின் எண்ணிக்கை | தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 02 முதல் 30 நாட்கள் வரை | 31 | 2,717.60 | 15 முதல் 30 நாட்கள் வரை | 11 | 599.00 |
| 31 முதல் 180 நாட்கள் வரை | 57 | 3,325.57 | 31 முதல் 180 நாட்கள் வரை | 55 | 3,785.24 |
| 181 முதல் 365 நாட்கள் வரை | 08 | 455.10 | 181 முதல் 365 நாட்கள் வரை | 08 | 553.43 |
| 366 முதல் 714 நாட்கள் வரை | 09 | 209.48 | 366 முதல் 730 நாட்கள் வரை | 12 | 642.24 |
| | | | 731 முதல் 960 நாட்கள் வரை | 05 | 30.38 |
| **தொகை** | | **6,707.75** | | | **5,610.29** |

(ஆதாரம்: TUFIDCOஆல் அளிக்கப்பட்ட விவரங்கள்)

மார்ச் 23, 2021 தேதியிடப்பட்ட மத்திய அரசு கடிதத்தின்படி, மாநில அரசு ஒரு ஒற்றை முதன்மை முகமையை நியமிக்க வேண்டும். மேலும், ஒவ்வொரு மத்திய நிதியுதவி பெறும் திட்டங்களையும் (CSS) செயல்படுத்துவதற்கு மத்திய பங்கை மாநில அரசு தனிநபர் வைப்பு (PD) கணக்கிற்கோ அல்லது வேறு எந்த கணக்கிற்கோ திருப்பிவிடக்கூடாது என்ற நிபந்தனையுடன் ஒரு ஒற்றை முதன்மை கணக்கைத் (SNA) துவக்க வேண்டும். நிதி அமைச்சகம் வெளியிட்ட வழிகாட்டுதல்களை மீறி, அரசு உத்தரவுகள் மூலம் எட்டு நேர்வுகளில் மாநில அரசு (ஜூலை 2021 மற்றும் அக்டோபர் 2021 க்கு இடையில்) மத்திய அரசு பங்குத் தொகையான ₹1,127 கோடியை தனிநபர் வைப்பு கணக்கிற்கு திருப்பிவிட்டது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

(ஆ) தணிக்கை ஆய்வில், ஐந்து நகரங்கள் ₹239.40 கோடி அளவுக்கு வட்டி ஈட்டியிருப்பது தெரிய வந்தது. இருப்பினும், ₹149.01 கோடி மட்டுமே, CFI மற்றும் CFSக்கு முறையே ₹62.09 கோடி மற்றும் ₹86.92 கோடியாக பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனால், **அட்டவணை 2.9ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி, CFI மற்றும் CFSக்கு முறையே ₹57.61 கோடி மற்றும் ₹32.78 கோடி அளவுக்கு குறைவான பணம் செலுத்தப்பட்டு இருந்தது.

**அட்டவணை 2.9: தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்களின் குறைவான வட்டி செலுத்துதல்**

| வ. எண் | நகரம் | ஈட்டப்பட்ட மொத்த வட்டி (₹ கோடியில்) | பணம் செலுத்துதல் (₹ கோடியில்) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மத்திய அரசு | | | மாநில அரசு | | |
| | | | செலுத்தப்பட வேண்டிய வட்டி | செலுத்தப் பட்ட வட்டி | குறைவாக செலுத்தப்பட்ட வட்டி | செலுத்தப்பட வேண்டிய வட்டி | செலுத்தப் பட்ட வட்டி | குறைவாக செலுத்தப்பட்ட வட்டி |
| 1 | சென்னை | 82.51 | 41.26 | 14.66 | 26.60 | 41.26 | இல்லை | 41.25 |
| 2 | கோயம்-புத்தூர் | 76.79 | 38.39 | 28.95 | 9.44 | 38.39 | 39.26 | (-) 0.87 |
| 3 | மதுரை | 48.43 | 24.21 | 9.70 | 14.52 | 24.21 | 31.19 | (-) 6.97 |
| 4 | திருநெல்-வேலி | 14.42 | 7.21 | 2.40 | 4.81 | 7.21 | 9.10 | (-) 1.89 |
| 5 | திருப்பூர் | 17.25 | 8.63 | 6.38 | 2.24 | 8.63 | 7.37 | 1.25 |
| | **மொத்தம்** | **239.40** | **119.70** | **62.09** | **57.61** | **119.70** | **86.92** | **32.78** |

(ஆதாரம்: சீர்மிகு நகரங்களால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

(இ) திட்ட நிதி, நகரங்களால் SCMன் கீழ் பணிகளை மட்டுமே செயல்படுத்துவதற்கானது என்ற போதிலும், திட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் நோக்கத்திற்கு எதிராகவும், மாநில/மத்திய அரசுகளிடமிருந்து எந்த குறிப்பிட்ட ஒப்புதல் இல்லாமலும் TUFIDCO ₹11 கோடியை வைத்துக்கொண்டது. திட்ட நிதியை வைத்துக் கொண்டதற்கான எந்த குறிப்பிட்ட காரணமும் TUFIDCOஆல் வழங்கப்படவில்லை.

(ஈ) SCP தயாரிப்பதற்காக மத்திய அரசு, A&OEக்கான நிதியின் பங்காக, 12 சீர்மிகு நகரங்களுக்கு, ஒரு சீர்மிகு நகரத்திற்கு ₹2 கோடி வீதம் ₹24 கோடியை[12] தமிழ்நாடு அரசுக்கு முன்பணமாக விடுவித்தது. மத்திய அரசு விடுவிப்பின் அடிப்படையில், 12 நகரங்களுக்கு[13] மேற்கொண்டு விடுவிப்பதற்காக தமிழ்நாடு அரசு TUFIDCOக்கு நிதியை விடுவித்தது. இந்த திட்டத்தின் கீழ் திண்டுக்கல் நகரம் தேர்ந்தெடுக்கப்படாததால், முன்பணமாக வழங்கப்பட்ட தொகை (₹2 கோடி) திண்டுக்கல் SCLக்கு விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக, TUFIDCO தொகையை வைத்துக் கொண்டது முறையாக இல்லை.

அரசு, (i) ஜனவரி 2022ல் SNA துவக்கப்பட்ட பிறகு, PD கணக்கில் எந்த நிதியும் வரவு வைக்கப்படவில்லை, (ii) TUFIDCOஆல் செய்யப்பட்ட உள்ளபடியான செலவினம் ₹11 கோடிக்கு எதிராக சரிசெய்யப்படும். மேலும் இறுதி சரிசெய்தலுக்குப் பிறகு எந்தவொரு இருப்பும் திரும்ப செலுத்தப்படும் அல்லது அந்தந்த நகரங்களுக்குத் விடுவிக்கப்படும், (iii) மத்திய மற்றும் தமிழ்நாடு அரசுகள் இரண்டிற்கும் செலுத்த வேண்டிய வட்டி நிலுவைத் தொகை விரைவில் செலுத்தப்படும், (iv) ₹2 கோடியைத் திரும்ப செலுத்த

[12] G.O.(D) எண். 671 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நகராட்சி நிர்வாகம் 2) துறை, நாள் 12-01-2015.

[13] நகர்ப்புர வளர்ச்சி அமைச்சகம் விடுவிப்பு ஆணை K - 15017/01/2015-SC-1 நாள் 01-09-2015.

TUFIDCOஆல் ஏற்கனவே நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது என பதிலளித்தது (மே 2025).

மார்ச் 2021லேயே PD கணக்கு துவக்கப்பட அறிவுறுத்தப்பட்டிருந்தாலும், ஜனவரி 2022ல் மட்டுமே வங்கி கணக்கு துவக்கப்பட்டது. மேலும் நிதி வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து பதில் ஏதும் இல்லாததால், இந்தப் பதில் ஏற்புடையதாக இல்லை.

### 2.2.4 நிதி திரட்டுதல்

திட்ட வழிகாட்டுதல்களின் பிரிவு 11.3ன் படி, நகரங்கள் மாநில மற்றும் மத்திய அரசுகளால் வழங்கப்படும் நிதிகளுடன், கூடுதலாக நிதி திரட்டி அதற்கேற்ப திட்டமிட வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களுடன் ஒன்றிணைதல், சொந்த நிதி ஆதாரங்களை உருவாக்குதல், பொது தனியார் பங்களிப்பு (PPP) திட்டங்களை முன்மொழிதல், சந்தை கடன்கள், கடன்கள் மற்றும் திட்டங்களுக்கு சம பங்குதாரர்களை அழைப்பதன் மூலமும், பயனர் கட்டணங்கள், பயனாளி கட்டணங்கள் மற்றும் தாக்கக் கட்டணங்கள் வசூலிப்பதலிருந்து மாநிலங்கள்/ULBகளின் சொந்த நிதி ஆதாரங்கள், நிலப் பணமாக்குதல், கடன்கள் ஆகியவற்றிலிருந்து சொந்த நிதி ஆதாரங்களை உருவாக்குதல் போன்ற நிதி சாத்தியக் கூறுகள் SCLகளின் நீடித்த நிலைத்தன்மைக்காக ஆராயப்பட வேண்டும். நகர வாரியான நிதி ஆதாரங்களைத் திரட்டுதல் **அட்டவணை 2.10ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.10: நிதி ஆதாரங்களைத் திரட்டுதல்**

**(₹ கோடியில்)**

| வ. எண் | நகரம் | மானியம் | | PPP/ஒருங்கிணைப்பு/ சொந்த நிதி/கடன் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | திட்ட-மிட்டது | திரட்டப்-பட்டது | திட்ட-மிட்டது | உள்ளடக்கிய தொகை | திட்ட-மிட்டது | திரட்டப்-பட்டது |
| 1 | சென்னை | 976.00 | 929.61 | 390.24 | 16.57* | 1,366.24 | 946.18 |
| 2 | கோயம்புத்தூர் | 974.00 | 919.37 | 596.00 | 180.94 | 1,570.00 | 919.37 |
| 3 | ஈரோடு | 998.05 | 879.44 | 545.46 | 159.43 | 1,543.51 | 879.44 |
| 4 | மதுரை | 1,000.00 | 953.87 | 342.00 | 121.54 | 1,342.00 | 953.88 |
| 5 | சேலம் | 1,000.00 | 897.22 | 932.60 | 0.00 | 1,932.60 | 897.22 |
| 6 | திருநெல்வேலி | 964.00 | 858.29 | 257.05 | 114.50 | 1,221.05 | 858.29 |
| 7 | திருப்பூர் | 918.60 | 887.43 | 337.11 | 258.49 | 1,255.71 | 887.43 |
| | **மொத்தம்** | **6,830.65** | **6,325.23** | **3,400.46** | **851.47** | **10,231.11** | **6,341.81** |

* PPP திட்டங்களுக்காக பிற ஆதாரங்களிலிருந்து பெறப்பட்ட தொகை

(ஆதாரம்: சீர்மிகு நகரத்தின் SCP மற்றும் அந்தந்த நகரங்களால் வழங்கப்பட்ட தரவுகள்)

தணிக்கை ஆய்வில், PPP முறையின் கீழ் ₹1,630.03 கோடி திட்டமிடப்பட்டிருந்ததற்கு எதிராக, ₹16.57 கோடி மதிப்புள்ள நான்கு பணிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. மேலும், மீதமுள்ள தொகையான ₹834.90 கோடி (₹851.47 கோடியில்

இருந்து) SCM வழிகாட்டுதல்களை மீறி, SCM நிதியிலிருந்து, ஒருங்கிணைப்பு திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மாற்றப்பட்டது.

திரட்டப்பட்ட நிதிகளின் தணிக்கை பகுப்பாய்வு, சீர்மிகு நகரங்களுக்கான SCPகள் குடிநீர் வழங்கல், கழிவுநீர் வடிகால், வீட்டுவசதித் திட்டங்கள் போன்றவற்றுக்கான ஒருங்கிணைவு மாதிரிகளை எதிர்நோக்கியிருந்தாலும், தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்கள் எதுவும் SCPகளில் எதிர்நோக்கிய பணிகளைச் செயல்படுத்துவதற்காக தற்போதுள்ள பிற திட்டங்களிலிருந்து நிதியைத் திரட்டவில்லை என்பதை வெளிபடுத்தியது. அதற்குப் பதிலாக, SCM மானியங்கள் அத்தகைய பணிகளை AMRUT, TWAD வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் போன்ற பிற திட்டங்கள் மற்றும் முகமைகள் மூலம் நிறைவேற்றுவதற்காக மாற்றப்பட்டுள்ளன. இது பின்வரும் நேர்வுகளில் விளக்கப்பட்டுள்ளது.

**குடிநீர் வழங்கல்/கழிவுநீர் வடிகால் திட்டங்கள்:** கோயம்புத்தூர் சீர்மிகு நகரத்தின் SCPன் படி, கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் வழங்கல் திட்டம் JNNRUM மூலம் செயல்படுத்தப்பட்டதால் குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு எந்த தொகையும் ஒதுக்கப்படவில்லை. இருப்பினும், ₹150.73 கோடி SCM நிதி ABD பகுதியின் விகிதாசார மேம்பாட்டு செலவைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நடப்பில் உள்ள 24x7 குடிநீர் விநியோகத்திற்கான ஒருங்கிணைப்பு நிதியாக மாற்றப்பட்டது. இதேபோல், ஈரோடு, திருநெல்வேலி மற்றும் திருப்பூர் SCLகளும் SCM நிதியை TWAD வாரியம்/மாநகராட்சிக்கு மாற்றியதின் மூலம் இந்த திட்டங்களைச் செயல்படுத்தின.

**வீட்டுவசதித் திட்டங்கள்:** சீர்மிகு நகரங்களில் விரிவான வளர்ச்சிக்கான SCM வழிகாட்டுதல்களில் கோடிட்டு காட்டப்பட்ட அம்சங்களில் ஒன்று, மலிவு விலையில், குறிப்பாக ஏழைகளுக்காக வீடுகள் கட்டுவதாகும். கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் SCLகள் ₹290.45 கோடி மதிப்புள்ள வீட்டுவசதித் திட்டங்களை எதிர்நோக்கியிருந்தாலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்/தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட வாரியத்திற்கு மாற்றப்பட்ட ₹48.46 கோடி[14] (SCM நிதி) மூலம் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், சென்னை SCP எந்த வீட்டுவசதித் திட்டங்களையும் எதிர்நோக்கவில்லை என்றாலும், வில்லிவாக்கம் குளத்தை சீரமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் ஒரு பகுதியாக, 268 குடிசைப் பகுதி குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கான பயனாளி செலவாக SCM நிதியிலிருந்து ₹15.22 கோடி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட வாரியத்திற்கு மாற்றப்பட்டது.

PPPன் கீழ், தெரிவு செய்யப்பட்ட நகரங்கள் மூலம் ₹1,630.03 கோடி நிதி திரட்ட திட்டமிடப்பட்டிருந்தாலும், சென்னை மற்றும் கோயம்புத்தூர் SCLகளால், நான்கு திட்டங்கள் (₹16.57 கோடி) மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளன.

---

[14] கோயம்புத்தூர் - ₹30.21 கோடி, ஈரோடு - ₹14.10 கோடி மற்றும் திருப்பூர் - ₹4.15 கோடி.

இதேபோல், திட்டங்களைச் செயல்படுத்த சொந்த நிதி, சந்தை கடன்கள், ULB பங்களிப்பு போன்ற பிற ஆதாரங்களில் இருந்து எந்த நிதியும் திரட்டப்படவில்லை.

எதிர்பார்க்கப்பட்ட நிதி திரட்டுதல் மற்றும் SCLகளுடைய தன்னிச்சையாக செயல்படுதல் என்ற நிகழ்வில், SCPகளில் மதிப்பிடப்பட்ட நிதித் திட்டங்கள் சாத்தியமானதாக இருந்திருக்கக்கூடும். இருப்பினும், பிற நிதி ஆதாரங்களைத் திரட்டாதது மற்றும் **பத்தி 3.1.4ல்** விவாதிக்கப்பட்டபடி SCLகளின் தன்னிச்சையான இயக்கம் இல்லாமை ஆகிய காரணங்களால் அரசு மானியங்களை முழுவதுமாக சார்ந்திருக்கும் பணிகளைச் செயல்படுத்த வேண்டியிருந்தது. இது SCPகளில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து பணிகளையும் செயல்படுத்தாமைக்கும் வழிவகுத்தது.

மத்திய அரசின் திட்டங்களான தேசிய தெருவிளக்கு திட்டம்; புதிய மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி அமைச்சகத்தின் சூரிய சக்தி மானியம்; ஏரி சீரமைப்பு திட்டம்; நதி சீரமைப்பு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த மின் மேம்பாட்டுத் திட்டம் (திறன்மிகு மின் அளவிகளைப் பொருத்துதல்) போன்றவை ஒருங்கிணைப்பின் மூலம் SCLகள் தங்கள் பணிகளைச் செயல்படுத்துவதற்காக இருந்தன என்று குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இருப்பினும், இத்திட்டங்கள் SCLகளின் முன்மொழிவுகளில் பரிசீலிக்கப்படாததால், மேலே குறிப்பிடப்பட்டவை ஆராயப்படவில்லை. மேலும், தெரு LED விளக்குகள், ஏரி சீரமைப்பு பணிகள் போன்ற ஒத்த திட்டங்கள் SCM நிதியைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டன.

அரசு அளித்த பதிலில் (மே 2025), தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், குறைந்த அளவிலான முதலீட்டாளர் ஆர்வம், நடைமுறை சிக்கல்கள், சந்தை தயார்நிலை மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகள் போன்ற பல்வேறு காரணிகள், எதிர்பார்க்கப்படும் நிதி ஆதாரங்களை வெற்றிகரமாகப் பெறுவதைப் பாதித்த காரணத்தால், பல சீர்மிகு நகரங்கள் மாற்று ஆதாரங்கள் மூலம் நிதியை முழுமையாகப் பெறுவதில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டன.

**பரிந்துரை 3: குடிமக்களின் நலனுக்காக SCLகளின் செயல்பாடுகளை விரிவுபடுத்தும் வகையில் நிதி ரீதியாக அதனை நிலையானதாக்க, ULBகளின் பங்களிப்புகள், நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வாங்குதல் போன்றவற்றை உறுதி செய்வதோடு, அதன் வருவாய் ஆதாரத்தை அதிகரிக்கும் பொருட்டு, ஒருங்கிணைப்பு/PPP முறையில் நிதி உதவி பெறுவதை அரசு பரிசீலிக்க வேண்டும்.**

### 2.2.5 A&OE நிதி திருப்  தல் (Diversion of A&OE Funds)

SCM வழிகாட்டுதல்களின் பிரிவு 11.4ன் படி, மத்திய அரசு மானியத்தில் ஐந்து விழுக்காடு மாநில/ULBக்கான நிருவாக மற்றும் அலுவலக செலவுகள் (A&OE) நிதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது SCPகளைத் தயாரிப்பதற்கும், திட்ட மேலாண்மை ஆலோசகர்கள், பகுதி அடிப்படையிலான

மேம்பாடுகளுக்கும் சீர்மிகு தீர்வுகளைப் பயன்படுத்துதல் மற்றும் உருவாக்குதலுக்கும் தொடர்பான முன்னோடி ஆய்வுகள், சவால் மற்றும் இணைய சேவைகளுக்கு ஒப்புதலளித்தபடியான திறன் மேம்பாடு ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படும். மேலும், மத்திய அரசின் அறிவுறுத்தல்களின்படி[15], A&OEக்காக ஒதுக்கப்பட்ட நிதியை வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல், கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல், பதவிகளை உருவாக்குதல் மற்றும் வேறு எந்தவிதமான மூலதன செலவினங்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. இருப்பினும், பணி தொடர்பான செலவுகளை ஈடுசெய்தல், வாகனங்கள் கொள்முதல், கணினிகள் வாங்குதல், சட்டக் கட்டணங்கள் போன்றவற்றுக்காக ஆறு நகரங்களால்[16] ₹23.83 கோடி நிதி திருப்பி விடப்பட்டதாக, தணிக்கையில் கண்டறியப்பட்டவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

சென்னை SCLல் தமிழ்நாடு அரசின் விளம்பரச் செலவினங்களுக்காக ₹66.58 இலட்சமும், சீர்மிகு நகரத்துடன் தொடர்பில்லாத பணிகளுக்கான ஆலோசகர்களுக்கு ₹18.44 இலட்சமும், பயிற்சிப் பட்டறை செலவுகள் மற்றும் அச்சிடும் செலவுகளுக்காக ₹5.14 இலட்சமும், குடும்பங்களை இடமாற்றம்/மீள்குடியேற்றம் செய்வதற்கான செலவுகளுக்காக ₹15.33 கோடியும் வழங்கப்பட்டது.

திருப்பூர் SCLல், ULBகளின் கருத்தரங்கு புதுப்பித்தல், 110 அங்குல LED TV போன்றவற்றுக்காக ₹31.39 இலட்சம் வழங்கப்பட்டது. அதேபோல், 60 கணினிகள் மற்றும் அச்சு எந்திரங்கள் வாங்குவதற்காக, ₹56.76 இலட்சமும், ULBகளின் பிரதான மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு அறைகலன்கள் வாங்குவதற்கு ₹18.45 இலட்சமும் வழங்கப்பட்டது.

கோயம்புத்தூர் SCLல், ஒப்பந்ததாரர்களுக்கு பொறுப்புறுதி வைப்புத்தொகையைத் திரும்ப அளிக்க ₹25.79 இலட்சமும், ABD பகுதிக்கு வெளியே அமைந்துள்ள சிங்காநல்லூர் ஏரியில் உள்ள ஆகாய தாமரையை அகற்றுவதற்கும் காடுகளை அகற்றுவதற்கும் ₹25.33 இலட்சமும் வழங்கப்பட்டது.

ஈரோடு SCLல், ஈரோடு மாநகராட்சியின் UGSS பிரிவின் ஊழியர் சம்பளமாக ₹2.59 கோடி A&OE நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

சேலம் SCLல், A&OE நிதியிலிருந்து ₹2.95 கோடி மாற்றப்பட்டது. இதில் கணக்கு அதிகாரி, CMAக்கு ₹1.95 கோடியும், நகர்ப்புற நிருவாக கட்டிட சங்கத்திற்கு ₹1 கோடியும் அடங்கும்.

மதுரை சீர்மிகு நகர ICCC பணியின் ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்துவற்காக A&OE நிதியிலிருந்து ₹48.36 இலட்சம் வழங்கப்பட்டது.

---

[15] 04-01-2017 தேதியிடப்பட்ட MoUD, கடித எண் K-15016/152(12)/2015-SC-இன் பத்தி 2.V.

[16] சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம் மற்றும் திருப்பூர்.

இப்படியாக, சீர்மிகு நகரங்கள் மத்திய அரசின் வழிகாட்டுதல்கள் மற்றும் பணி வழிகாட்டுதல்களை மீறியுள்ளன.

நிர்வாகம் மற்றும் பணித் தொடர்பான செயல்பாடுகள் சீராக இயங்குவதற்கு உதவியாக இந்த செலவு செய்யப்பட்டதாக அரசு விளக்கமளித்தது (மே 2025). மேலும், சேலம் மற்றும் கோயம்புத்தூரில் தொகையைத் திரும்பச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பதிலளித்தது. இருப்பினும், தணிக்கையால் சுட்டிக்காட்டப்பட்ட பிற நகரங்களில் தொகையைத் திரும்பச் செலுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து பதில் ஏதும் கூறப்படவில்லை.

### 2.2.6 நிதி திருப்புதல்

#### *(i) தகுதியற்ற திட்டத்திற்கு*

SCM வழிகாட்டுதல்களின் பிரிவு 2.4, முக்கிய உள்கட்டமைப்பு கூறுகளின் கீழ் செயல்படுத்தப்பட வேண்டிய பணிகளை வகைப்படுத்துகிறது. ஆனால், மேற்கண்ட வகைப்பாட்டில் ‘விருந்தினர் மாளிகை கட்டுமானம்’ குறிப்பிடப்படவில்லை.

திருநெல்வேலி SCLன் பதிவுருக்களை ஆய்வு செய்ததில், திருநெல்வேலி மாநகராட்சியில் உள்ள பாளையங்கோட்டை வார்டு அலுவலகத்தில் ₹0.86 கோடி திட்ட செலவில் ‘விருந்தினர் மாளிகை கட்டுமானத்திற்கு’ SCM நிதியைப் பயன்படுத்த வாரியத்தின் ஒப்புதல்[17] (06 செப்டம்பர் 2021) அளிக்கப்பட்டது தெரியவந்தது. இந்தப் பணி ₹0.88 கோடி செலவில் முடிக்கப்பட்டது (31 மார்ச் 2023). இருப்பினும், தணிக்கைக் கருத்துரையின் அடிப்படையில் வாரியம் பின்னர் (ஜூன் 2023) பணியின் பெயரை ‘பயிற்சி மைய கட்டுமானம்’ என்று மாற்றியது.

கள ஆய்வின் போது, கட்டிடத்தை பயிற்சி மையமாகப் பயன்படுத்த எந்த கட்டுமான மாற்றங்களும் (பயிற்சி தொடர்பான கட்டமைப்பு, உள்கட்டமைப்பு போன்றவை) மேற்கொள்ளப்படவில்லை என்பதும், இன்றுவரை (ஜூலை 2024) கட்டிடம் பயன்படுத்தப்படவில்லை என்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது. சீர்மிகு நகரத் திட்ட நிதியிலிருந்து மேற்கண்ட சொத்தை உருவாக்கியது SCM வழிகாட்டுதல்களுக்கு முரணானதுடன், உருவாக்கப்பட்ட சொத்து பயன்படுத்தப்படாமல் வீணாக உள்ளது.

தணிக்கைக் கருத்துரையைத் தொடர்ந்து, திருநெல்வேலி SCL திருநெல்வேலி சீர்மிகு நகரத் திட்ட வாரியத்திடமிருந்து அனைத்து ஒப்புதல்களையும் பெற்று இந்த மாற்றத்தை முறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், இந்தப் பணி சீர்மிகு நகரத் திட்டத்தின் உத்திசார் நோக்கங்களுடன் ஒத்துப்போவதையும், அதன் எதிர்பார்க்கப்பட்ட பயனாளிகளுக்கு திறம்பட சேவை செய்வதையும் உறுதி செய்வதாக அரசு பதிலளித்தது (மே 2025). இருப்பினும், பங்கேற்பாளர்கள்,

[17] நகராட்சி நிர்வாக ஆணையரால் 05-10-2021 அன்று வழங்கப்பட்ட நிர்வாக ஒப்புதல் மற்றும் முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் 25-10-2021 அன்று வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல்.

கருப்பொருள்கள் மற்றும் இணைக்கப்பட்டதாகக் கூறப்படும் முடிவுகள் உட்பட நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் விவரங்கள் தணிக்கைக்கு வழங்கப்படவில்லை.

### *(ii) ULBன் வருவாய் செலவினங்களை ஈடுசெய்ய*

திருப்பூர் மாநகராட்சியின் (TCMC) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வந்த பழைய பேருந்து நிலைய வளாகத்தில் இருந்த கடைகள், பொது கழிப்பறை, தெரு விளக்குகள், ஆழ்துளை கிணறு போன்றவை 'SCMன் கீழ் பழைய பேருந்து நிலைய மறுமேம்பாடு' பணியை செயல்படுத்துவதற்காக இடிக்கப்பட்டன. அப்பணி நிறைவடையும் தருவாயில் இருந்தபோது, TCMC, புதிதாக கட்டப்பட்ட பேருந்து நிலையத்திற்கு புதிய மின் இணைப்பு பெறுவதற்காக TANGEDCOவை அணுகியது. இருப்பினும், TCMCன் கோரிக்கையை பரிசீலிப்பதற்காக, TANGEDCO, TCMCஆல் செலுத்த வேண்டிய பழைய மின் கட்டண நிலுவைத் தொகையான ₹15.52 இலட்சத்தை செலுத்த வலியுறுத்தியது.

TANGEDCOவிற்கு மின்சார வாரிய நிலுவைத் தொகையை SCM திட்டத்தின் ஒரு பகுதியாக, சீர்மிகு நகரத் திட்ட நிதியிலிருந்து TCMCஆல் செலுத்தப் பட்டது (27 மே 2022) தணிக்கையில் கண்டறியப்பட்டது. சீர்மிகு நகரத் திட்ட நிதியிலிருந்து திருப்பூர் SCL நிர்வாக இயக்குநர், TCMCன் நிலுவைத் தொகையைத் தீர்க்க சீர்மிகு நகர நிதியிலிருந்து SCM நிதியைத் திருப்பிவிட எடுத்த நடவடிக்கை, திட்ட வழிகாட்டுதல்களுக்கு எதிரானது. SCM மானியம், திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பணிகளை செயல்படுத்துவதற்கானது மட்டுமேயானது அன்றி மாநகராட்சியின் வழக்கமான பொதுச் செலவுகளைச் சமாளிப்பதற்கானது அல்ல.

தணிக்கைக் கருத்துரையைத் தொடர்ந்து பணம் திரும்பப் பெறப்பட்டதாக அரசு பதிலளித்தது (மே 2025).

### 2.2.7 சென்டேஜ் கட்டணங்கள்

சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ், பணிகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வாரியத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. ஒப்புதலளிக்கப்பட்ட பணிகளை அந்தந்த நகரங்கள் (சென்னை SCL தவிர), நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஒப்புதல் பெறுவதற்காக நகராட்சி நிர்வாக ஆணையருக்கு (CMA) அனுப்புகின்றன. ஆய்வுக்குப் பிறகு, தலைமைப் பொறியாளர், CMA மதிப்பீடுகளுக்கு ஒப்புதலளிப்பதுடன், தொழில்நுட்ப ஒப்புதலை (நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகளைக் குறிப்பிட்டு) அளிக்கிறார். அதில் ஒரு நிபந்தனை என்னவென்றால், SCLகள் தற்போதைய உத்தரவுகளின்படி சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பில்[18] மதிப்பீட்டின் 2.5 விழுக்காட்டில் சென்டேஜ் கட்டணங்களை செலுத்த வேண்டும் மற்றும் பணம் அனுப்பியதற்கு சான்றாக செலுத்துச்சீட்டு CMA அலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இது பணி செலவின் ஒரு பகுதியாக, மானியத்தின் திட்டக் கூறுகளிலிருந்து செலுத்தப்பட வேண்டும். தெரிவு செய்யப்பட்ட

[18] 22 செப்டம்பர் 1999 தேதியிடப்பட்ட அரசாணை எண் 213.

நகரங்களால் செயல்படுத்தப்படும் பணிகளுக்கான சென்டேஜ் கட்டணங்களின் விவரங்கள் மற்றும் பணம் செலுத்தியதின் நிலை **அட்டவணை 2.11ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.11: சென்டேஜ் கட்டணங்கள் செலுத்தியதன் நிலை**

| வ. எண் | நகரத்தின் பெயர் | சென்டேஜ் கட்டணங்கள் (₹ கோடியில்) | செலுத்தப்பட்டவை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | சென்னை | சென்டேஜ் கட்டணங்கள் பொருந்தாது | |
| 2 | கோயம்புத்தூர் | 12.87 | இல்லை |
| 3 | ஈரோடு | 2.91 | 2.73 |
| 4 | மதுரை | 3.32 | செலுத்தப்பட்டது |
| 5 | சேலம் | 16.67 | செலுத்தப்பட்டது |
| 6 | திருநெல்வேலி | 17.50 | செலுத்தப்பட்டது |
| 7 | திருப்பூர் | 12.97 | செலுத்தப்பட்டது |

(ஆதாரம்: ஏழு சீர்மிகு நகரங்களால் வழங்கப்பட்ட விவரங்கள்)

மார்ச் 2024 நிலவரப்படி முடிக்கப்பட்ட பணிகளுக்கு கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு SCLகள் சென்டேஜ் கட்டணங்களை செலுத்துவதில் நிலுவை இருப்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. மேலும், எதிர்காலத்தில் அதற்கான பணம் செலுத்துவதற்கு அவர்களின் கணக்குகளில் எந்த தொகை செலுத்தும் பொறுப்பும் உருவாக்கப்படவில்லை.

SCLகளுக்கு விடுவிக்கப்பட்ட தொகை பணிகளுக்கு செலவிடப்பட்டதாலும் சீர்மிகு நகரங்கள் சென்டேஜ் கட்டணங்களுக்கு எந்த தொகை செலுத்தும் பொறுப்பையும் உருவாக்காததாலும், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு சீர்மிகு நகரங்கள் CMAக்கு அக்கட்டணத்தைச் செலுத்துவது கடினமாக இருக்கும். SCLகளுக்கு விடுவிக்கப்பட்ட நிதி, பணிகளுக்காக செலவிடப்பட்டதால், இரு SCLகளின் நிதியிலிருந்தும் அதற்கான சென்டேஜ் கட்டணங்களை செலுத்த அவர்களிடம் தொகை இருக்காது.

தணிக்கைக் கருத்துரைகளில் குறிப்பிட்டதற்கு, ஈரோட்டைப் பொறுத்தவரை ₹0.18 கோடி முழுத் தொகையும் செலுத்தப்பட்டுள்ளதாகவும், கோயம்புத்தூருக்கு ₹3.47 கோடி செலுத்தப்பட்டுள்ளதாகவும், நிலுவைத் தொகை கணக்குகளை சரிசெய்த பிறகு தீர்க்கப்படும் என்றும் அரசு பதிலளித்தது (மே 2025).

# அத்தியாயம் III

# செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு

# அத்தியாயம் III

## செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு

சிறப்பு நோக்க நிறுவனங்கள் (SPVகள்) உருவாக்கப்பட்டாலும், நிறுவனங்கள் சட்டம், 2013ல் விதிக்கப்பட்டுள்ளபடி, சட்டப்பூர்வ விதிகளைத் தவிர்ப்பதற்காக, செலுத்தப்பட்ட மூலதனம் ₹10.00 இலட்சமாகவே வைக்கப்பட்டது. மேலும், தெரிவு செய்யப்பட்ட நகரங்களில் முழுநேர தலைமை செயல்பாட்டு அதிகாரி (CEO) நியமிக்கப்படவில்லை. SPVகள் முதல் திட்ட அனுமதிக்கும் (ULBகளின் முன்மொழிவின் அடிப்படையில்) நிதி செலுத்தல் ஆகியவற்றிற்கு கட்டுப்படுத்தப்பட்டன. வைப்புத்தொகை, குத்தகை-வாடகை, வாகன நிறுத்தம்/பயனர் கட்டணங்கள் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட ₹57.72 கோடி மதிப்புள்ள வருவாய் ULBகளால் அடையப் பெற்ற போதிலும் SPVகளுக்கு மாற்றப்படவில்லை.

முதலில் திட்டமிடப்பட்ட 243 பணிகளிலிருந்து, செயல்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட மொத்த திட்டங்கள் 414 (பணிகளை தொகுப்புகளாகப் பிரித்ததன் காரணமாக). இவற்றில், மார்ச் 2024 நிலவரப்படி 387 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. முதலில் ₹1,488.59 கோடி மதிப்புள்ள பான்-சிட்டி முன்முயற்சிகளை உள்ளடக்கிய 37 பணிகள் முன்மொழியப்பட்ட போதிலும், ₹780.77 கோடி செலவில் 69 பணிகள் செயல்படுத்தப்பட்டன. இவற்றில், ₹209.24 கோடி மதிப்பிலான 22 பணிகள் மட்டுமே வழிகாட்டுதல்களில் கொடுக்கப்பட்டுள்ள பான்-சிட்டி வரையறையின்படி தகுதியானவை ஆகும்.

குடிநீர் வழங்கல், திடக்கழிவு மேலாண்மை, மின் பணிகள், பொது போக்குவரத்து, மின்-ஆளுமை, சமூக-உள்கட்டமைப்பு போன்ற SCPகளில் எதிர்பார்க்கப்பட்ட முக்கிய உள்கட்டமைப்பு பணிகளை நிறைவேற்றுவதிலும் குறைபாடுகள் காணப்பட்டன. மேலும், மாசு கட்டுப்பாட்டு வாரியம், பொதுப்பணித் துறை போன்றவைகளின் அரசு ஒழுங்குமுறைகளுக்கேற்ப, பல்வேறு அனுமதிகள்/ஒப்புதல்கள் தேவைப்படும் 93 பணிகள் அத்தகைய அனுமதிகளைப் பெறாமல் தொடங்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட அனைத்து நகரங்களிலும் நகர அளவிலான ஆலோசனைக் குழு வடிவமைக்கப்பட்ட போதிலும் இரண்டு வருட தாமதத்திற்குப் பிறகு கூட்டப்பட்டது மற்றும் பல்வேறு பங்குதாரர்களுடன் ஒத்துழைப்பதற்கான கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்படவில்லை.

## 3.1 SCM வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள்

### 3.1.1 சிறப்பு நோக்க நிறுவனங்களை நிறுவுதல்

SCM வழிகாட்டுதல்களின் பிரிவு 10ல் விதிக்கப்பட்டுள்ளபடி, நகர அளவில் இந்த திட்டத்தை செயல்படுத்துவது, ஒரு சிறப்பு நோக்க நிறுவனத்தால் (Special Purpose Vehicle - SPV) மேற்கொள்ளப்பட வேண்டும். நகர அளவில், SPV என்பது நிறுவனங்கள் சட்டம், 2013ன் கீழ் நிறுவப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும், இதில் மாநிலம்/யூனியன் பிரதேசம் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு 50:50 சம பங்குகளைக் கொண்ட நிறுவனர்களாக இருக்க வேண்டும். SCMஐ செயல்படுத்துவதில் SPVன் பங்கு **விளக்கப்படம் 3.1**ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.1: SPVன் பங்கு**




தமிழ்நாட்டில், சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் நகர அளவில் பணிகளைச் செயல்படுத்த 11 சிறப்பு நோக்க நிறுவனங்கள் (ஜூலை 2016 முதல் ஜூன் 2018 வரை) உருவாக்கப்பட்டன.

பணிகளைச் செயல்படுத்துவதில் SPVன் பங்கில் பின்வரும் குறைபாடுகள் இருப்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

### 3.1.2 குறைந்தபட்ச செலுத்தப்பட்ட மூலதனத்தின் பங்களிப்பு இல்லாமை

SCM வழிகாட்டுதல்களின் பிரிவு 10.4ன் படி, SPVன் செலுத்தப்பட்ட மூலதனம் ₹200 கோடியாக இருக்க வேண்டும் (₹100 கோடி மத்திய அரசு பங்களிப்பு மற்றும் ₹100 கோடி மாநில பங்கு). தெரிவு செய்யப்பட்ட SPVகள் எதுவும் SCM வழிகாட்டுதல்களின்படியான குறைந்தபட்ச நிபந்தனையை நிவர்த்தி செய்யவில்லை என்பதும், ஒவ்வொரு சீர்மிகு நகரத்தின்

உள்ளபடியான செலுத்தப்பட்ட மூலதனம், **அட்டவணை 3.1ல்** விவரிக்கப்பட்டுள்ளவாறு ₹10.00 இலட்சமாக மட்டுமே இருந்தது என்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது.

**அட்டவணை 3.1: தெரிவு செய்யப்பட்ட SPVகளின் செலுத்தப்பட்ட மூலதன விவரங்கள்**

| நகரத்தின் பெயர் | தேர்வு | இணைக்கப்பட்ட தேதி | திட்டத்தின் அளவு (₹ கோடியில்) | அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் (₹ கோடியில்) | செலுத்தப்பட்ட மூலதனம் (₹ கோடியில்) |
|---|---|---|---|---|---|
| சென்னை | சுற்று 1 | 15-07-2016 | 1,366.25 | 10.00 | 0.10 |
| கோயம்புத்தூர் | சுற்று 1 | 15-07-2016 | 1,570.28 | 10.00 | 0.10 |
| மதுரை | சுற்று 2 | 02-02-2017 | 1,342.00 | 0.10 | 0.10 |
| சேலம் | சுற்று 2 | 01-02-2017 | 1,740.00 | 0.10 | 0.10 |
| திருநெல்வேலி | சுற்று 3 | 22-12-2017 | 1,217.80 | 0.10 | 0.10 |
| திருப்பூர் | சுற்று 3 | 21-12-2017 | 1,255.73 | 0.10 | 0.10 |
| ஈரோடு | சுற்று 4 | 01-06-2018 | 1,543.52 | 0.10 | 0.10 |

(ஆதாரம்: தெரிவு செய்யப்பட்ட நகரங்களால் அளிக்கப்பட்ட விவரங்கள்)

சென்னை நகரத்தின் தன்னிச்சையான தணிக்கையாளரின் அறிக்கை, 2016-17 முதல் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச செலுத்தப்பட்ட மூலதனத்தை பராமரிக்காததை (அறிக்கையின் முக்கிய பொருள்) தொடர்ந்து அறிவித்து வந்தது. எனவே, SPVகள் உருவாக்கப்பட்டாலும், அவை SCM வழிகாட்டுதல்களின் பிரிவு 10.4க்கேற்ப இல்லை. மேலும், SPVகள் ₹200 கோடிக்கு எதிராக வெறும் ₹10 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனத்துடன், (i) முக்கிய நிர்வாக பதவிகளை உருவாக்குதல்; (ii) தணிக்கைக் குழுவை அமைத்தல்; (iii) உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பை கணக்கில் சேர்த்தல் போன்ற நிறுவனங்கள் சட்டம், 2013ல் விதிக்கப்பட்ட சட்டப்பூர்வ நிபந்தனைகளைத் தவிர்க்கவும் அனுமதிக்கப்பட்டன. சென்னை தவிர்த்து அனைத்து சீர்மிகு நகரங்களிலும் ஒரு முழுநேர CEOகள் இல்லை, அந்தந்த SPVகளின் கணக்குப் புத்தகங்கள் உருவாக்கப்பட்ட சொத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை போன்றவை தணிக்கையில் கண்டறியப்பட்டது. இதனால், SPVகளின் பங்கு அடுத்தடுத்த பத்திகளில் விவாதிக்கப்பட்டபடி சில வரம்புகளுடன் வெறும் ஒரு நிதி நிறுவனமாகவே கட்டுப்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சீர்மிகு நகர SPVகளுக்கும் நிலையான நிதி அடித்தளத்தை வழங்கும் நோக்கத்துடனே இந்த சீரான மூலதன அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒப்பீடு, வெளிப்படைத்தன்மை மற்றும் நிர்வாக மற்றும் நிதித் தேவைகளின் இணக்கத்தை எளிதாக்கும் என்று அரசு பதிலளித்தது (மே 2025).

பங்கு மூலதனத்தை ₹10 இலட்சமாக நிர்ணயிப்பது திட்ட வழிகாட்டுதல்களை மீறுவதாகும் என்பதால் பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

**பரிந்துரை 4: SCM வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்பின்படி SPVல் செலுத்தப்பட்ட மூலதனத்தை பங்களிப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் SPVகளின் நிலைத்தன்மைக்காக அதன் சம பங்கு தளங்களை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், எதிர்கால திட்டங்களை செயல்படுத்துவதற்கும், O&M செலவை ஈடுகட்டுவதற்கும், சந்தை/நிதி நிறுவனங்களிலிருந்து நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு, SPVகளில் ULBகள் அதன் பங்குகளை அளித்து உதவுமாறு அரசு தீர்வு காண வேண்டும்.**

### 3.1.3 தலைமை செயல்பாட்டு அதிகாரியை நியமனம் செய்யாமை

SCM வழிகாட்டுதல்களின் பிரிவு 10.1ன் படி, ஒவ்வொரு சீர்மிகு நகரத்திற்கும் ஒரு SPV இருக்க வேண்டும், மேலும் SPVக்கு ஒரு முழுநேர தலைமை செயல்பாட்டு அதிகாரி (CEO) இருக்க வேண்டும். SCM வழிகாட்டுதல்களின் இணைப்பு 5ன் பத்தி 3, MoHUAன் ஒப்புதலுடன் நிர்ணயிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்திற்கு நியமிக்கப்படும் CEO, SPVன் வாரிய உறுப்பினராக இருக்க வேண்டும் என்றும், அவரை MoHUAன் முன் ஒப்புதலுடன் மட்டுமே நீக்க முடியும் என்றும் நிபந்தனை விதித்தது. அனைத்து நிறுவனங்களில் இருக்கும் முழுநேர CEO, விரைந்து தீர்மானம் எடுத்தல் மற்றும் அடிக்கடி வாரியக் கூட்டங்களின் வாயிலாக நல்ல முடிவுகளுக்கும், பொதுவாக திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதற்கும் உதவுகிறார் என்பது அறியப்பட்டதால், MoHUAன் 03 அக்டோபர் 2018 தேதியிடப்பட்ட ஆலோசனை எண் 14ல் CEO நியமனம் வலியுறுத்தப்பட்டது.

இருப்பினும், சென்னையைத் தவிர வேறு எந்த SPVயும் முழுநேர CEOவை நியமிக்கவில்லை. முறையான தலைமை செயல்பாட்டு அதிகாரி இல்லாததால், SPVன் நடவடிக்கைகள் அந்தந்த நகராட்சி ஆணையரால் மேற்கொள்ளப்பட்டது. இதனால் மேற்கூறிய ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி விரைவாக முடிவெடுத்தல், விரைந்து செயல்படுத்தல் போன்ற பகுதிகளை நிறைவேற்ற முடியவில்லை என்பதுடன், இதன் விளைவாக பல திட்டங்கள் உரிய காலத்திற்குள் முடிக்கப்படவில்லை. இதனால், குறிப்பாக SPVக்கும் ULBக்கும் இடையில் கடமைகளை நிறைவேற்றுவதில் தடுமாற்றம் ஏற்படும்போது, ULB ஆணையர் மற்றும் SPVன் CEO/மேலாண்மை இயக்குநர் ஆகிய இரண்டு பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவது கடினமாகும்.

SCLகள் நிதி மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனமாகச் செயல்படுகின்றன என்றும், பணிகள் அந்தந்த மாநகராட்சிகளால் செயல்படுத்தப்படுவதால், அந்தந்த SCLகளின் வாரியங்கள் மாநகராட்சி ஆணையரை தலைமை செயல்பாட்டு அதிகாரியாக நியமிக்க ஒப்புதல் அளித்தன என்றும் அரசு பதிலளித்தது (மே 2025). இது தடையற்ற ஒருங்கிணைப்பு, நெறிப்படுத்தப்பட்ட முடிவுகளை தீர்மானித்தல், உகந்த நிதி ஆதார ஒதுக்கீடு மற்றும் மேம்பட்ட துறைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கு உதவியது என்று மேலும் கூறப்பட்டது.

பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டதாலும், மாநகராட்சிகள் தங்கள் சொந்த நிதியிலிருந்து செயல்படுத்த வேண்டிய பல திட்டங்கள் SCL நிதி

மூலம் நிறைவேற்றப்பட்டதாலும், மேற்கூறிய நோக்கங்களை அடைய முடியாததால், பதில் ஏற்கத்தக்கதாக இல்லை.

> **பரிந்துரை 5: SPVகளின் செயல்பாடுகளை நிர்வகிக்க முழுநேர தலைமை செயல்பாட்டு அதிகாரிகளை அரசு நியமிக்க வேண்டும், இதனால் திட்டங்களை பயனுள்ள மற்றும் உரிய நேரத்தில் முடிக்க செயல்படுத்தும் நிறுவனமாக SPV செயல்பட முடியும்.**

### 3.1.4 செயல்பாட்டு சுதந்திரமின்மை

தன்னிச்சையாக இயங்குதலையும், முடிவெடுப்பதில் சுய அதிகாரத்தையும் உறுதி செய்வதே SCMக்கான ஒரு SPVஐ உருவாக்குவதற்கான முக்கிய காரணம் என்பதை SCM வழிகாட்டுதல்களின் இணைப்பு-5ன் பத்தி 4 வலியுறுத்துகிறது. இதற்கு உதவியாக, SCM வழிகாட்டுதல்கள் மாநில அரசு மற்றும் ULBகளை (i) சீர்மிகு நகரத் திட்டம் தொடர்பாக நகராட்சி சபையின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை SPVக்கும் (ii) ULBஇடம் இருக்கும் முடிவெடுக்கும் அதிகாரங்களை SPVன் தலைமை செயல்பாட்டு அதிகாரிக்கும் (iii) நகராட்சி நிர்வாகத் துறையிடம் இருக்கும் ஒப்புதல் அல்லது முடிவெடுக்கும் அதிகாரங்களை SPVன் இயக்குநர்கள் குழுவி மற்றும் (iv) மாநில அரசின் ஒப்புதல் தேவையானவற்றை சீர்மிகு நகரங்களுக்கான மாநில அளவிலான உயர் அதிகாரம் கொண்ட வழிகாட்டுதல் குழுவிற்கு (HPSC) அதிகாரம் வழங்க ஊக்குவிக்கின்றன.

மேற்கண்ட வழிகாட்டுதல்களுக்கு முரணாக, மாநிலத்தில் பின்பற்றப்படும் திட்ட செயல்படுத்துதல் கீழே கொடுக்கப்பட்டுள்ள **விளக்கப்படம் 3.2ல்** விவரிக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.2: மாநிலத்தில் பின்பற்றப்பட்ட திட்ட செயல்படுத்துதல்**



இந்த திட்டத்தை செயல்படுத்துவதில் கண்டறியப்பட்ட மாறுபாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

செயல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட பணிகள் ULBகளால் மட்டுமே உருவாக்கப்பட்டு, SCPகளில் சேர்க்கப்பட்டன. SPV வாரியத்தின் பங்கு, முதல் திட்ட ஒப்புதல் (ULBகளின் முன்மொழிவின் அடிப்படையில்) மற்றும் நிதி செலுத்துதல் ஆகியவற்றிற்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டது, மேலும் SPV வாரியம் எதிர்பார்க்கப்பட்ட தன்னிச்சையான இயங்குதல் மற்றும் முடிவெடுப்பதிலும் திட்டத்தை செயல்படுத்துவதிலும் சுய அதிகாரம் ஆகியவற்றைக் கொண்டிருக்கவில்லை. மேலும், SPVஆல் ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள் மீண்டும் CMAக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டன, பணிகளின் மதிப்பீடு மற்றும் அன்றாட வேலைகள் ULBகளின் ஊழியர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. வழிகாட்டுதல்களில் எதிர்பார்க்கப்பட்ட பெரும்பாலான நடவடிக்கைகள் ULBகளால் மேற்கொள்ளப்பட்டதால், திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தனி SPVஐ உருவாக்கும் நோக்கம் நிறைவேறவில்லை.

அரசு தனது பதிலில் (மே 2025) முடிவெடுப்பதில் HPSCன் பங்கை முன்னிலைப்படுத்திய போதிலும், SPVகளுக்கு தன்னிச்சையான செயல்பாடு குறித்து ஏதும் கூறவில்லை. இருப்பினும், **பத்தி 3.1.3ல்** விவாதிக்கப்பட்டபடி, ULB ஆணையர் CEO ஆகச் செயல்பட்டதால், SPVகளுக்கு முழு சுய அதிகாரம் வழங்கப்படவில்லை என்ற உண்மை நிலை தொடர்கிறது.

**பரிந்துரை 6: அரசு, திட்ட வழிகாட்டுதல்களின்படி செயல்பாட்டு சுதந்திரத்துடன் கூடிய சிறந்த நடைமுறையைப் பின்பற்றுவதற்கு SPVகளுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும்.**

### 3.1.5 வருவாய் ஈட்டாமை

SCM வழிகாட்டுதல்களின் பிரிவு 10.1, SPV தன்னை நிலையானதாக ஆக்கவும், சந்தையிலிருந்து கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக அதன் சொந்த கடன் தகுதியை வளர்த்துக் கொள்ளவும் ஒரு முழுமையான மற்றும் கணிசமான வருவாய் வழி ஏற்படுத்தப்படுவதை மாநிலங்கள்/ULBகள் உறுதி செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறது. SCPகள், பணிகளின் முழு வாழ்க்கை சுழற்சிக்கான நிதித் திட்டத்தை உள்ளடக்கியது. இதில் மூலதனச் செலவு, செயல்பாடு மற்றும் பராமரிப்பு செலவு மற்றும் சீர்மிகு நகரத் திட்டங்களிலிருந்து வருவாய் ஆகியவை அடங்கும். பயனர் கட்டணங்களும் பிற வருவாய் வரவுகளும், செயல்பாடு மற்றும் பராமரிப்பு செலவை ஈடுகட்டப் பயன்படுத்தப்பட்டது.

SCMன் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகள், அதாவது பன்னடுக்கு கார் நிறுத்துமிடம் (MLCP), வணிகக் கடைகள் போன்றவை SPVகளின் நிலைத்தன்மைக்கு பயன்படுத்தக்கூடிய வருவாயை ஈட்டுகிறது.

இருப்பினும், வைப்புத்தொகை, குத்தகை வாடகை, வாகன நிறுத்துமிட கட்டணங்கள்/பயனர் கட்டணங்கள் போன்றவற்றின் மூலம் ஈட்டப்பட்ட

வருவாய், ₹57.72 கோடியை[1] ULBகள் பெற்றதாக தணிக்கையில் கண்டறியப்பட்டது. மேலும், நிதி நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக ULBகள் மானியமாக வேறு எந்த பங்களிப்பையும் வழங்கவில்லை. தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்கள் அதன் செயல்பாடுகளுக்கு SCMன் கீழான மானிய நிதியை முழுவதுமாக சார்ந்திருந்தன. சீர்மிகு நகர மறு ஆய்வுக் கூட்டத்தில், சீர்மிகு நகர சிறப்பு நோக்க நிறுவனங்களின் நிலைத்தன்மை மற்றும் அந்தந்த சீர்மிகு நகரங்களின் வணிக சொத்துக்களை அந்தந்த சிறப்பு நோக்க நிறுவனங்கள் நிர்வகிக்கும் சாத்தியக்கூறுகளுக்கான ஒரு நடைமுறையை ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும், அன்றாட செலவினங்கள் மாநில/ULBகான A&OE மானிய கூறுகளிலிருந்து ஈடுசெய்யப்பட்டன.

அரசு தனது பதிலில் (மே 2025) செயல்படுத்தப்பட்ட திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் ஆதாரத்தை முன்னிலைப்படுத்தியது. மேலும், இந்த ஏலமிடப்பட்ட திட்டங்களிலிருந்து பெறப்படும் அனைத்து வருவாயும் அந்தந்த மாநகராட்சிகளிடமே அவற்றின் நிதி நிலைத்தன்மைக்காக வைக்கப்படும் என்று வாரியங்கள் முடிவு செய்துள்ளதாக பதிலளிக்கப்பட்டது. இருப்பினும், எதிர்கால திட்டங்களுக்கு நிதியளிக்க வழிவகை செய்யக்கூடிய ஈட்டப்பட்ட அத்தகைய வருவாயை SCLகளுக்கு உள்ளபடியாக மாற்றுவது குறித்து பதில் ஏதும் இல்லை. SCLகளின் கடன் தகுதி மற்றும் எதிர்கால நிலைத்தன்மை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் விதமாக, இவ்வருவாய் குறைக்கப்பட்டுள்ளது. மேலும், வருவாயை பகிர்ந்து கொள்ளாதது SCM வழிகாட்டுதல்களுக்கு முரணானது.

எனவே, மேற்கூறியவற்றிலிருந்து **(பத்திகள் 3.1.1 முதல் 3.1.5 வரை)** SPVகளை உருவாக்குவது வெறும் மரபு மட்டுமே என்பதும், அதன் தன்னிச்சையான இயங்குதல், முழுமையாக இல்லாததும், பெரும்பாலும், தன்னிச்சையாக பணிகளைத் தேர்ந்தெடுத்தல், அதன் செயலாக்கம் மற்றும் அத்தகைய செயலாக்கத்திலிருந்து உருவாக்கப்பட்ட சொத்து ஆகியவை SPVகளின் கைகளில் இல்லை என்ற அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்பது தெளிவாகிறது. மேலும், உருவாக்கப்பட்ட அத்தகைய சொத்துக்களிலிருந்து ஈட்டப்பட்ட வருவாய் SPVகளுக்கு அதன் நிலைத்தன்மைக்காக பெறப்படவில்லை/ பகிர்ந்தளிக்கப்படவில்லை. இறுதியாக, SPVன் தலைவர், அதாவது, அதன் தலைமை செயல்பாட்டு அதிகாரி கூட ஒரு ULBன் மாநகராட்சி தலைவராக இருந்ததால், SPVகளின் பணிகளை நிறைவேற்றுதலில் ஒரு தடுமாற்றம் இருந்தது.

**பரிந்துரை 7: SPVன் நிதி நிலைத்தன்மைக்காக ULB மற்றும் SPVக்கு இடையே வருவாய் பகிர்வு நடைமுறையை அரசு உருவாக்க வேண்டும்.**

[1] சென்னை - ₹0.29 கோடி, கோயம்புத்தூர் - ₹19.78 கோடி, ஈரோடு - ₹2.18 கோடி, மதுரை- ₹8.93 கோடி, சேலம் - ₹1.90 கோடி, திருநெல்வேலி - ₹5.33 கோடி மற்றும் திருப்பூர் - ₹19.31 கோடி.

## 3.2 திட்டங்களை செயல்படுத்துவதில் கவனிக்கப்பட்ட குறைபாடுகள்

### 3.2.1 பான்-சிட்டி பணிகள்

தற்போதுள்ள நகரம் முழுமைக்குமான உள்கட்டமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சீர்மிகு தீர்வுகளைப் பயன்படுத்துவதை பான்-சிட்டி மேம்பாடு எதிர்நோக்குகிறது என்று திட்ட வழிகாட்டுதல்களின் பிரிவு 5.1.4 வழிவகை செய்கிறது. தொழில்நுட்பம், தகவல் மற்றும் தரவுகளின் பயன்பாடுகளை ஈடுபடுத்தி போக்குவரத்து நுண்ணறிவு மேலாண்மை அமைப்பு உட்பட போக்குவரத்து துறை மற்றும் கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் திறன்மிகு நீர் அளவிகளைப் (Smart meters) பயன்படுத்துவது உள்ளிட்ட நீர் மேலாண்மை ஆகியவற்றில் உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்துவதற்கு, சீர்மிகு தீர்வுகளைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியதாக இருக்கும். அதன்படி, வழிகாட்டுதல்களுக்கு இணங்க, SCPகள் பான்-சிட்டி முன்முயற்சிகளைச் சேர்த்திருந்தன.

தணிக்கை ஆய்வில், தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்களால் பான்-சிட்டி முன்முயற்சியின் கீழ் ₹1,488.59 கோடி மதிப்புள்ள 37 பணிகள் முதலில் முன்மொழியப்பட்டிருந்தாலும், ₹780.77 கோடி செலவில் 69 பணிகள் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டன. செயல்படுத்த எடுக்கப்படாத சில முக்கியமான திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| சென்னை | : | தெருவிளக்கு கண்காணிப்பு அமைப்பு - ₹248.00 கோடி மற்றும் நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பு - ₹100.00 கோடி |
| கோயம்புத்தூர் | : | சுற்று கண்காணிப்பு கேமராக்கள் (CCTV), கம்பங்கள், சர்வர்கள், சந்திப்பு சுவிட்ச்கள் - ₹80.00 கோடி |
| ஈரோடு | : | மின்-சுகாதாரம் - ₹250.00 கோடி |
| திருநெல்வேலி | : | நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பு - ₹74.90 crore. |
| திருப்பூர் | : | ஒளியிழையியல் அமைப்பு மற்றும் நகர தொடர்பு மையம் - ₹34.15 கோடி; நுண்ணறிவு போக்குவரத்து அமைப்பு - ₹17.04 கோடி; பொதுவான நகர கட்டணம் மற்றும் சேவைகள் செயலாக்க தளம் - ₹13.27 கோடி. |

வழிகாட்டுதல்களில் கொடுக்கப்பட்டுள்ள வரையறையின் அடிப்படையில், 69 திட்டங்களில், ₹209.24 கோடி மதிப்புள்ள 22 திட்டங்கள் மட்டுமே (PPP திட்டங்கள்[2] உட்பட) பான்-சிட்டி முன்முயற்சியின் கீழ் வரும்.

SCMன் கீழ், ₹571.53 கோடி செலவில் 47 திட்டங்களை பான்-சிட்டி முன்முயற்சிகளாக, அதாவது, நுண்ணுர உற்பத்தி மையங்கள் (MCC), எரியூட்டி ஆலைகள், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான வாகனங்கள் வாங்குதல், சூரிய மின் நிலையங்களை நிறுவுதல், பாதாள சாக்கடை தொடர்பான பணிகள் **(இணைப்பு 3.1)** போன்ற புதிய

[2] சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தலா இரண்டு திட்டங்கள்.

உள்கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை தெரிவு செய்யப்பட்ட ஐந்து நகரங்களும்[3] மேற்கொண்டன. இவை ULBகளால் அவர்களின் இயல்பான நிர்வாகத்தால் வழங்கப்பட வேண்டும்.

பணி, உள்கட்டமைப்பு உருவாக்குவதை மட்டுமே உள்ளடக்கியதேயன்றி சீர்மிகு தீர்வின் பயன்பாடு ஈடுபடுத்தப்படவில்லை என்பது தணிக்கை ஆய்வில் தெரியவந்தது. எந்தவொரு தகவல் தொழில்நு ப முன்முயற்சியும் இல்லாமல் உள்கட்டமைப்பை உருவாக்குவது, திட்ட வழிகாட்டுதல்களில் வரையறுக்கப்பட்ட பான்-சிட்டி முன்முயற்சிகளுக்கு முரணானது.

அரசு தனது பதிலில் (மே 2025) பான்-சிட்டி பணிகளின் நன்மைகளை முன்னிலைப்படுத்திய போதும், பான்–சிட்டி வரையறை எல்லையின் கீழ் தகுதியற்ற பணிகளுக்கான பதில் வழங்கவில்லை.

### 3.2.2 தொடர்புடைய துறைகளில் இருந்து முன் ஒப்புதல்/அனுமதி பெறாமை

SCLகள் அவர்களாகவோ அல்லது SCLகளால் நியமிக்கப்பட்ட திட்ட மேலாண்மை ஆலோசகரோ (PMC), பல்வேறு அரசு விதிமுறைகளின்படி ஒப்பந்தங்களை செயல்படுத்தும்போது தேவைப்படும் அனைத்து அவசியமான ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகளையும் அடையாளம் காண வேண்டும். இது தொழில்நுட்ப ஒப்புதலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. பணியைச் செயல்படுத்துவதற்கு, (i) CMDA/DTCPஇடமிருந்து[4] கட்டுமானத்திற்கான கட்டிட அனுமதி; (ii) ஆறுகள்/ஏரிகளை ஒட்டிய பணிகளுக்கு PWD இடமிருந்து[5] பணி அனுமதி மற்றும் (iii) TNPCBன்[6] ஒப்புதல் ஆகியவை தேவைப்படுகின்றன.

தணிக்கை விசாரணையில், ₹1,430.83 கோடி மதிப்புள்ள 81 பணிகளுக்கான DTCP/CMDA/PWDன் சட்டப்பூர்வ ஒப்புதல்களும், ₹175.27 கோடி மதிப்புள்ள 12 பணிகளுக்கான TNPCBன் சட்டப்பூர்வ ஒப்புதல்களும் நிலுவையில் இருப்பதாக அந்தந்த சீர்மிகு நகரங்கள் பதிலளித்தன.

SWM பணிகள், உள்கட்டமைப்பு கட்டுமானம், ஏரிகளை சீரமைப்பது போன்ற குறிப்பிட்ட பணிகளுக்குத் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதி/ஒப்புதல் கட்டாயமாகத் தேவை என்று இருந்தபோதிலும், அவைப் பெறப்படவில்லை/தேவையில்லை எனக் கூறுவதற்கான காரணங்கள்

---

3 கோயம்புத்தூர், ஈரோடு, மதுரை, சேலம் மற்றும் திருப்பூர்.

4 CMDA- சென்னை பெருநகர மேம்பாட்டு ஆணையம் மற்றும் DTCP – நகர்ப்புற மற்றும் கிராமப்புற திட்டமிடல் இயக்குநரகம் (கட்டுமானத்திற்கான (CMDA) அதிகார வரம்பைத் தவிர்த்து) - நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளைத் திட்டமிடும், மேம்படுத்தும் மற்றும் நிர்வகிக்கும் துறைகள்.

5 PWD – பொதுப்பணித் துறை.

6 தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் - சமூகக் கூடம், கல்யாண மண்டபம் போன்ற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் (ஒரு நாளைக்கு 100 கிலோ லிட்டருக்கு மேல் கழிவு நீர் உற்பத்தி கொண்டவை) சிவப்பு வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன - செயல்பட ஒப்புதல் வழங்கும் அதிகார அமைப்பு (5 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும்).

சீர்மிகு நகரங்களால் வழங்கப்படவில்லை என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

எடுத்துக்காட்டாக, **பத்தி 3.3.3 (ii)ல்** விவாதிக்கப்பட்டுள்ளவாறு, சேலம் SCLல் ஒரு நேர்வில், எரியூட்டி ஆலை ஜனவரி 2021ல் நிறைவடைந்திருந்தாலும், TNPCBல் இருந்து 'இயக்குவதற்கு ஒப்புதல்' பெறப்படாத காரணத்தால் பயன்படுத்தப்படவில்லை (ஜூன் 2024). அத்தகைய பணிகளின் தெரிவு செய்யப்பட்ட நேர்வுகள் **இணைப்பு 3.2ல்** விவரிக்கப்பட்டுள்ளன. மேலும், சீர்மிகு நகர மறு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்ட போது, அனைத்து சீர்மிகு நகரப் பணிகளுக்கும் தேவைப்படும் இடங்களில் DTCP திட்ட அனுமதியைப் பெற அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும், தேவைப்பட்ட இடங்களில் சீர்மிகு நகரங்களின் பணிகளுக்கு சட்டப்பூர்வ ஒப்புதல்கள் பெறப்படவில்லை.

செயல்படுத்தப்பட்டப் பணிகளுக்கு அதற்கான அதிகாரிகளிடமிருந்து ஒப்புதல் பெறும் செயல்முறை நடைபெற்று வருவதாகவும், திருப்பூரின் ஆறு பணிகளுக்கும், திருநெல்வேலியின் 12 பணிகளுக்கும் ஏற்கனவே ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாகவும் அரசு பதிலளித்தது (மே 2025). மேலும், சென்னையில் செயல்படுத்தப்படும் பணிகளான உயிரி எரிவாயு ஆலை மற்றும் மயான பூமி நவீனமயமாக்கலுக்கு DTCP, PWD அல்லது TNPCBன் அனுமதி தேவையில்லை என்றும் கூறியது.

இதுபோன்ற பணிகளுக்கு அதற்கான அதிகாரிகளிடமிருந்து ஒப்புதல் பெறுவது கட்டாயம் என்பதால் பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

**பரிந்துரை 8: பணியை உரிய நேரத்தில் முடிக்கவும், அது சுற்றுச்சூழலின் மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துவதால் அதன் பயன்பாட்டை உறுதி செய்யவும், எதிர்காலத்தில் பணிகளைத் தொடங்குவதற்கு முன், தொடர்புடைய துறைகளில் இருந்து தேவையான சட்டப்பூர்வ ஒப்புதல்களைப் பெறுமாறு SCLகளை அரசு அறிவுறுத்த வேண்டும்.**

## 3.3 முக்கிய உள்கட்டமைப்பின் கீழ் திட்டங்களை செயல்படுத்துவதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள்

SCM வழிகாட்டுதல்களின் பத்தி 2.3ன் படி, முக்கிய உள்கட்டமைப்பை வழங்குவதும், மக்களுக்கு ஒரு உயர்ந்த வாழ்க்கைத் தரம், ஒரு சுத்தமான மற்றும் நீடித்த நிலையான சூழல் மற்றும் சீர்மிகு தீர்வுகளின் பயன்பாட்டினை அளிக்கும் நகரங்களை மேம்படுத்துவதே நோக்கமாகும். நீடித்த நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியி மீது கவனம் செலுத்துவதுடன், குறிப்பிட்ட பகுதிகளைக் கண்டறிவதும் எண்ணமாகும். SCM வழிகாட்டுதல்களின்படி முக்கிய உள்கட்டமைப்பின் கீழ் பணியின் செயலாக்கம் மற்றும் கண்டறியப்பட்ட தணிக்கை குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

### 3.3.1 குடிநீர் வழங்கல்

சீர்மிகு நகர வழிகாட்டுதல்களில் SCPகளில் சேர்ப்பதற்கான எதிர்பார்க்கப்பட்ட முக்கியமான அத்தியாவசிய அம்சங்களில் போதுமான குடிநீர் வழங்கல் ஒன்றாகும். சீர்மிகு நகரத்தில் தேசிய மற்றும் உலகளாவிய தரநிலைகளைப் பின்பற்றும் 24x7 சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் இருக்க வேண்டும். மேலும் இந்த குடிநீர் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் போதுமான அளவிற்கு மலிவாக கிடைக்க வேண்டும். முன்மொழிவுகளில் (12 எண்ணிக்கை) திட்டமிடப்பட்ட சில குடிநீர் வழங்கல் பணிகள் (i) 24x7 குடிநீர் வழங்கல், (ii) திறன்மிகு குடிநீர் அளவி பொருத்துதல் (Smart water metering), (iii) குடிநீர் விநியோகம், (iv) வீட்டு சேவை இணைப்புகள் போன்றவை.

குடிநீர் விநியோகத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளில் (21 எண்ணிக்கை) குடிநீர் அளவி (Water Meter) குடிநீர் வழங்கலைப் பெருக்குதல் மற்றும் அதன் விநியோகம், மேல்நிலை தொட்டிகள் (OHT), மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு ஈட்டல் (SCADA) போன்றவை அடங்கும். 21 பணிகளுள் 18 பணிகள் நிறைவடைந்துள்ளன. இதில் ஐந்து பணிகள் சரியான நேரத்திலும், 13 பணிகள் மூன்று முதல் 28 மாதங்கள் வரை தாமதமாகவும் முடிக்கப்பட்டன. தள நிலைமைகள், கோவிட்-19 பெருந்தொற்று, வழக்கு மற்றும் பொருள் வழங்கல் போன்றவற்றின் அடிப்படையில் ஏற்பட்ட மாற்றங்கள் தாமதத்திற்கான காரணங்களாக கூறப்பட்டது.

மேலும் குடிநீர் விநியோகத் திட்டங்களில் மேம்பாடு மற்றும் குடிநீர் விநியோக அமைப்பிற்கான உள் குழாய் இணைப்புகள் போன்ற மூன்று பணிகளின் நிறைவு தேதி நவம்பர் 2020 முதல் ஆகஸ்ட் 2022 வரையாக இருந்த போதிலும், அவை இன்னும் முடிக்கப்படவில்லை. நகர வாரியான பணிகளின் எண்ணிக்கை விவரங்கள் **இணைப்பு 3.3 (அ)**ல் விவரிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பணிகள் குறித்த தணிக்கை குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### (i) குடிநீர் அளவி (Water Meter)

பில்லிங் சுழற்சியின்படி ஒவ்வொரு நுகர்வோருக்கும் குடிநீர் நுகர்வு பில்களை தானியக்கமாக்குவதைச் செயல்படுத்த அளவீடுகளைப் பதிவு செய்யும் தானியங்கி (AMR) அமைப்பை ஏற்படுத்த கோயம்புத்தூர் SCL ₹1.02 கோடியை (டிசம்பர் 2017) வழங்கியது. இந்தப் பணி தேவைக்காக அளவீடுகளை பதிவு செய்யும் 1,131 AMR அளவிகள் பொருத்துவதையும், ஐந்து வருட காலத்திற்கு முழு அமைப்பின் வன்பொருள் மற்றும் மென்பொருள் பராமரிப்பையும் உள்ளடக்கியது. ஜூன் 2018ல் ஒப்பந்ததாரருக்கு ₹0.96 கோடி தொகை வழங்கப்பட்டது. ஆவணங்களை ஆய்வு செய்ததில் அக்டோபர் 2020 வரை 896 AMR அலகுகள் மட்டுமே நிறுவப்பட்டுள்ளதாகவும், 30 செப்டம்பர் 2019 வரை மட்டுமே அளவீடுகள்

புதுப்பிக்கப்பட்டதாகவும் தெரியவந்தது. மேலும், ஆகஸ்ட் 2022ல் 197 AMR அலகுகள் செயல்படவில்லை என்றும் கூறப்பட்டது.

தணிக்கை குறிப்பின் அடிப்படையில், சர்ச்சைக்குரிய தொகையை மீட்டெடுப்பதற்காக ஒப்பந்ததாரருக்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கை தொடங்கப்பட்டதாகவும், 1,131 அளவிகளும் வழங்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளதாகவும் அரசு தனது பதிலில் கூறியது (மே 2025). மேலும் தொழில்நுட்ப சவால்கள் காரணமாக, குறைபாடுள்ள அளவிகளை சரிசெய்வதற்கான முயற்சிகளில் சிறி தாமதங்கள் ஏற்பட்டன. இருப்பினும், ஐந்து ஆண்டுகள் கழிந்த பிறகும் குடிநீர் அளவி நிறுவும் நோக்கம் முழுமையாக அடையப்படவில்லை என்ற உண்மை நிலை தொடர்கிறது.

திருநெல்வேலி SCLல், SCPல் குறிப்பிடப்பட்டுள்ளபடி ₹24.50 கோடி செலவில் திறன்மிகு குடிநீர் அளவி பொருத்தும் (Smart Water Metering) பணி மற்றும் குடிநீர் தர உணர்கருவி பணி (Water quality sensors project) (11,500 வீடுகளுக்கும் மற்றும் 1,000 வணிக வளாகங்களுக்கு ) ஆகியவை மேற்கொள்ளப்படவில்லை. அதற்குப் பதிலாக, HPPSCன் ஒப்புதலைத் தவிர்ப்பதற்காக ஒட்டுமொத்த திட்டச் செலவைப் பிரித்ததன் மூலம் திருநெல்வேலி நகரத்தில் உள்ள நான்கு மண்டலங்களிலும் (4 பணிகள்) உள்ள தலைமை நீரேற்று நிலையங்கள் மற்றும் சேவை நீர்த்தேக்கங்களுக்கு திட்டமிடப்படாத SCADA அமைப்பை (மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் தரவு ஈட்டல் அமைப்பு) ₹46.67 கோடி மதிப்பீட்டில், செயல்படுத்தியது. இதனால் திருநெல்வேலி SCL, மேற்கண்ட நான்கு பணிகளில், ஒரு பணி (கட்டம் IV) டிசம்பர் 2022ல் நிறைவேற்றப்பட்டது. மற்ற மூன்று பணிகள் ஜூலை 2023ல், ஒட்டுமொத்தமாக ₹43.38 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டன.

சோதனை சரிபார்ப்பு காலத்தில் (ஆகஸ்ட் 1 முதல் 7, 2023 வரை) தணிக்கை குடிநீர் வழங்கல் தரவை பகுப்பாய்வு செய்து, இரண்டு நாட்களில் (ஆகஸ்ட் 6 மற்றும் 7, 2023) வேறுபாடுகளைக் கண்டறிந்தது. மேலும் அது எதிர்மறை புள்ளிவிவரங்களை, அதாவது OHTக்கு பெறப்பட்ட குடிநீர் இருப்பு மற்றும் விநியோகம் செய்யப்பட்ட குடிநீரை விட அதிகமாக இருந்தது என்பதும் அறியப்பட்டது. மேலும், சில தலைமை நீரேற்று நிலையங்கள் மீதான SCADAன் நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வின் போது (ஜூன் 2024) பின்வருவன வெளிவந்தது:

- பாளையங்கோட்டை மண்டலத்தில் உள்ள திருமலைக்கொழுந்துபுரம் தலைமை நீரேற்று நிலையங்களில், நான்கில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு மின்சார அளவி டிசம்பர் 2023 முதல் வேலை செய்யவில்லை.
- தச்சநல்லூர் மண்டலத்தின் முருகன்குறிச்சியில் உள்ள OHTல் ஓட்ட அளவி மற்றும் உணர்கருவிகள் பொருத்தப்பட்டிருந்தாலும், நீர் ஓட்டத்தை கண்காணிப்பதற்கான

முக்கியமான தரவு சேகரிப்புக்காக செயல்படும் தொலை முனைய அலகுகள் மற்றும் கட்டுப்பாட்டு புள்ளிகள் அமைக்கப்படவில்லை.

மேற்கூறிய குறைபாடுகள், திறன்மிகு அளவி நிறுவும் முதல் முன்மொழிவையும் சேர்த்து SCADA அமைப்பை நிறுவுவதன் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

அரசு தனது பதிலில் (மே 2025) தணிக்கை குறிப்பின் அடிப்படையில், ஒப்பந்ததாரரிடம் பிரச்சினைகளைச் சரிசெய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், தேவையான அனைத்து திருத்தங்களும் அமைப்பு மேம்பாடுகளும் ஜூலை 2025க்கு முன்பு முழுமையாக செயல்படுத்தப்படும் என்றும் கூறியது. இருப்பினும், பணி முடிந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் நோக்கம் அடையப்படவில்லை என்கிற உண்மை நிலைத் தொடர்கிறது.

### (ii) குடிநீர் விநியோக அமைப்பின் மேம்பாடு

சேலம் SCL நிறுவனம், SCADA அமைப்பு 24x7 குடிநீர் வழங்கல் அமைப்புடன் தற்போதுள்ள வலையமைப்பை மேம்படுத்துவதற்கும் மறுசீரமைப்பதற்கும் ₹74.88 கோடியை (ஜனவரி 2020) முதலீடு செய்தது. இது, முதல் முன்மொழிவான ₹16 கோடியில், 135 LPCD தனிநபர் குடிநீர் விநியோகத்தை இரண்டு நாட்களில் இருந்து தினசரி அடிப்படையில் அதிகரிக்குமாறு ஆகஸ்ட் 2022க்குள் திட்டத்தை நிறைவேற்றும் கால அவகாசத்தைக் கொண்ட நோக்கத்திற்கு மாற்றானதாகும்.

ஜூலை 2024 நிலவரப்படி, முதன்மை விநியோக குழாய், முதன்மை செலுத்தும் குழாய், வீட்டு சேவை இணைப்புகள், ஒரு மில்லியன் லிட்டர் ஒரு நாளைக்கு வீதம் (MLD), 1.5 MLD மற்றும் 2.5 MLD OHT கட்டுமானம் தொடர்பான பணிகள் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பது நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வின் போது கண்டறியப்பட்டது. அதற்கு பதிலளிக்கும் விதமாக (ஜூலை 2024), கோவிட்-19 பெருந்தொற்று, நெடுஞ்சாலைகள்/ரயில்வே போன்ற பிற துறைகளிடமிருந்து ஒப்புதல்/அனுமதி பெறுவதில் தாமதம், உள்ளாட்சித் தேர்தல்கள், அடித்தள மட்டத்தில் கடினப் பாறைகளை அகற்றுதல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் காரணமாக பணிகளின் தாமதத்திற்கு கூறப்பட்டது. மேலும், 86 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், 31 டிசம்பர் 2024க்கு முன்பு பணிகள் முடிக்கப்படும் என்றும் பதிலளிக்கப்பட்டது. மற்ற துறைகளிடமிருந்து பெற வேண்டிய ஒப்புதல்/அனுமதி, திட்டமிடல் கட்டத்திலேயே பெறப்பட்டிருக்க வேண்டும் என்பதாலும், பணிகள் தொடங்குவதற்கு முன்பு மண் பரிசோதனைகள் முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதாலும், இந்தப் பதில் ஏற்கத்தக்கதாக இல்லை.

அரசு தனது பதிலில் (மே 2025) இதுவரை 90 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், மீதமுள்ள பணிகள் ஜூன் 2025க்குள் நிறைவேற்றப்படும் என்றும் கூறியது. இருப்பினும், பணி நிறைவேற்றத்திற்காக முதலில் நிர்ணயித்த உரிய தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் பணிகள் முடிக்கப்படாததால்,

எதிர்பார்க்கப்பட்ட பலனான போதிய குடிநீர் விநியோகம் அடையப்படவில்லை.

மதுரை SCL நிறைவு தேதியான நவம்பர் 2020க்குள் முடிக்க திட்டமிட்டு ₹79.93 கோடி செலவில் 'குடிநீர் விநியோக அமைப்பை மேம்படுத்துதல்' என்ற பணியை மேற்கொண்டது (மே 2019). இருப்பினும், 42 மாதங்கள் கடந்த பிறகும், திட்டப்பணி இன்னும் (ஜூன் 2024) நடைபெற்று கொண்டிருந்தது. பணி நிறைவேற்றலில் தாமதம் தொடர்பான தணிக்கை விசாரணைக்கு, SCL கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் அதன் விளைவாக மனிதவள பற்றாக்குறை, பருவமழை மற்றும் பொருட்களின் பற்றாக்குறை ஆகியவற்றை காரணங்களாகக் கூறியது. இருப்பினும், கோவிட்-19க்குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டதாதலால், இந்த ஆண்டுகளில் மனிதவளம் மற்றும் பொருட்கள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற உண்மையைக் கருத்தில் கொண்டதால், பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. மேலும், குறிப்பிட்ட மைல்கற்களை முடிப்பதில் ஏற்படும் தாமதத்திற்கு ஒப்பந்த உடன்படிக்கை அறுதியிட்ட இழப்பீடுகளை நிர்ணயித்திருந்தாலும், மதுரை SCL இது தொடர்பாக எந்த நடவடிக்கையையும் தொடங்கவில்லை.

அரசின் பதிலில் (மே 2025) அன்றைய நிலவரப்படி 90 விழுக்காடு பணிகள் நிறைவடைந்துள்ளதாகக் கூறியது. இருப்பினும், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்படவில்லை என்ற உண்மை நிலை தொடர்கிறது.

### 3.3.2 மின்சாரப் பணிகள்

சீர்மிகு நகர வழிகாட்டுதல்கள், நகரத்தின் உறுதியளிக்கப்பட்ட மின்சார வழங்கலில், குறைந்தபட்சம் 10 விழுக்காட்டை சூரிய சக்தியிலிருந்து பெறுதலை எதிர்பார்த்தது. கண்காணிப்பு, பில்லிங் மற்றும் வெளிப்படைத்தன்மைக்காக நிகழ்நிலை தளத்துடன் இணைக்கப்பட்டு, திறன்மிகு மின் அளவி பொருத்தப்பட்ட நிலத்தடி மின்தடம் அமைத்தல் உட்பட ABD பகுதியின் அனைத்து பகுதிகளுக்கும் 24x7 மின்சாரம் வழங்கலும் எதிர்பார்க்கப்பட்டது. முன்மொழிவுகளில் (26 எண்ணிக்கை) நோக்கப்பட்ட சில மின் பணிகள் (i) சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி, (ii) நிலத்தடி குழாய் அமைத்தல், (iii) LED தெரு விளக்குகள், (iv) திறன்மிகு மின் அளவி பொருத்துதல் (Smart energy metering) போன்றவை ஆகும்.

மின்சாரப் பணிகளின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளில் (44 எண்ணிக்கை) திறன்மிகு மின் அளவி நிறுவுதல், சூரிய கூரைகள், LED விளக்குகளாக மாற்றுதல், உயிரி எரிவாயு ஆலைகள் போன்றவை அடங்கும். 44 பணிகளுள் 43 பணிகள் முடிக்கப்பட்டன, அவற்றில் 18 பணிகள் குறித்த நேரத்திலும், 25 பணிகள் இரண்டு முதல் 44 மாதங்கள் வரை தாமதத்துடனும் முடிக்கப்பட்டன. தாமதத்திற்கான காரணங்களாக ஆக்கிரமிப்பு, நீதிமன்ற வழக்கு, கோவிட்-19 பெருந்தொற்று போன்றவை கூறப்பட்டன.

சேலத்தில் ஒரு பணி, அதாவது ‘செட்டிச்சாவடியில் 2.5 மெகாவாட் மற்றும் 3.0 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் கிரிட் இணைக்கப்பட்ட தரையில் நிறுவப்படும் சூரிய மின் நிலையங்கள்’ நடைபெற்று கொண்டிருந்தது. மேலும் அதன் எதிர்பார்க்கப்படும் நிறைவு தேதி ஆகஸ்ட் 2024 ஆகும். நகர வாரியான பணிகளின் எண்ணிக்கையின் விவரங்கள் **இணைப்பு 3.3 (ஆ)ல்** விவரிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பணி குறித்த தணிக்கை குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### (i) சூரிய சக்தி

ஈரோடு SCL, மின்சக்தி பகிர்மான அமைப்பினை வலுப்படுத்தி, மின்வெட்டுகளை 5.6 விழுக்காட்டிலிருந்து 0.5 விழுக்காட்டிற்கும் குறைவாக ஆக்கவும் (₹29.50 கோடி), அரசு கட்டிடங்களில், ₹15 கோடி செலவில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் (MNRE) சூரிய மின் திட்டத்தின் மூலம் சுத்தமான எரிசக்தியின் பங்கை, 1.0 மெகாவாட்டிற்கும் குறைவிலிருந்து, 5.0 மெகாவாட் வரை அதிகரிக்க, சூரிய மின்சக்தி உற்பத்திக்காக சூரிய கூரைப் பலகைகளை நிறுவுதலையும் சேர்த்து, ₹44.50 கோடி செலவில் எரிசக்தி பாதுகாப்பு, பணிகளை நிறைவேற்ற முன்மொழிந்தது. ஈரோடு SCL, ₹2.72 கோடி செலவில் 12 இடங்களில், மொத்தம் நாளொன்றுக்கு 2,560 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட, சூரிய கூரைப் பலகைகளை மட்டுமே நிறுவியதும், மின் பகிர்மான அமைப்பினை வலுப்படுத்த எந்தப் பணியையும் செயல்படுத்தவில்லை என்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது. இதனால், SCL தங்களின் நோக்கங்களில் ஒன்றான, மின்வெட்டுகளைக் குறைப்பதற்கான எரிசக்தி பாதுகாப்பு திட்டத்தை செயல்படுத்துவதைப் பரிசீலிக்கத் தவறிவிட்டது. இதற்கு பதிலளிக்கும் விதமாக, ஈரோடு SCL பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு நிதிகளின் கீழ் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மின் பகிர்மான அமைப்பு பணி செயல்படுத்தப்பட்டதாக கூறியது (டிசம்பர் 2023). இப்பணி ஒருங்கிணைப்பின் கீழ் பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் பிற முக்கியமான பணிகள் அதன் ஒப்புதலுக்காக முன்மொழிவில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்பதால் இந்த பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை. மேலும், நிறுவப்பட்ட சூரிய கூரை மின் பலகைகளில், 10 இடங்களில் உள்ள பலகைகள் மின் கிரிட்டுடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வந்தன. மீதமுள்ள இரண்டு இடங்களில் சூரிய பலகைகள் இதுவரை (ஜூலை 2024) மின் கிரிட்டுடன் இணைக்கப்படாததால், இவ்விடங்களில் செய்யப்பட்ட செலவினம் பலனளிக்காமல் உள்ளது.

அரசு தனது பதிலில் (மே 2025) தணிக்கை குறிப்பினை ஏற்றுக்கொண்டு, அனைத்து எதிர்கால புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பணிகளிலும் MNRE அல்லது பிற தொடர்புடைய திட்டங்களின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட உதவித்தொகைகள் மற்றும் மானியங்களுக்கு சரியான நேரத்தில் விண்ணப்பிப்பதை உறுதிசெய்ய உரிய கவனம் செலுத்தப்படும் என்றும்,

அத்தகைய குறைபாடுகள் மீண்டும் நிகழாமல் தடுக்க தேவையான நிறுவன நடைமுறைகள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறியது.

சேலம் SCL, சேலம் மாநகராட்சியின் 17 கட்டிடங்களில் 'சூரிய கூரை பலகைகள் நிறுவுதல்' பணிக்காக ₹5.40 கோடியும் (கட்டம் I - ₹2.97 கோடி மற்றும் கட்டம் II - ₹2.43 கோடி). 'செட்டிச்சாவடியில் 2.5 மெகாவாட் மற்றும் 3.0 மெகாவாட் திறன் கொண்ட கிரிட் இணைக்கப்பட்ட தரையில் நிறுவப்படும் சூரிய மின் நிலையங்களுக்கு' ₹30.55 கோடியும் முதலீடு செய்தது. செட்டிச்சாவடியில் உள்ள சூரிய மின் நிலையங்களிலிருந்து கோரிமேடு உப மின் நிலையத்திற்கு (கிரிட் இணைப்பு வேலை) மின் கடத்துதல் (wheeling) மற்றும் மின்தொடரமைப்பு பணிகளுக்காக (transmission) ₹1.80 கோடி கூடுதல் திட்ட செலவு முதலீடு செய்யப்பட்டது. சூரிய கூரை பலகை பணிகள் முடிக்கப்பட்டு செயல்படுவது நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூலை 2024) கண்டறியப்பட்டது. இருப்பினும், 2.5 மெகாவாட் மற்றும் 3.0 மெகாவாட் திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி நிலையங்களைப் பொறுத்தவரை, ₹26.24 கோடி செலவில் பலகைகள் அமைக்கப்பட்டிருந்தாலும், கிரிட் இணைப்பு பணிகள் முடிக்கப்படாததால் நிலையங்களை இயக்க முடியவில்லை. நேரடி கூட்டு தேர்ந்தாய்வு (ஜூலை 2024) காலத்தில், மின்தொடரமைப்புக்கான கம்பம் அமைக்கும் பணி நடைபெற்று கொண்டிருந்தது. மேலும் ஜூலை 2024 நிலவரப்படி, 20 விழுக்காடு பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன என்பதும் சூரிய பலகைகள் மற்றும் மின் நிலையமைக்கப்பட்ட இடத்தின் முறையற்ற பராமரிப்பும் கண்டறியப்பட்டது. அதற்கு பதிலளித்த சேலம் SCL (ஜூலை 2024) மின் கடத்துதல் அமைக்கும் பணி முடிந்த பிறகு சூரிய மின் நிலையங்களைப் பராமரிப்பதற்கான வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் என்றும், சூரிய மின் நிலையங்களை சுத்தம் செய்யும் பணியும் மேற்கொள்ளப்படும் என்றும் கூறியது.

அரசு தனது பதிலில் (மே 2025) தணிக்கை குறிப்பினை ஏற்றுக்கொண்டு, அனைத்து முக்கிய மின் கடத்துதல் மற்றும் ஆன்-கிரிட் அமைப்புகளும் முடிக்கப்பட்டுள்ளதாகவும், இறுதி கேபிளிங் மற்றும் மின் கம்பியமைத்தல் (wiring) பணிகள் மட்டுமே மீதமுள்ளதாகவும், இப்பணிகள் 20 ஜூன் 2025க்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறியது.

இருப்பினும், பணிகள் முடிவடையாத காரணத்தால், சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் நோக்கம், அது செயல்படத் தொடங்கியிருக்க வேண்டிய தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் இன்னும் முழுமையாக அடையப்படவில்லை என்ற உண்மை நிலை தொடர்கிறது.

### (ii) மின்னாற்றல் சேமிக்கும் விளக்கு (LED lights)

திருநெல்வேலி SCL, தற்போதுள்ள சோடியம் விளக்குகளை (SVL), LED தெருவிளக்குகளாக மாற்றுதல் மற்றும் கூடுதல் புதிய LED தெருவிளக்குகளைப் பொருத்துதல் என்கிற நான்கு பணிகளை (திட்டமிடப்படாதவை) ₹45.75 கோடி செலவில் செயல்படுத்தியது.

திருநெல்வேலி SCL, எந்தவொரு முன்கூட்டிய மூலதனச் செலவும் இல்லாமல், மின்சார அமைச்சகம் (MoP), மத்திய அரசால் நிதியளிக்கப்பட்ட தேசிய LED தெருவிளக்கு திட்டத்தின் (SLNP) கீழ், எரிசக்தி திறன் சேவைகள் நிறுவனம் (EESL) எனும் செயல்படுத்தும் முகமை மூலம், மாற்று/புதிய தெருவிளக்குகள் திட்டத்திற்கான பலனை அடையவில்லை என்பது கண்டறியப்பட்டது.

அரசு தனது பதிலில் (மே 2025) எதிர்காலத்தில் இதே போன்ற பணிகளில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியது.

இருப்பினும், SCM நிதி, LED விளக்குகள் கொள்முதலுக்காக பயன்படுத்தியது மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை EESLல் இருந்து திரும்பப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் ஆகியவற்றிற்கான தீர்வு குறித்து பதிலில் குறிப்பிடப்படவில்லை.

### 3.3.3 திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட சுகாதாரம்

கழிவுகளால் ஏற்படும் நில நிரப்புதல் மிகக் குறைவாக இருக்கும் வகையில் சுருக்குவதே சீர்மிகு நகர உள்கட்டமைப்பின் முக்கிய நோக்கம் ஆகும். உருவாக்கப்படும் அனைத்து திடக்கழிவுகளும் உருவாக்கப்பட்ட இடத்திலேயே பிரிக்கப்பட்டு மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகின்றன. மக்கும் கழிவுகள் நகரத்தில் செடிகள் வளர்க்கப் பயன்படுத்துவதற்காக உரமாக்கலுக்கு அனுப்பப்படுகின்றன. கழிவுகள் மூலம் எரிசக்தி உருவாக்குதல் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. மேலும் அனைத்து மக்களுக்கும் சுகாதார வசதிகள் கிடைக்கின்றன. SWM பணிகள் (35 எண்ணிக்கை) உட்பட முன்மொழிவுகளில் எதிர்பார்க்கப்பட்ட (i) மழைநீர் வடிகால் மற்றும் மழைநீர் சேகரிப்பு, (ii) பாதாளச் சாக்கடைத் திட்டம் (iii) திடக்கழிவுகளைப் பிரித்தெடுத்தல் (iv) தண்ணீர் மறுபயன்பாட்டிற்காக மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம் போன்ற சில சுகாதாரத் திட்டங்களும் இருந்தன.

சுகாதாரத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளில் (87 எண்ணிக்கை) SWM, மழை நீர் வடிகால், பாதாளச் சாக்கடைத் திட்டம், நுண்ணுர உற்பத்தி மையங்கள், உயிரி அகழ்ந்தெடுத்தல் பணிகள், மின்கலனால் இயங்கும் வாகனங்களை (BOVகள்) வாங்குதல் போன்றவைகள் உள்ளடங்கின. 87 பணிகளுள் 80 பணிகள் நிறைவடைந்தன. இதில் 29 பணிகள் சரியான நேரத்திலும், 51 பணிகள் ஒன்று முதல் 41 மாதங்கள் வரை தாமதமாகவும் முடிக்கப்பட்டன. கோவிட்-19 பெருந்தொற்று, ஆக்கிரமிப்பு, பயோ-கேப்பிங் வேலைகளில் தாமதம் போன்றவை தாமதத்திற்கான காரணங்களாகக் கூறப்பட்டன.

மேலும் ஏழு பணிகள், அதாவது மாம்பலம் கால்வாய்களில் மேம்பாடு, பாதாளச் சாக்கடை பணிகள், எரியூட்டி ஆலை ஆகியவை மே 2022 மற்றும் ஜூன் 2024க்கு இடையில் நிறைவடைந்திருக்க வேண்டும் என்றாலும், இன்னும் முடிக்கப்படவில்லை. நகர வாரியாகப் பணிகளின் எண்ணிக்கையின் விவரங்கள் **இணைப்பு 3.3 (இ)**ல் விவரிக்கப்பட்டுள்ளன.

முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பணிகள் குறித்த தணிக்கை குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### (i) நுண்ணுர உற்பத்தி மையங்கள்

நுண்ணுர உற்பத்தி மையங்கள் (MCC) என்பது ஒரு பரவலாக்கப்பட்ட கழிவு பதப்படுத்தும் வசதி ஆகும். இம்மையங்களில் ஒரு குறிப்பிட்ட பகுதி அல்லது காலனியில் உள்ள வீடுகளில் இருந்து முதன்மை சேகரிப்பு மூலம் சேகரிக்கப்படும் திடக்கழிவுகள் அறிவியல் ரீதியாக கையாளப்படுகின்றன. தெரிவு செய்யப்பட்ட நான்கு சீர்மிகு நகரங்களில் 70 MCCகளை நிர்மாணிப்பதில் தணிக்கை கண்டறிந்த குறைபாடுகள் பின்வரும் **அட்டவணை 3.2ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2: MCC கட்டுமானத்தில் கண்டறியப்பட்ட குறைபாடுகள்**

| நகரம் | பணியின் விவரங்கள் | பணியின் நிலை | தணிக்கை குறிப்பு |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | ₹21.22 கோடி செலவில் 153 மெட்ரிக் டன் கொள்ளளவுடன் கட்டப்பட்ட 36 MCCகள். | கட்டி முடிக்கப்பட்ட 36 MCCகளில், ஐந்து MCCகள் பொருட்கள் மீட்பு வசதியாக மாற்றப்பட்டு வந்தன. ஒன்று BOVக்கான சார்ஜிங் நிலையமாகப் பயன்படுத்தப்படுகிறது, மேலும் ஒன்று சட்ட நடவடிக்கை காரணமாக இயங்கவில்லை. | MCCகளை மாற்றியதற்கான குறிப்பிட்ட காரணங்கள் எதுவும் தணிக்கைக்கு வழங்கப்படவில்லை. |
| மதுரை | ₹12.33 கோடி செலவில் கட்டப்பட்ட 16 MCCகள். | முதலில் 18 MCCகளை கட்ட திட்டமிடப்பட்டது. இடத் தகராறு காரணமாக இரண்டு MCCகளின் கட்டுமானம் கைவிடப்பட்டது. 16 MCCல், 12 MCCகள் ஷ்ரெடர்/கன்வேயர் பெல்ட்கள் செயல்படாததால் இயங்கவில்லை. | MCCகளைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| திருப்பூர் | ₹10.37 கோடி மதிப்பீட்டில் 13 MCCகளின் கட்டுமானம் | 13 MCCகளில், இரண்டு MCCகள் பொதுமக்கள் எதிர்ப்பின் காரணமாக, கட்டப்பட்டதிலிருந்தே பயன்படுத்தப்படவில்லை. நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூன் 2024), ஷ்ரெடர் இயந்திர கன்வேயர் பெல்ட்டின் பழுது காரணமாக இரண்டு MCCகள் இயங்கவில்லை என்பதை தணிக்கை கண்டறிந்தது. | ஷ்ரெடர் இயந்திரங்களை பழுதுபார்த்து, MCCகளை செயல்பட வைக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. |
| சேலம் | ₹4.67 கோடி செலவில் கட்டப்பட்ட ஐந்து MCCகள் | ஆறு MCCகளைக் கட்ட முன்மொழியப்பட்டது. ஐந்து MCCகள் கட்டப்பட்ட நிலையில், எஞ்சிய ஒன்று பொதுமக்களின் எதிர்ப்பால் கட்டப்படவில்லை. ஒப்பந்ததாரருக்கு அதிகமாக ₹54 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. | பதிலில் (ஜூலை 2024) சில கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. கூடுதல் பணிகளின் செலவு ₹5.72 இலட்சம் மட்டுமே என்பதால் அதிகமான ₹48 இலட்சத்தை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்க வேண்டியிருந்ததால் பதில் ஏற்கத்தக்கதாக இல்லை. |

தெரிவு செய்யப்பட்ட நான்கு சீர்மிகு நகரங்களில் கட்டப்பட்ட 70 MCCகளில், 23 MCCகள் செயல்படவில்லை. ஆதலால், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் முழுமையாக எட்டப்படவில்லை.

அரசு, (i) கோயம்புத்தூரில், MCCகள் உலர் கழிவு மேலாண்மையை கையாள மாற்றப்பட்டன, (ii) மதுரையில் இரண்டு MCCகளுக்கு தேவையான திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படும், (iii) திருப்பூரில் தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட இரண்டு MCCகளும் முழுமையாக இயங்கும் வகையில் உள்ளதுடன் இன்றுவரை நல்லமுறையில் செயல்படுகின்றன, (iv) சேலத்தில் திருத்தப்பட்ட அளவீடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவு தாக்கங்களை உள்ளடக்கிய பணிச்சீட்டு ஒப்புதலுக்காக தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இறுதி செலவுக் குறைப்பு மற்றும் மீட்பு விவரங்கள் தொகுக்கப்படும் என்று பதிலளித்தது (மே 2025).

இருப்பினும், கோயம்புத்தூரிலுள்ள MCCன் சமீபத்திய சட்டப்பூர்வ நிலை குறித்தும் மற்றும் மதுரையில் மீதமுள்ள 10 MCCகள் குறித்தும் பதில் ஏதும் கூறப்படவில்லை.

### (ii) எரியூட்டி ஆலைகள்

இரண்டு SCLகளில் எரியூட்டி ஆலைகளை நிறுவுவதில் பின்வரும் குறைபாடுகள் தணிக்கையில் கண்டறியப்பட்டன. அவை **அட்டவணை 3.3ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.3: எரியூட்டும் ஆலையை நிறுவுவதில் காணப்பட்ட குறைபாடுகள்**

| நகரம் | பணியின் விவரங்கள் | பணியின் நிலை | தணிக்கை குறிப்பு |
|---|---|---|---|
| ஈரோடு | ₹1.67 கோடி மதிப்பீட்டில் எரியூட்டி ஆலை கட்டம் I நிறுவுதல். | இந்த ஆலை கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வந்தது. இருப்பினும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து 'இயக்குவதற்கான ஒப்புதல்' அனுமதியின் செல்லுபடியாகும் காலம் 31-03-2023 அன்று காலாவதியானது. | தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து அனுமதி புதுப்பிக்கப்படவில்லை (ஜூலை 2024). இருப்பினும், ஆலை கட்டாய அனுமதி இல்லாமல் இயக்கப்பட்டது. |
| | ₹1.78 கோடி மதிப்பீட்டில் எரியூட்டும் ஆலையின் கட்டம் II நிறுவுதல். | தீ பட்டை பொருத்துதல், மோட்டார் பொருத்துதல், தணிப்பான், கன்வேயர் போன்ற பணிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை (ஜூலை 2024). | இரண்டாம் கட்டத்தின் இந்த தாமதம் காரணமாக, மக்காத கழிவுகளை அகற்றுவதற்கான நோக்கம் முழுமையாக எட்டப்படவில்லை. |
| சேலம் | ₹3.19 கோடி மதிப்பீட்டில் எரியூட்டும் ஆலை (ஒரு நாளைக்கு 25 டன்கள் வீதம்) நிறுவுதல். | ஜனவரி 2021ல் பணிகள் நிறைவடைந்தாலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து 'இயக்குவதற்கான ஒப்புதல்' அனுமதியைப் பெறாததால் ஆலை பயன்பாட்டுக்கு வரவில்லை (ஜூலை 2024). | 'வெப்ப ஆற்றல் மீட்பு அமைப்பு' ஏற்படுத்துவதும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து 'செயல்படுத்துவதற்கான ஒப்புதல்' அனுமதியைப் பெறுவதும் ஒப்பந்ததாரரின் வரம்பிற்குள் இருந்தும் ஒப்பந்ததாரர் அதைச் செயல்படுத்தத் தவறிவிட்டார். அறிவிப்புகள் வழங்கப்பட்ட போதிலும், மேற்கூறியவற்றை சரிசெய்ய ஒப்பந்ததாரர் முன்வரவில்லை. |

இது சுட்டிக்காட்டப்பட்ட பிறகு, அரசு (i) ஈரோட்டில் கட்டம் I தொடர்பாக 'இயக்குவதற்கான ஒப்புதல்' இன்னும் பெறப்படவில்லை. ஆனால், மார்ச் 2025ல் TNPCB இடமிருந்து அனுமதி கட்டம் IIக்கு பெறப்பட்டு, ஆலை தற்போது இயங்கி வருகிறது, (ii) சேலத்தைப் பொறுத்தவரை, நிலுவையில் உள்ள பணிகளை நிறைவேற்ற, எரியூட்டி நிறுவுதல் மற்றும் கழிவு வெப்ப மீட்பு அமைப்புகளில் நிபுணத்துவம் பெற்ற பிற தகுதிவாய்ந்த தொழில்நுட்ப நிறுவனங்கள் அணுகப்பட்டுள்ளன. இது குறித்து, இனிவரும் அனைத்து முன்னேற்றங்களும் தணிக்கைக்கு தெரிவிக்கப்படும் என்று பதிலளித்தது (மே 2025). இருப்பினும், ஆலை செயல்படுவதற்கு முன்பு பெறப்பட வேண்டிய கட்டாய அனுமதி பெறப்படவில்லை என்பதும், எரியூட்டி ஆலை (சேலம்) நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படாமல் கிடப்பதால், எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் முழுமையாக அடையப்படவில்லை என்ற உண்மை நிலை தொடர்கிறது.

### (iii) மின்கலனால் இயங்கும் வாகனங்கள்

இரண்டு SCLகளில் மின்கலனால் இயங்கும் வாகனங்களை (BOVகள்) இயக்குதலில் தணிக்கையில் கண்டறியப்பட்ட பின்வரும் குறைபாடுகள் **அட்டவணை 3.4ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.4: BOVகளை இயக்குதலில் காணப்பட்ட குறைபாடுகள்**

| நகரம் | பணியின் விவரங்கள் | தணிக்கை குறிப்பு | SCLன் பதில் |
|---|---|---|---|
| சேலம் | ஆகஸ்ட் 2018/ பிப்ரவரி 2019 ஆகிய மாதங்களில் ₹3.01 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 179 BOVகள். | நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூலை 2024), 173 BOVகள் இயங்காததும், அவற்றில் 44 BOVகள் பழுதுபார்க்கக்கூடிய நிலையிலும், மீதமுள்ள 129 BOVகள் பழுதுபார்க்க முடியாத நிலையில் இருப்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது. | பதிலில் (ஜூலை 2024), 129 BOVகளைப் பொறுத்தவரை, ஒரு BOVக்கு ₹1.25 இலட்சம் வீதம் தேவைப்பட்டதால், இந்த BOVகளைப் பழுதுபார்க்க முயற்சி செய்யப்படவில்லை என்று கூறப்பட்டது. 44 BOVகளைப் பொறுத்தவரை, ஒரு BOVக்கு ₹80,000 வீதம் தேவைப்படுகிறது, மேலும் அவை பொது நிதியைப் பயன்படுத்தி இயங்கும் நிலைக்கு கொண்டு வரப்படும். |
| மதுரை | அக்டோபர் 2019ல் ₹4.49 கோடி செலவில் கொள்முதல் செய்யப்பட்ட 259 BOVகள். | 259 BOVகளில், 82 BOVகள் மின்கலன் கோளாறு காரணமாக நவம்பர் 2022 முதல் இயங்கவில்லை. | மேற்கண்ட BOVகளின் பயன்பாட்டின் நிலை மற்றும் பயன்பாட்டிற்கு கொண்டுவர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தணிக்கைக்கு தெரிவிக்கப்படவில்லை (ஜூலை 2024). |

அரசு தனது பதிலில் (மே 2025) சேலம் SCL முன்பு அளித்த பதிலை மீண்டும் வலியுறுத்தியது, மேலும் BOVகளை பழுதுபார்ப்பதற்கு அல்லது மறுசீரமைப்பதற்கு பொருளாதார ரீதியான மாற்று சாத்தியக் கூறுகள் குறித்து, மின்சார நகர்வு மற்றும் பேட்டரி புதுப்பித்தலில் நிபுணத்துவம் பெற்ற பல தொழில்நுட்ப நிறுவனங்களுடன் நகராட்சி முன்கூட்டியே

ஈடுபட்டுள்ளது என்றும் கூறியது. மதுரையைப் பொறுத்தவரை, உத்தரவாத காலத்திற்குள் இருக்கும் 42 BOVகள் குறித்து மொத்த விற்பனையாளரிடமிருந்து பதில் கிடைக்காததால், நிறுத்தி வைக்கப்பட்ட ₹31 இலட்சம் கழிக்கப்படும் என்றும், மீதமுள்ள 40 BOVகளுக்கு (உத்தரவாத காலத்தை தாண்டிய), மதுரை மாநகராட்சியின் பொது நிதியைப் பயன்படுத்தி பழுதுபார்ப்பு மேற்கொள்ளப்படும் என்றும் பதிலளிக்கப்பட்டது.

எனவே, உரிய காலத்தில் பராமரிப்பு இல்லாததால், 129 BOVகள் (சேலம்) நான்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் பழுதுபார்க்கும் நிலையையும் மீறி இருந்ததால், இந்த வாகனங்கள் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்த முடியாததாகிவிட்டன என்பதும், மேலும் உரிய காலத்தில் பராமரிப்பு இல்லாததால், 82 BOVகளின் (மதுரை) சேவைகளை மூன்று ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்த முடியவில்லை என்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது.

### (iv) மாம்பலம் கால்வாய் மேம்பாட்டுப் பணிகள்



விளக்கப்படம் 3.3: நடைபெற்று வரும் கால்வாய் பணிகள்

SCMன் கீழ், சென்னை மாம்பலம் கால்வாயில், ₹59.42 கோடி செலவில் கால்வாய் உட்பூச்சு, பகிரப்பட்ட பாதை, மிதிவண்டிப் பாதை, பூங்கா மற்றும் பசுமைப் பகுதிகள் அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய வெள்ளப் பாதுகாப்பு தடுப்புச் சுவர் கட்டுதல் போன்ற மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன (பிப்ரவரி 2021). மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதால், தமிழ்நாடு அரசு ஆலோசனைக் குழுவை[7] நியமித்தது, இது மாம்பலம் கால்வாய் திட்டத்தை மறுவடிவமைப்பு செய்ய பரிந்துரைத்ததையடுத்து (மே 2022) அதற்கேற்ப முதல் வடிவமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டன. இதன் காரணமாக, முதல் வடிவமைப்பில் சேர்க்கப்பட்டிருந்த கூறுகளான பகிரப்பட்ட பாதை, மிதிவண்டிப் பாதை, பூங்கா மற்றும் பசுமைப் பகுதிகள் போன்றவை நீர் ஓட்டம் பாதிக்கப்படும் என்ற காரணத்திற்காகவும், வண்டல் நீக்கும் பணியை சீராக மேற்கொள்வதற்காகவும் கைவிடப்பட்டன. ஆகஸ்ட் 2022ல் பணி மீண்டும் தொடங்கப்பட்டது. பணி முடிக்கப்படாவிட்டால் அபராதம் விதிக்கப்படும் என்ற அறிவுறுத்தல்களுடன், 31 மார்ச் 2024 வரை கால அவகாச நீட்டிப்பு வழங்கப்பட்ட போதிலும் (பிப்ரவரி 2024), பணிகள் முடிக்கப்படவில்லை (ஜூன் 2024) என்று நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது தணிக்கையில் கண்டறியப்பட்டது **(விளக்கப்படம் 3.3).** பணிகளை முடிப்பதில் தாமதத்திற்கான காரணங்கள் மற்றும் விதிக்கப்பட்ட அபராத விவரங்கள் தணிக்கைக்குத் தெரிவிக்கப்படவில்லை. மார்ச் 2024 நிலவரப்படி ₹48.19 கோடி செலவினம் ஏற்பட்ட போதிலும், மேம்பாட்டுப்

[7] தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்ட சென்னை பெருநகரத்தில் வெள்ளத்தைத் தணித்தல் மற்றும் மேலாண்மை செய்வதற்கான ஆலோசனைக் குழு.

பணிகளை முடிப்பதில் ஏற்படும் தாமதம், மழைக்காலத்தின் போது ABD பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயத்தைக் காட்டுகிறது.

சர் தியாகராய சாலைக்கு அருகிலுள்ள மாம்பலம் கால்வாய் சந்திப்பில் மேம்பாட்டுப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக அரசு பதிலளித்தது (மே 2025). வெள்ளப் பாதுகாப்புத் தடுப்புச் சுவர் (ரீச் 5) பணியை முடிப்பதற்கு ஏதுவாக 31 ஆகஸ்ட் 2024 வரை கால நீட்டிப்புக்கான ஆணையரின் ஒப்புதலைக் கோரும் முறையான குறிப்பு விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

இருப்பினும், கால நீட்டிப்புக்கான ஒப்புதல் மற்றும் இன்றைய நிலவரப்படி பணியின் உண்மையான நிறைவேற்றம் குறித்து பதில் ஏதும் கூறப்படவில்லை என்ற நிலை தொடர்கிறது.

### 3.3.4 திறமையான நகர்ப்புர இயக்கம், பொது போக்குவரத்து (பாதசாரிகளுக்கு உகந்த பாதைகள் மற்றும் மோட்டார் அல்லாத போக்குவரத்து - நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பு)

SCM வழிகாட்டுதல்களில் எதிர்நோக்கப்பட்ட சீர்மிகு நகரங்களில் விரிவான வளர்ச்சியின் அம்சங்களில், பல்வேறு போக்குவரத்து வாய்ப்புகளை ஊக்குவித்தல் மற்றும் வாகனங்கள் மற்றும் பொது போக்குவரத்திற்கு மட்டுமல்லாமல், பாதசாரிகள் மற்றும் மிதிவண்டி ஓட்டுபவர்களுக்கும் சாலையமைப்பை உருவாக்குதல் அல்லது புதுப்பித்தல் என்பதும் ஒன்றாகும். முன்மொழிவுகளில் (51 எண்ணிக்கை) எதிர்பார்க்கப்பட்ட சில நகர்ப்புற இயக்கம் மற்றும் பொது போக்குவரத்து திட்டங்களானது (i) வாகன நிறுத்துமிட மேலாண்மை அமைப்பு, (ii) மிதிவண்டி ஓட்டுவதற்கும் நடைபயிற்சிக்குமான மோட்டார் அல்லாத போக்குவரத்துக்கான சாலைகள், (iii) நுண்ணறிவு போக்குவரத்து மேலாண்மை அமைப்பு, (iv) சீர்மிகு பேருந்து நிறுத்தப் பயணியர் நிழலகம், (v) போக்குவரத்து குறியீடுகள் போன்றவை ஆகும்.

திறமையான நகர்ப்புற இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளில் (98 எண்ணிக்கை) பன்னடுக்கு கார் நிறுத்துமிடம், மோட்டாரல்லாத போக்குவரத்துக்கான பொதுவான பாதை (NMT), பாதசாரி பிளாசா, பழைய பேருந்து நிலைய மறுமேம்பாடு போன்றவை அடங்கும். 98 பணிகளில், 97 பணிகள் முடிக்கப்பட்டன. இதில் 26 பணிகள் சரியான நேரத்திலும், 71 பணிகள் ஒன்று முதல் 48 மாதங்கள் வரை தாமதத்துடன் முடிக்கப்பட்டன. கோவிட்-19 பெருந்தொற்று, பாதாள சாக்கடை பணிகளை முடிப்பதில் தாமதம், பிற துறை ஒப்புதல்களைப் பெறுவதில் தாமதம் போன்றவைகள், இந்த தாமதம் ஏற்பட்டதற்கு காரணங்களாக கூறப்பட்டது.

மேலும், மதுரையில் 'பெரியார் பேருந்து நிலையம் மற்றும் வளாக மேம்பாடு' என்ற ஒரு பணி, ஜூன் 2020ல் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும், இன்னும் முடிக்கப்படவில்லை. நகர வாரியான பணிகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் **இணைப்பு 3.3 (ஈ)ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பணிகள் குறித்த தணிக்கை குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### (i) வாகன நிறுத்துமிட வசதிகள்

இரண்டு SCLகளில் வாகன நிறுத்துமிட வசதிகளை உருவாக்குவதில் தணிக்கையால் கண்டறியப்பட்ட பின்வரும் குறைபாடுகள் **அட்டவணை 3.5ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.5: வாகன நிறுத்துமிட வசதிகளை உருவாக்குவதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள்**

| நகரம் – பணி விவரங்கள் | பணியின் நிலை | குறிப்புகள் | மே 2025 தேதியிட்ட அரசின் பதில் |
|---|---|---|---|
| **கோயம்புத்தூர்:** DB சாலையில் ₹41.56 கோடி செலவில் 373 கார் நிறுத்துமிடங்களுடன் கூடிய MLCPன் கட்டுமானம். | இந்தப் பணி முடிக்கப்பட்டு, ஆகஸ்ட் 2022 முதல் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டது. தானியங்கி வசதியைப் பராமரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படாததால், ஜனவரி 2024 முதல் தானியங்கி கார் வசதி இயங்கவில்லை. | பணியின் எதிர் பார்க்கப்பட்ட நோக்கத்தை தோற்கடிக்கும் விதமாக, தரை தளத்திலும் கட்டிடத்திற்கு வெளியே உள்ள திறந்தவெளி வளாகத்திலும் மட்டுமே நிறுத்துமிட வசதி இருந்தது நேரடி கூட்டு தேர்ந்தாய்வில் (ஜூலை 2024) வெளிப்பட்டது. மேலும், MLCPஐ முழுமையாக நிரப்புதலுக்கு 100 KVA மட்டுமே போதுமானது என்றாலும், 300 KVA ஒப்பந்தசுமை பெறப்பட்டுள்ளது. தற்போதைய ஒப்பந்த சுமையைக் குறைக்க TANGEDCOவிடம் கோருவதற்கான முன்மொழிவு (ஜனவரி 2023) உருவாக்கப்பட்டாலும், இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் இன்னும் இறுதி செய்யப்படவில்லை (ஜூலை 2024). | வருவாய் ஈட்டலுடன் MLCPஐ முழுமையாக இயங்க செய்யும் பொருட்டு, அனைத்து தொழில்நுட்ப மற்றும் டெண்டர் பிரச்சனைகளையும் தீர்க்க நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாகவும் மின் கட்டணங்களுக்கான ஒப்பந்தசுமை குறைக்கப்படும் எனவும் அரசு தனது பதிலில் கூறியது. |
| **ஈரோடு**: ஈரோடு பேருந்து முனையத்தில் ₹13.44 கோடி செலவில் வாகன நிறுத்த வசதியுடன் கூடிய வணிக வளாக கட்டுமானம். | மின்தூக்கி வேலை, வண்ணம் தீட்டும் பணிகள், நீர் வசதி மற்றும் கழிவுநீர் வெளியேற்றும் அமைப்பு பணிகள் போன்றவை இன்னும் முடிக்கப்படவில்லை. தொழில்நுட்ப ரீதியாக ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி, பணியில் மின்தூக்கி பணி ஒரு பகுதியாக இல்லை, மேலும் வளாகத்தில் மின்தூக்கி நிறுவும் பணிக்கு எந்த ஒப்புதலும் இல்லை. | தேவையைக் கருத்தில் கொண்டு, வணிக வளாகத்தில் மின்தூக்கியை நிறுவ பணி ஒப்புதல் பெற்றதற்கு பிந்தைய நிலையில் முடிவு செய்யப்பட்டது. மேலும், பணி முடிவடைவதற்கு முன்பு, அதனை கூடுதல் பணியாகக் கருதி, சென்னை நகராட்சி ஆணையர், இயக்குநரக தலைமைப் பொறியாளரிடமிருந்து மின்தூக்கிக்கான ஒப்புதலைப் பெற முடிவு செய்யப்பட்டது. இது பணியைப் பரிசீலிக்கும் போது சரியான திட்டமிடல் இல்லாததைக் குறிக்கிறது. இதனால், மின்தூக்கி நிறுவுதல் மற்றும் பிற பணிகள் நிறைவடையாததால், இவ்வளாகத்தைப் பயன்படுத்த முடியவில்லை. இதனால் பொதுமக்கள் எதிர்பார்க்கப்பட்ட பலன்களை இழக்க நேரிட்டது. | கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன, மேலும் 54 கடைகளில் 20 கடைகள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன, மேலும் மின்தூக்கி நிறுவியவதற்கான ஒப்புதலைப் பெறுவதற்கான செயல்முறை நடைபெற்று வருகிறது. |

| நகரம் – பணி விவரங்கள் | பணியின் நிலை | குறிப்புகள் | மே 2025 தேதியிட்ட அரசின் பதில் |
|---|---|---|---|
| **ஈரோடு**: ஈரோடு பேருந்து முனையத்தில் ₹5.76 கோடி செலவில் கூடுதல் வாகன நிறுத்துமிட வசதிகள் மற்றும் சிற்றுந்து பயணியர் நிழலகம் கட்டுமானம். | முதலில் ஒப்புதலளிக்கப்பட்ட 14 பேருந்து நிறுத்துமிடங்களுடன் சிற்றுந்து பயணியர் நிழலகம் கட்டப்படவில்லை என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. அதற்கு பதிலாக, பேருந்துகளுக்கான பாதை உருவாக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. | அடித்தள வாகன நிறுத்துமிடத்தின் சாய்வுப் பாதைக்கு நுழைவு மற்றும் வெளியேறும் இடம் மற்றும் அதற்கான அணுகு சாலை இணைப்பு ஆகியவை முடிக்கப்படாததால், அடித்தள வாகன நிறுத்துமிட வசதி நிறைவடைந்திருந்தாலும், இன்னும் பயன்பாட்டிற்கு வரவில்லை (ஆகஸ்ட் 2024). இதனால், மற்றொரு பணி முடிக்கப்படாததால், அடித்தள வாகன நிறுத்துமிட வசதியை பொதுமக்கள் பயன்படுத்த முடியவில்லை. | நுழைவு-வெளியேறும் இடப் பணிகள் 15 ஜூலை 2025க்குள் நிறைவடையும். |
| **சேலம்**: ₹44.08 கோடி செலவில் நான்கு MLCPன் கட்டுமானம். | அனைத்து MLCPகளுக்கும் கட்டிடத் திட்டமிடலுக்கான ஒப்புதல் பெறப்படவில்லை. 2021 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் நான்கு MLCPகள் முடிக்கப்பட்டிருந்தாலும், மத்திய பேருந்து நிலையத்தில் ஒரு MLCP மட்டுமே ஏலம் விடப்பட்டு, பயன்பாட்டிற்கு வந்தது. | ஏலதாரர்களின் குறைந்த அளவிலான எதிர்வினை காரணமாக, மீதமுள்ள MLCPகள் இன்னும் ஏலம் விடப்படவில்லை (ஜூலை 2024). அதற்கு பதிலளிக்கும் விதமாக (ஜூலை 2024), நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநரகத்தின் (DTCP) ஒப்புதல் கூடிய விரைவில் பெறப்படும் எனவும் மீதமுள்ள மூன்று MLCPகளுக்கான மறு ஏலம் நடைபெற்று கொண்டிருந்தது எனவும் கூறப்பட்டது. | DTCPன் ஒப்புதலைப் பெறுவதற்கான செயல்முறை நடைபெற்று வருகிறது, மூன்று MLCPகளில் இரண்டில், மாநகராட்சி அதிகாரிகளால் வசூல் செய்யப்பட்டு வந்தது. மேலும் இது தினசரி ₹500 முதல் ₹700 வரை வருவாய் ஈட்டி வருகிறது. மீதமுள்ள பல்நோக்கு கூடத்தை உள்ளடக்கிய MLCPல், ஆண்டு வருவாய் ₹1.05 கோடிக்கு ஏலம் முடிக்கப்பட்டுள்ளது. |
| **திருப்பூர்**: மாநாட்டு மையத்துக்கு அருகிலுள்ள குமரன் சாலையில் ₹11.08 கோடி செலவில் MLCP (180 கார்கள் - தரை + நான்கு தளங்கள்) கட்டுமானம். | MLCP (180 கார்கள் - தரை + நான்கு தளங்கள்) மார்ச் 2022ல் நிறைவடைந்தாலும், அதே வளாகத்தில் அமைந்துள்ள மாநாட்டு மையத்தின் கட்டுமானம் முடிவதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் பயன்பாட்டுக்கு வரவில்லை (ஜூன் 2024). | குமரன் சாலையில் ஏற்பட்ட கடுமையான போக்குவரத்து நெரிசல் காரணமாக, MLCP மற்றும் மாநாட்டு மையத்திற்கு ஒரே நுழைவு மற்றும் வெளியேறும் இடத்தை அமைக்க SCL முடிவு செய்தது. | மாநாட்டு மையம் கட்டி முடிக்கப்பட்டு 11 பிப்ரவரி 2024 அன்று திறக்கப்பட்டது, மேலும் பொது ஏலம் மூலம் மையத்தை குத்தகைக்கு விட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

இவ்வாறாக, கூடுதல் பணிகள் முடிக்கப்படாததால், நான்கு SCLகளில் கட்டப்பட்ட MLCPகளை இலக்கிட்ட நேரத்தில் பயன்படுத்த முடியவில்லை. இதனால், வாகன நிறுத்துமிட வசதி மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து வருவாய் ஈட்டுதல் ஆகியவற்றின் நோக்கத்தை முழுமையாக அடைய முடியவில்லை.

### (ii) பேருந்து முனையத்தின் நவீனமயமாக்கல்

மூன்று SCLகளில் பேருந்து முனையத்தை நவீனமயமாக்குவதில் தணிக்கையில் கண்டறியப்பட்ட பின்வரும் குறைபாடுகள் **அட்டவணை 3.6ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.6: பேருந்து முனையத்தை நவீனமயமாக்குவதில் காணப்பட்ட குறைபாடுகள்**

| நகரம் – பணி விவரங்களுடன் | பணியின் நிலை | குறிப்புகள் | மே 2025 தேதியிடப்பட்ட அரசின் பதில் |
|---|---|---|---|
| **ஈரோடு**: ₹41.26 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையத்தை நவீனமயமாக்கல். | HPPSCன் ஆய்வுக்குள்ளாவதைத் தவிர்க்க, இந்த பணி ஒவ்வொன்றும் ₹15 கோடிக்கும் குறைவான செலவில் நான்கு பணிகளாகப் பிரிக்கப்பட்டது. நான்கு பணிகளில், ஒன்றான ₹9.30 கோடி செலவில் பேருந்து முனையத்தைச் சுற்றி மேம்பாட்டுப் பணிகள் ஆரம்ப கட்டத்திலேயே இருந்தன, மேலும் அப்பணிகள் நடைபெற்று கொண்டிருந்தன (ஜூன் 2024). | HPPSCஆல் முதல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்படாததற்கான காரணம்/விளக்கம் கோப்பில் இல்லை. முன்மொழிவிலேயே நவீனமயமாக்கல் கருத்தாக்கப்பட்டிரு , இதற்கான நடவடிக்கை 2020ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டிருந்தும், ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும் இப்பணி முடிக்கப்படவில்லை, இதன் விளைவாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எட்டப்படவில்லை. | பணிகளைப் பிரித்ததை அரசு நியாயப்படுத்தியது. இருப்பினும், மேற்கூறிய நான்கு பணிகள் நிறைவேற்றம் தொடர்பான சமீபத்திய நிலை குறித்து தெரிவிக்கப்படவில்லை. |
| **சேலம்**: ₹104.53 கோடி செலவில் பழைய பேருந்து நிலைய மறுமேம்பாடு (நான்கு துணைப் பணிகள்). | இந்தப் பணி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்தாலும், 202 கடைகளில் 39 கடைகள் மட்டுமே இதுவரை குத்தகைக்கு விடப்பட்டுள்ளன (ஜூலை 2024). | நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூலை 2024), ஒரு கடை மட்டுமே இயங்கி வந்ததும், மற்ற கடைகளில் ஏற்கனவே குத்தகைக்கு விடப்பட்ட கடைகளை உப குத்தகைக்கு விடுவதை குறிக்கும்படியாக ‘குத்தகைக்கு’ என்ற அறிவிப்பு பலகை காணப்பட்டது, கண்காணிப்பின்மையை எடுத்துக் காட்டியது. மேலும், சுற்றுக் கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் நகரும் படிக்கட்டுகளும் இயங்கவில்லை. மேலும் வளாகம் மிகவும் அசுத்தமான நிலையில் பராமரிக்கப்பட்டிருந்தது. | 44 கடைகள் வெற்றிகரமாக குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகவும், அடித்தள வாகன நிறுத்துமிட வசதியைப் பொறுத்தவரை, தினமும் ₹150 முதல் ₹220 வரை வருவாய் ஈட்டப்படுவதாகவும் அரசு தெரிவித்துள்ளது. மேலும், பழைய பேருந்து நிலையத்தில் மீதமுள்ள வணிக ரீதியிலான இடத்தையும், புதிய பேருந்து நிலையத்தின் நான்கு கடைகளையும் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பதிலளிக்கப்பட்டது. |
| **சேலம்**: ₹6.82 கோடி செலவில் புதிய பேருந்து நிலைய மறுசீரமைப்பு. | கடைகள் பிப்ரவரி 2020லேயே கட்டி முடிக்கப்பட்டிருந்தாலும், நான்கு ஆண்டுகளுக்குப் பிறகும் (ஜூலை 2024) இன்னும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படவில்லை. கடைப் பகுதி முழுவதும் கழிவுகள் மற்றும் புழுதி நிறைந்திருப்பது, முறையற்ற பராமரிப்பைக் காட்டுகிறது என்பதும் கண்டறியப்பட்டது. | சேலம் SCL கடை இடத்தை குத்தகைக்கு விடுவதற்கு முன்னதாக மூன்று முறை ஏலம் விடப்பட்டது, ஆனால் ஏலம் எடுக்க யாரும் முன்வரவில்லை. கடைகள் பயன்படுத்தப்படாத காரணத்தால் வருவாய் இழப்பையும் சேர்த்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறவில்லை. | |

| நகரம் – பணி விவரங்களுடன் | பணியின் நிலை | குறிப்புகள் | மே 2025 தேதியிடப்பட்ட அரசின் பதில் |
|---|---|---|---|
| **திருப்பூர்**: ₹30.60 கோடி செலவில் புதிய பேருந்து நிலையத்தை மேம்படுத்துதல். | பணி முடிக்கப்பட்டு (மார்ச் 2023) பயன்பாட்டிற்கு வந்தது. | நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூன் 2024) நடை மேம்பாலத்தின் இருபுறமும் ஒரு படிக்கட்டும், ஒரு நகரும் படிக்கட்டு பொதுமக்களுக்கு திறந்து விடப்படாமல் பூட்டி வைக்கப்பட்டு இருந்தது கண்டறியப்பட்டது.<br>54 கடைகள், இரண்டு உணவக இடம் மற்றும் இரண்டு அறைகள் குத்தகைக்கு விடப்படவில்லை. பேருந்து நிலையத்தின் தெற்குப் பகுதியில் உள்ள பேருந்து நிறுத்துமிடங்கள் முற்றிலும் காலியாக இருந்தது கண்டறியப்பட்டது. ஈரோடு, சேலம் போன்ற இடங்களுக்குச் செல்லும் பேருந்துகள் கோவில்வழி என்ற மற்றொரு பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்படுவதால், புதிய பேருந்து நிலையத்தின் பெரும்பகுதி மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடி காணப்பட்டது. | நகரும் படிக்கட்டுகள் முழுமையாக இயங்கும் நிலையில் இருக்கின்றன என்றும், ஏலம் மூலம் கடைகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அரசு பதிலளித்தது. மேலும், பேருந்து நிலையத்தில் தூய்மை மற்றும் சுகாதாரத்தைப் பராமரிக்க சுகாதாரப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும் பதிலளித்தது.<br>இருப்பினும், பேருந்து நிலையங்களில் ஏற்படுத்தப்பட்ட கூடுதல் வசதிகளைப் பயன்படுத்துவது குறித்து பதில் எதுவும் இல்லை. |
| **திருப்பூர்**: ரூ.39.35 கோடி செலவில் பழைய பேருந்து நிலைய மறுமேம்பாடு. | பணி முடிக்கப்பட்டு (மார்ச் 2022) பயன்பாட்டிற்கு வந்தது. | நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூன் 2024), நுழைவு-வெளியேறும் இடங்களில் உள்ள நான்கு நகரும் படிக்கட்டுகள் தொடக்கத்திலிருந்தே பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. பதினொரு கடைகள் குத்தகைக்கு விடப்படவில்லை. தாய்மார்கள் பாலூட்டும் அறை, பல்நோக்கு அரங்கு, தங்குமிடம், பொழுதுபோக்கு அறை மற்றும் இரண்டு உணவகங்களுக்கான இடம் போன்ற சில கூடுதல் வசதிகள் பயன்படுத்தப்படாமல் சுகாதாரமற்ற நிலையில் இருந்தன. இதனால், இந்த வசதிகளின் நோக்கம் எட்டப்படவில்லை. மேலும், கடைகள்/அறைகள்/அரங்கங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருவாய் ஈட்டலை முழுமையாக அடைய முடியவில்லை. | |

இதனால், மேற்கண்ட சொத்துக்கள் உருவாக்கப்பட்டதில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் பெரும்பாலும் இரண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வரை அடையப்படவில்லை.

### (iii) சீர்மிகு நகர்ப்புற போக்குவரத்தின் கருப்பொருள்

(அ) SCPன் கீழ் எதிர்பார்க்கப்பட்டபடி, மார்ச் 2024 நிலவரப்படி, திருநெல்வேலி SCL நிறுவனம் ₹8.25 கோடி மதிப்புள்ள மின்சார ரிக்ஷாக்கள்

மற்றும் மின்சார பேருந்துகள் போன்ற மின்சார வாகனத் திட்டங்களை, PPP முறை மூலம் மேற்கொள்ளவில்லை. அதற்கு பதிலாக, திருநெல்வேலி SCL, துப்புரவு இயந்திரம், ஜெட் ராடிங் இயந்திரம், ஹைட்ராலிக் பொருத்தப்பட்ட இயந்திரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான மின்கலனால் இயங்கும் வாகனங்கள் ஆகியவற்றை ₹16.50 கோடி மதிப்பிலான கொள்முதலுக்கு நிதி மாற்றம் செய்யப்பட்டது. இவை சீர்மிகு நகர்ப்புற போக்குவரத்திற்கான மின்சார வாகன வரையறையின் கீழ் வராததால், அவை மாநகராட்சி நிதியில் இருந்து செலவிடப்பட்டிருக்க வேண்டும். எனவே, இச்செயல் திருநெல்வேலி SCLல் இருந்து திருநெல்வேலி மாநகராட்சிக்கு ₹16.50 கோடி மதிப்புள்ள SCP நிதி மாற்றம் செய்யப்பட்டதுடன், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்படவில்லை.

(ஆ) SCPல் எதிர்பார்க்கப்பட்டபடி, கோவிலுள்ள பகுதிக்கும் ஸ்கைவாக்கிற்கும் இடையே இணைப்பினை ஏற்படுத்தும் வகையிலான போக்குவரத்தை, மின்சார வாகன வடிவத்தில் தேர்வு செய்து, திருநெல்வேலி SCL, ₹2.50 கோடி செலவில், கோவில் வளாகத்திற்கு அருகில் 1.5 கி.மீ பூஜ்ஜிய உமிழ்வு மண்டலத்தை செயல்படுத்தவில்லை. இதனால், பூஜ்ஜிய உமிழ்வு மண்டலத்தின் நோக்கம் அடையப்படவில்லை. இதற்கான பதிலில் (டிசம்பர் 2023) நிதி பற்றாக்குறை காரணமாக, அவை செயல்படுத்தப்படவில்லை என்று கூறப்பட்டது. இந்தப் பணி ஏற்கனவே SCPன் கீழ் சேர்க்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டதால் பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

மின்சார வாகனங்கள் சுற்றுலாத் துறையால் ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்டதால், அதையே திரும்பச் செய்வதைத் தவிர்ப்பதற்காக செயல்படுத்தப்படவில்லை என்று அரசு பதிலளித்தது (மே 2025). மேலும், குடிமக்களின் தேவைகள் மற்றும் நகர்ப்புற முன்னுரிமைகளைப் பூர்த்தி செய்வதற்காக, ABD பகுதிக்கு வெளியேயும், SCM வழிகாட்டுதல்களுக்கு உட்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதால் பூஜ்ஜிய உமிழ்வு பணி கைவிடப்பட்டது என்றும் அரசு பதிலளித்தது.

சென்னை SCL, ABD பகுதியில் ₹204.82 கோடி மதிப்புள்ள MLCP கட்டுமானம், சாலைகளை மறுசீரமைத்தல், பாதசாரி பிளாசா உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு முடித்துள்ளது. போக்குவரத்தை மேம்படுத்தும் விதமாக பணிகள் மேற்கொள்ளப்பட்டப் போதிலும், நோக்கத்தினைத் தோற்கடிக்கும் வகையில், பாதசாரி பாதையில் ஆக்கிரமிப்புகள் மற்றும் இருசக்கர வாகன நிறுத்தம் காணப்பட்டதை நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வு (ஜூன் 2024) வெளிப்படுத்தியது **(விளக்கப்படங்கள் 3.4 மற்றும் 3.5)**.

**விளக்கப்படம் 3.4: தி.நகர், வெங்கட்நாராயணா சாலையில் ஆக்கிரமிப்பு**




**விளக்கப்படம் 3.5: தி.நகர், புர்கிட் சாலையில் அங்கீகரிக்கப்படாத வாகன நிறுத்தம்**




(ஆதாரம்: நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வு)

மேலும், மறுசீரமைப்பு செய்யப்பட்ட சாலைகளின் நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது, நிறுவப்பட்ட வசதிகளில் ஒன்றான LED விளக்கு பொருத்துதல்களின் மாதிரி சரிபார்ப்பில், மதிப்பீடு செய்யப்பட்ட, பொருத்தப்பட்டதாக சான்றளிக்கப்பட்டப் பல்வேறு பொருத்துதல்களின் எண்ணிக்கைகளுக்கும்[8] மற்றும் உண்மையாக பொருத்தப்பட்ட பொருத்துதல்களின் எண்ணிக்கைக்கும் வேறுபாடுகள் இருப்பது தெரியவந்தது. மேலும், கூடுதல் செலவினங்களுக்கு வித்திடும் வகையில், வேறுபாடுகள் நிதி தாக்கங்களைக் கொண்டிருந்த போதிலும், பொருத்தப்பட்டதாக சான்றளிக்கப்பட்ட அளவுகளை உண்மையாக பொருத்தப்பட்ட பொருத்துதல்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது உள்ள மாறுபாடுகளுக்கான காரணங்கள் ஏதும் வழங்கப்படவில்லை.

அரசின் பதிலில் (மே 2025) LED விளக்கு பொருத்துதலின் நன்மைகள் பற்றி விவரித்த போதிலும், பொருத்தப்பட்ட அளவில் உள்ள மாறுபாடு பற்றி பதில் ஏதும் இல்லை.

### 3.3.5 சமூக உள்கட்டமைப்பு - சுகாதாரம் மற்றும் கல்வி

சுகாதாரம் மற்றும் கல்வி, மாநிலங்களின் ஒட்டுமொத்த நீடித்த நிலைத்தன்மையிலும், அதனால் நகரங்களின் மீதும் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே, ஒரு நீடித்த நிலையான சீர்மிகு நகரத்திற்கும் மனித மற்றும் சமூக மூலதனத்தை உருவாக்குவதிலும், சுகாதாரம் மற்றும் கல்வியிலும் கவனம் செலுத்துவது மிகவும் விரும்பத்தக்கது ஆகும். முன்மொழிவுகளில் எதிர்நோக்கப்பட்ட சில சமூக உள்கட்டமைப்பு பணிகள் (எண்ணிக்கை 15) (i) சீர்மிகு வகுப்பறைகள், (ii) டிஜிட்டல் நூலகம், (iii) மின்-சுகாதார அமைப்புகள் போன்றவை ஆகும்.

சமூக உள்கட்டமைப்பின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளில் (எண்ணிக்கை 28) சீர்மிகு வகுப்பறை, சுகாதாரம் போன்றவை அடங்கும். 28 பணிகளில், 27 முடிக்கப்பட்டன, அவற்றில் எட்டு பணிகள் உரிய நேரத்திலும், 19 பணிகள் ஒன்று முதல் 23 மாதங்கள் வரை தாமதமாகவும்

[8] மின்னலாற்றல் சேமிக்கும் (LED) விளக்குகளுடன் கூடிய ஒற்றை/இரட்டை கை கேஸ்டோர் வடிவ கம்பம், LED பொருத்துதலுடன் கூடிய 3.5 மீ கம்பம்.

முடிக்கப்பட்டன. திருநெல்வேலியில் பெய்த கனமழை, கோவிட்-19 பெருந்தொற்று போன்றவை தாமதத்திற்கான காரணங்களாக கூறப்பட்டது.

மேலும், 'குழந்தைகள் விளையாட்டு மண்டலம் மற்றும் மைதான மேம்பாடு' என்ற ஒரு பணி நவம்பர் 2021லேயே நிறைவடைந்திருக்க வேண்டிய போதிலும் இன்னும் முடிக்கப்படவில்லை. நகர வாரியான பணிகளின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் **இணைப்பு 3.3(உ)ல்** விவரிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பணிகள் குறித்த தணிக்கை குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### (i) சீர்மிகு பள்ளிகள்/வகுப்பு

கோயம்புத்தூர் SCLன், SCPல் 'கல்வி' என்ற பிரிவின் கீழ் ₹20 கோடி ஒதுக்கப்பட்டது. ABD பகுதியில் சீர்மிகு பள்ளிகளை அமைக்க விரிவான திட்ட அறிக்கையைத் (DPR) தயாரிப்பதற்காக கோயம்புத்தூர் SCL ஒரு தனியார் நிறுவனத்தை ஈடுபடுத்தியது (மார்ச் 2017). மேலும் அறிக்கைகளை சமர்ப்பித்ததும் ₹0.19 கோடி செலுத்தப்பட்டது (நவம்பர் 2017). தமிழ்நாடு அரசு, சமர்ப்பிக்கப்பட்ட DPRஐ ஆய்வு செய்த பின்னர், DPRகளின் தரம் குறித்த அவர்களின் எதிர்மறையான கருத்துகளை தெரிவித்தது (மே 2018), மேலும் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளை ஆய்வு செய்யத் தவறியதற்காக தொடர்புடைய அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுடன் கோயம்புத்தூர் SCLன் வாரியக் கூட்டத்தில் இந்த விவகாரம் விவாதிக்கப்பட வேண்டும் என்றும் தெரியப்படுத்தியது. இருப்பினும், கோயம்புத்தூர் SCL, மேற்கொண்டு விவாதம் ஏதும் இல்லாமல், இந்த பணியை ஒத்திவைத்தது (டிசம்பர் 2018). இதன் விளைவாக, தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ₹0.19 கோடி வீணான செலவில் முடிந்தது.

DPR தயாரிப்பதற்காக செலுத்தப்பட்ட கட்டணத்தைத் திரும்ப பெற தனியார் நிறுவனத்திற்கு முறையான தகவல் அனுப்பப்படும் என்று அரசு பதிலளித்தது (மே 2025).

### (ii) சுகாதாரம்

ஈரோடு SCL, சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும், நோயாளிகள் மற்றும் நுகர்வோர் மத்தியில் ஆரோக்கியமான பழக்கங்களை மேம்படுத்தும் வகையில் சுகாதாரத் தகவல்களைப் பரப்புவதற்கு பரவலாகப் பயன்படுத்தப்படும் இணையதள சுகாதார தரவு போர்ட்டல்கள் போன்ற சேவைகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த சுகாதாரத் தகவல் தளத்தை (Integrated Healthcare Information Platform - IHIP) உருவாக்கவும் ₹120 கோடி செலவில் சுகாதாரம் மற்றும் ஆரம்ப சுகாதார மையங்களின் பணிகளை மின்-சுகாதார அமைப்பின் மூலம் நிறைவேற்ற முன்மொழிந்தது. சுகாதாரத் தகவல் மையம், தேசிய சுகாதார மற்றும் குடும்ப நல நிறுவனம், மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மூலம் தொழில்நுட்ப அறிவு எதிர்பார்க்கப்படுகிறது. இது தேசிய நகர்ப்புற சுகாதாரத் திட்டம் (NUHM), SCM மற்றும் அதனுடன் தொடர்புடைய மாநில/ மத்திய அரசு திட்டங்களின் கீழான நிதியுதவியுடன் ஒருங்கிணைப்பு மூலம்

செயல்படுத்த முன்மொழியப்பட்டது. இருப்பினும், ஈரோடு SCL இந்த துணை கருப்பொருளை செயல்படுத்தவில்லை, மேலும் குடிமக்கள் எதிர்நோக்கப்பட்ட பலனை அடையவில்லை. இதற்குப் பதிலளித்த ஈரோடு SCL (டிசம்பர் 2023), NUHM திட்டத்தின் கீழ் 20 நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் மற்றும் இரண்டு சமூக சுகாதார ஆய்வகங்கள் கட்டப்பட்டதால், இப்பணி SCMன் கீழ் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறியது.

அரசு தனது பதிலில் (மே 2025) மாநில முன்முயற்சிகள் மற்றும் NUHM திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட விரிவான உள்கட்டமைப்பு மற்றும் சேவைகளைக் கருத்தில் கொண்டு, ஈரோடு நகர்ப்புற மக்களின் சுகாதாரத் தேவைகள் கணிசமான அளவில் பூர்த்தி செய்யப்பட்டதாகக் கூறியது. சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் பிரத்யேக சுகாதாரத் திட்டங்கள் தேவைப்படவில்லை என்றும், போக்குவரத்து, தூய்மை மற்றும் பொது உள்கட்டமைப்பு போன்ற பிற முக்கியமான நகர்ப்புறத் துறைகளுக்கு சீர்மிகு நகர நிதியினை உள்நோக்கத்துடனே திருப்பி விட அனுமதித்தது என்றும் பதிலளித்தது.

மேலே குறிப்பிட்ட பதில், முதல் கட்டத்திலேயே திட்டமிடல் இல்லாததைக் குறிக்கிறது என்பதாலும், தற்போது மேற்கொள்ளப்படும் பணிகள் குடிமக்கள் பங்களிப்பு மற்றும் அவர்களின் முன்னுரிமையுடன் செய்யப்பட வேண்டும் என்பதாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

### (iii) குழந்தைகள் விளையாட்டு பகுதி மற்றும் மைதானம்

திருநெல்வேலி SCL, குழந்தைகள் விளையாட்டு பகுதி மற்றும் மைதானத்தின் மேம்பாட்டு பணியை 11, நவம்பர் 2020 முதல் மேற்கொண்டதுடன், நவம்பர் 2021க்குள் முடிக்கவும் திட்டமிடப்பட்டது. ஆனால் நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்ட தேதியிலிருந்து ஒன்றரை வருடம் கடந்த பிறகும், ஒப்பந்ததாரரால் பணிகள் முடிக்கப்படவில்லை. ஆவணங்களை ஆய்வு செய்ததில், மண்ணின் தன்மை காரணமாக உள்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான அடித்தளத்தின் வகை பாய் (Raft) அடித்தளத்திலிருந்து நிலைத்தூண் (pile) அடித்தளமாக மாற்றப்பட்டதாக தணிக்கையில் கண்டறியப்பட்டது. தளத்தின் நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூன் 2024), அவை கூடம், உள் அரங்கம், உணவுக் கூடம் மற்றும் நிருவாக கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தாலும், நீச்சல் குளம், கூடைப்பந்து மைதானம், டென்னிஸ் மைதானம், மட்டைப்பந்து பயிற்சி வலை போன்ற பிற பணிகள் இன்னும் நடைபெற்று கொண்டிருந்தன. இதன் விளைவாக பணிகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட தேதியிலிருந்து 37 மாதங்களுக்கும் மேலாகியும் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்படவில்லை.

அரசு தனது பதிலில் (மே 2025) பணி நிறைவடைந்துள்ளதாகவும், சொத்தை ஏலம் விட தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறியது. இருப்பினும், ஏலம் விடப்படாததால், எதிர்நோக்கப்பட்ட நோக்கங்கள் தோல்வியடைவதுடன், மூன்று ஆண்டுகளுக்கும் மேலாகியும் சொத்து பயன்படுத்தப்படவில்லை என்ற நிலை தொடர்கிறது.

### 3.3.6 மின் ஆளுகை

ஒரு சீர்மிகு நகரம், அரசுடனான தொடர்புகளில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் ஏமாற்றங்களை நீக்கி, அதன் குடிமக்களுக்கு எளிதான தொடர்புகளை (இணையதளம் மற்றும் தொலைபேசி சேவைகள் மூலம்) ஏற்படுத்த உதவுகிறது. இந்த உள்கட்டமைப்பு உணரி (sensor), சாதனங்கள், தரவு மையங்கள், தகவல் தொடர்பு அமைப்புகள் மற்றும் மென்பொருள் பயன்பாடு போன்ற பலதரப்பட்ட வலையமைப்பைக் கொண்டுள்ளது. அவை மிகப்பெரிய அளவிலான தரவுகளை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றிற்கு உதவுகின்றன. முன்மொழியப்பட்ட சில மின்-ஆளுமை பணிகள் (எண்ணிக்கை 10) (i) ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC), (ii) நிருவாக சேவைகளுக்கான கைபேசி செயலிகளை உருவாக்குதல், (iii) நில ஆவணங்களை டிஜிட்டல் மயமாக்குதல், (iv) சுற்று கண்காணிப்பு கேமராக்கள் போன்றவை ஆகும்.

மின்-ஆளுமையின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளில் (எண்ணிக்கை 17) ICCC, சொத்து வரி முறையை டிஜிட்டல் மயமாக்குதல், கட்டிட அனுமதி மேலாண்மை அமைப்பு போன்றவை அடங்கும். 17 பணிகளில், 14 பணிகள் நிறைவடைந்தன. அவற்றில் ஆறு பணிகள் உரிய நேரத்திலும், எட்டு பணிகள் ஒன்று முதல் 29 மாதங்கள் வரை தாமதத்துடனும் நிறைவடைந்தன. கோவிட்-19 பெருந்தொற்று, ஆக்கிரமிப்பு, உயிரி மூடுதல் (bio-capping) பணிகளில் தாமதம் போன்றவை தாமதத்திற்கான காரணங்களாக கூறப்பட்டன.

மேலும், ‘ICCC திட்டங்கள்’ மற்றும் ‘சொத்து வரி டிஜிட்டல் மயமாக்கல்’ ஆகிய மூன்று பணிகளின் நிறைவு தேதி முறையே நவம்பர் 2017 மற்றும் டிசம்பர் 2021 ஆக இருந்தபோதிலும் இன்னும் முடிக்கப்படவில்லை. நகர வாரியான பணிகளின் எண்ணிக்கை விவரங்கள் **இணைப்பு 3.3 (ஊ)ல்** விவரிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பணிகள் குறித்த தணிக்கை குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

#### (i) ஒருங்கிணைக்கப்பட்ட கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (ICCC)

நகரங்கள், அவைகளின் சொத்துக்கள் அனைத்தையும் நிர்வகிப்பதற்காகவும், கண்காணிப்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் ஆளுகைச் செயல்முறைகளை நிறுவ வேண்டும். வாகன நிறுத்துமிடங்கள், போக்குவரத்து மற்றும் தெரு விளக்குகள் போன்ற பல்வேறு உள்கட்டமைப்புகளின் நிகழ்நேர கண்காணிப்பு, குடிமக்கள் எளிதாக பயணிக்க உதவும். மேலும், போக்குவரத்து குறித்தான முடிவுகளை எடுப்பதற்கான தகவலை தெரிவிப்பது தற்போதுள்ள உள்கட்டமைப்புகளை நிர்வகிக்க உதவுவதுடன், எதிர்கால திட்டமிடலுக்கும் உதவுகிறது. ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை (ICCC) அமைப்பதன் மூலம் இவை அனைத்தையும் அடைய முடியும்.

இரண்டு SCLகளில் ICCC நிறுவுவதில் தணிக்கை கண்டறிந்த பின்வரும் குறைபாடுகள் **அட்டவணை 3.7ல்** விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.7: ICCCகளை நிறுவுவதில் கண்டறியப்பட்ட குறைபாடுகள்**

| நகரம் பணி விவரங்களுடன் | பணியின் நிலை | குறிப்புகள் | மே 2025 தேதியிடப்பட்ட அரசின் பதில் |
|---|---|---|---|
| **மதுரை**: ₹12.31 கோடி மதிப்பீட்டில் (₹2.45 கோடி SCM நிதி; ₹9.86 கோடி - மாநகராட்சியின் பொது நிதி) ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மைய (ICCC) அமைப்பை செயல்படுத்தல். | மதுரை நகரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் ஆளுகை போர்ட்டல், பயன்பாட்டு அமைப்பு, தரவு மையம், சீர்மிகு ஒளி மேலாண்மை பொது செயலாக்க அமைப்பு, அவசர அழைப்பு பெட்டி, சீர்மிகு உணரிகள், நியமிக்கப்பட்ட இடங்களில் நகர கண்காணிப்பு அமைப்பு போன்ற அனைத்து சீர்மிகு நகர முன்முயற்சிகளின் ஒருங்கிணைந்த பார்வையைப் பெறுவதே ICCCன் நோக்கமாகும். கட்டட கட்டுமானப் பணிகள் ஜனவரி 2022ல் நிறைவடைந்தன. | இருப்பினும், ஜூன் 2024 நிலவரப்படி, குறை நிவர்த்தி முறை மற்றும் வாகன கண்காணிப்பு அமைப்பு ஆகிய இரண்டு தொகுதிகள் மட்டுமே ICCCயுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்று தணிக்கையில் கண்டறியப்பட்டது. மேலும், ₹2.93 கோடி (சீர்மிகு நகர பொது நிதியிலிருந்து ₹2.45 கோடி + A&OE நிதியிலிருந்து ₹0.48 கோடி) செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த செலவு SCM நிதியிலிருந்து செய்யப்பட்டது மற்றும் ULB பங்கு பெறப்படவில்லை. மாநகராட்சியில் நிதி பற்றாக்குறையாக இருப்பது, ULBன் பங்கு பெறப்படாததற்கு காரணங்களாக கூறப்பட்டது (டிசம்பர் 2023). ₹2.93 கோடி நிதி செலவிடப்பட்ட போதிலும், திடக்கழிவு மேலாண்மை, தீயணைப்பு, காவல்துறை போன்ற துறைகளை ஒருங்கிணைப்பதன் நோக்கம் இன்னும் அடையப்படவில்லை. | அடுத்தடுத்த கட்டங்களில் அனைத்து நகராட்சி செயல்பாடுகளையும் ICCC தளத்துடன் படிப்படியாக ஒருங்கிணைக்க மாநகராட்சி திட்டமிட்டுள்ளதாகவும், இதன் மூலம் நகர்ப்புர ஆளுகை, சேவை வழங்கல் மற்றும் ஒட்டுமொத்த நகர மேலாண்மையை மேம்படுத்துவதாகவும் அரசு பதிலளித்தது.<br>இருப்பினும், ULBன் பங்கு பெறப்படாதது குறித்து பதில் ஏதும் இல்லை. |
| **திருநெல்வேலி**: ₹12.50 கோடி செலவில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம். | நவம்பர் 2021க்குள் முடிக்கப்பட இருந்த இந்த திட்டமிடப்படாத பணி மார்ச் 2024 நிலவரப்படி நடைபெற்று கொண்டிருந்தது. இந்த பணியின் கண்காணிப்பு முகமையாக இருந்த தேசிய தொழில்நுட்ப நிறுவனம் (NIT), வழங்கப்பட வேண்டிய 93 பொருட்களில், ஒப்பந்ததாரர் ₹2.12 கோடி செலவில் 14 பொருட்களை மட்டுமே வழங்கியுள்ளார் என்று தெரிவித்தது. | கண்காணிப்பு கேமரா உள்ளிட்ட ஆரம்ப கட்ட உள்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படவில்லை. பணியை முடிப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்காக ஒப்பந்ததாரருக்கு ₹50,000 அபராதம் விதிக்கப்பட்டது. இந்தத் தொகையும் வசூலிக்கப்படவில்லை. | முறையாக எச்சரித்த போதிலும், ஒப்பந்ததாரரிடமிருந்து எந்த பதிலும் இல்லை என்றும், இதன் காரணமாக, NIT உதவியுடன் பணியை முடிக்க TSCL முடிவு செய்துள்ளதாகவும், இருப்பில் உள்ள ICCC நிதிகளுக்குள் பணி நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதாகவும் அரசு பதிலளித்தது. |

இருப்பினும், பணிகள் நிறைவடைய அதிக செலவுகள் செய்யப்பட்டும் பணிகளை முடிப்பதில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தாமதம் என்ற போதிலும், ICCCஐ நிறுவுவதற்கான எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்படவில்லை.

### (ii) கட்டிட அனுமதி மேலாண்மை அமைப்பு

கோயம்புத்தூர் SCLல், SCMன் கீழ் கட்டிடத் திட்ட அனுமதியை குடிமக்கள் இணையதளத்தில் விண்ணப்பித்ததுடன், செயல்முறையின் நிலையையும் கண்காணிக்க வசதியாக, கட்டிடத் திட்ட ஒப்புதலின் தற்போதைய தானியங்கி முறையை மேம்படுத்தும் பணி ₹1.49 கோடி தொகைக்கு மேற்கொள்ளப்பட்டது (ஜனவரி 2020). ஆரம்ப பணி செய்யப்பட்டதற்கான பகுதி கட்டணமாக ஒப்பந்ததாரருக்கு ₹0.30 கோடி தொகை செலுத்தப்பட்டது (டிசம்பர் 2020). இருப்பினும், அர்பன் ட்ரீ மென்பொருளுக்கு (Urban Tree Software- ULBகளுக்கான பொதுவான மின்-ஆளுமை தகவல் அமைப்பு) மாறுவதற்கான நகராட்சி நிர்வாக ஆணையரகத்தி அறிவுறுத்தல்கள் காரணமாக, இப்பணி பின்னர் ரத்து செய்யப்பட்டது (செப்டம்பர் 2021). இதனால், கோயம்புத்தூர் SCL கட்டிட அனுமதி மேலாண்மை அமைப்பின் இப்பணியை இறுதி செய்யும் போது, மின்-ஆளுமை தகவல் அமைப்பின் தற்போதைய கூறுகளை கணக்கில் எடுத்துக்கொள்ளத் தவறியதால், ₹0.30 கோடி வீணான செலவு ஏற்பட்டது. SCMன் கீழ் எந்த பயனுள்ள முடிவும் இல்லாமல் மேற்கண்ட செலவினங்களைச் செய்ததை கோயம்புத்தூர் SCL ஒப்புக்கொண்டது (ஆகஸ்ட் 2024).

அரசு தனது பதிலில் (மே 2025) மேற்கூறிய காரணத்தை மீண்டும் வலியுறுத்தியது.

### (iii) சொத்து வரி மதிப்பீட்டை டிஜிட்டல் மயமாக்குதல்

SCMன் கீழ், ₹2.61 கோடி செலவில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் அனைத்து ஐந்து மண்டலங்களின் சொத்து வரியை டிஜிட்டல் மயமாக்குதலை மேற்கொள்ள, இரண்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. நிறுவனங்கள் சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையில், 3,23,489 சொத்துக்களை (4,81,200 எதிராக) டிஜிட்டல் மயமாக்குவதற்கு ₹1.98 கோடி செலவிடப்பட்டது (நவம்பர் 2017).

இந்தப் பணி பிப்ரவரி 2018ல் முடிக்கப்பட்டு ஏப்ரல் 2018 முதல் பயன்பாட்டிற்கு வந்ததாகக் கூறப்பட்டாலும், மார்ச் 2024 நிலவரப்படி பணியின் செயல்முறை முன்னேற்றம் 67 விழுக்காடு மட்டுமே நிறைவடைந்துள்ளது (தணிக்கைக்கு அளிக்கப்பட்ட பதில் 76 விழுக்காடு என எடுத்துரைத்தது). டிஜிட்டல் மயமாக்கப்பட்ட 3,23,489 சொத்துக்களில், 2,19,235 சொத்துக்கள் மட்டுமே அளவிடப்பட்டதும், அவற்றில் 1,30,545 சொத்து மதிப்பீடுகள் மட்டுமே சரியாக செய்யப்பட்டதாகவும் ஆகஸ்ட் 2022ல் கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையரால் (வருவாய்) வழங்கப்பட்ட டிஜிட்டல் மயமாக்கலின் நிலை வெளிப்படுத்தியது. இருப்பினும், மார்ச் 2024ல் பணி நிறைவு அறிக்கையை ஒப்புக்கொள்ளும் போது இந்த நிலை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாமல், அவ்வறிக்கையில் 3,23,489 சொத்துக்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டது என்ற செயல்பாடு நிலை குறிப்பிடப்பட்டுள்ளது என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது.

மேற்கண்ட குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டபோது, கோயம்புத்தூர் SCL ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனங்கள் பணியை முடிக்கத்

தவறிவிட்டதாகவும், அவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை/மீட்பு நடவடிக்கைகள் எடுக்க முன்மொழியப்பட்டதாகவும் பதிலளித்தது (ஆகஸ்ட் 2024). மேலும், (i) மதிப்பிடப்படாத அல்லது குறைவாக மதிப்பிடப்பட்ட சொத்துக்களை அடையாளம் காண கோயம்புத்தூர் மாநகராட்சியால் ஒரு ட்ரோன் மதிப்பீட்டு பயிற்சி சோதனையாக நடத்தப்பட்டது மற்றும் (ii) 2022-23 மதிப்பீட்டு ஆண்டு முதல் திருத்தப்பட்ட வரி ஆகியவற்றால் டிஜிட்டல் மயமாக்கலின் காரணமாக சொத்து வரியில் துல்லியமான அதிகரிப்பை தீர்மானிப்பது கடினம் என்றும் கூறப்பட்டது.

2023-24ஆம் ஆண்டில் ₹154.91 கோடியாக இருந்த 4.81 இலட்சம் மதிப்பீடுகளுக்கான கோரிக்கை, மேம்படுத்தப்பட்ட அமைப்புகள் மற்றும் செயல்முறைகளின் காரணமாக ₹409.42 கோடியாக அதிகரித்து, மாநகராட்சியின் நிதி அடித்தளத்தை வலுப்படுத்தியது என அரசு பதிலளித்தது (மே 2025).

இருப்பினும், டிஜிட்டல் மயமாக்கல் எந்த அளவிற்கு செயல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறித்து பதில் ஏதும் இல்லை.

#### (iv) சுற்றுலா

மதுரை SCL, ₹130 கோடி செலவில் சுற்றுலா பயணிகளுக்கான வளாகம், பயணியர் தகவல் அமைப்பு (PIS), வலை செயலி, வைஃபை, கண்காணிப்பு மற்றும் கூட்டக் கட்டுப்பாடு மற்றும் பிற தொழிற்நுட்ப வசதிகளை ஏற்படுத்த முன்மொழிந்தது. இதற்கு மாறாக, மதுரை SCL, பெரியார் பேருந்து முனையத்தில் (இடம் 2) ₹2.62 கோடி செலவில் தகவல் மையம், விடுதி அரங்குகள், உணவகங்கள், பொருட்கள் வைக்கும் அறைகள் மற்றும் கழிப்பறைகள் கொண்ட சுற்றுலா வளாகத்தை நிர்மானித்தது. செப்டம்பர் 2020ல் பணிகள் நிறைவடைந்த போதிலும், நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் (ஜூன் 2024) போது, சுற்றுலா வளாகம் கட்டி முடிக்கப்பட்டதலிருந்து பொதுமக்களுக்கு திறக்கப்படவில்லை என்பதும், மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக கட்டிட வசதியைப் பயன்படுத்தப்படாமலும், பராமரிக்கப்படாமலும் இருந்தது என்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது. அதற்கான குறிப்பிட்ட காரணங்கள் வழங்கப்படவில்லை.

அரசு, 128 வணிகக் கடைகளில் 61 கடைகள் ஏலம் விடப்பட்டதாகவும், மீதமுள்ள கடைகளுக்கான ஏல நடைமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது என பதிலளித்தது (மே 2025). இருப்பினும், மீதமுள்ள 67 கடைகள் பயன்படுத்தப்படாததால், சுற்றுலா வளாகத்திலிருந்து வருவாய் ஈட்டும் நோக்கத்தை அடைய முடியவில்லை.

### 3.3.7 நீடித்த நிலையான சுற்றுச்சூழல்

ஒரு சீர்மிகு நீடித்த நிலையான நகரம் என்பது ஒரு புதுமையான நகரமாகும். இது வாழ்க்கைத் தரம், நகர்ப்புற செயல்பாடு மற்றும் சேவைகளின் திறனையும், போட்டியிடும் திறனையும் மேம்படுத்த தகவல் மற்றும் தொழில் நுட்பங்கள் (ICTகள்) மற்றும் பிற வழிகளைப் பயன்படுத்துகிறது. அதே நேரத்தில் சர்வதேச பாதுகாப்பு தரத்தில் காற்றின் தரத்தை பராமரிப்பதுடன்

பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார அம்சங்கள் குறித்து நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்கிறது. பணிகளில் (எண்ணிக்கை 31) முன்மொழியப்பட்ட சில நீடித்த நிலையான சுற்றுச்சூழல் பணிகள் (அ) ஏரிகளை மீட்டெடுப்பது, (ஆ) ஆற்றங்கரை மேம்பாடு போன்றவை.

நீடித்த நிலையான சுற்றுச்சூழலின் கீழ் நீர்நிலைகளை மீட்டெடுப்பது, பசுமைச் சூழல் வசதிகள் போன்ற பணிகள் (எண்ணிக்கை 48) செயல்படுத்தப்பட்டன. 48 பணிகளில், 42 முடிக்கப்பட்டன. இதில் எட்டு பணிகள் உரிய நேரத்திலும், 34 பணிகள் மூன்று முதல் 51 மாதங்கள் வரை தாமதத்துடனும் முடிக்கப்பட்டன. கோவிட்-19 பெருந்தொற்று, திருநெல்வேலியில் கனமழை, ஆக்கிரமிப்புகள் போன்றவை தாமதத்திற்கான காரணங்களாகவும் கூறப்பட்டது.

மேலும், நீர்நிலைகளின் மேம்பாடு தொடர்பான ஆறு பணிகளும், நிறைவேற்றப்பட வேண்டிய தேதி செப்டம்பர் 2021க்கும் ஜூன் 2023க்கும், இடையே இருந்த போதிலும், இன்னும் முடிக்கப்படவில்லை. நகர வாரியான பணிகளின் எண்ணிக்கை விவரங்கள் **இணைப்பு 3.3 (எ)ல்** விவரிக்கப்பட்டுள்ளன. முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பணிகள் குறித்த தணிக்கை குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

### (i) ஏரிகளின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு

கோயம்புத்தூர் SCL, ஏரிகளை சுத்தம் செய்தல், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல், பொதுமக்கள் வந்து மகிழ்வதற்காக ஏரிகளைச் சுற்றி ஒரு புதிய பொது இடத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டு ஏரிகளின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பை மேற்கொண்டது. அதன்படி, **அட்டவணை 3.8**ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, பின்வரும் ஏரிகளின் புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது.

**அட்டவணை 3.8: கோயம்புத்தூர் SCLன் கீழ் எடுக்கப்பட்ட ஏரிகளின் புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள்**

| வ. எண் | பணியின் பெயர் | பணி நிறைவு தேதி | செலவினம் (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | ஏரி புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு - வாலாங்குளம் ஏரி | 31-12-2023 | 114.05 |
| 2 | ஏரி புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு - பெரியகுளம் ஏரி | 31-12-2023 | 100.34 |
| 3 | ஏரி புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு - குறிச்சி ஏரி | 31-12-2023 | 42.62 |
| 4 | ஏரி புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு - செல்வசிந்தாமணி ஏரி | 25-05-2022 | 30.52 |
| 5 & 6 | ஏரி புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு - செல்வம்பதி & குமாரசாமி ஏரிகள் | 01-05-2023 | 31.03 |
| 7 | ஏரி புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு - கிருஷ்ணாம்பதி ஏரி | 01-05-2023 | 19.32 |
| | **மொத்தம்** | | **337.88** |

(ஆதாரம்: கோயம்புத்தூர் SCLஆல் வழங்கப்பட்ட விவரங்கள்)

இது தொடர்பாக, கோப்புகளை ஆய்வு செய்ததன் அடிப்படையிலும் தணிக்கையால் மேற்கொள்ளப்பட்ட நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் (ஜூலை 2024) அடிப்படையிலும் பின்வரும் குறிப்புகள் கண்டறியப்பட்டன:

மேற்கண்ட பணிகளை ஒப்புதலளிக்கும் போது, தேக்கப்பட்ட நீரின் தரத்தைக் காப்பாற்றும் நோக்கில் போதுமான கொள்ளளவு கொண்ட மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுதல் என்பது HPPSC குறிப்பிட்ட நிபந்தனைகளில் ஒன்றாகும். மேலும், கோயம்புத்தூர் மாநகராட்சி ஒவ்வொரு ஏரியிலும் இணைக்கப்பட்ட நீர் கால்வாய் விவரங்கள்/அத்தகைய கால்வாயின் நிலை/ஏரிக்கு நீர் கொண்டு செல்லும் அத்தகைய அனைத்து கால்வாய்களின் நீர் ஓட்டம்/ஏரிகளின் கீழ்நோக்கி செல்லும் நீர் வெளியேற்றம்/வடிகால்களின் விரிவான வலையமைப்பு போன்றவற்றை வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

மறுசீரமைப்பிற்காக எடுக்கப்பட்ட ஏழு ஏரிகளில் நான்கில்[9] கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (WWTP) நிறுவப்படவில்லை என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் (ஜூலை 2024) போது, செல்வசிந்தாமணி ஏரியில் நிறுவப்பட்ட WWTP இயங்காதது கண்டறியப்பட்டது **(விளக்கப்படம் 3.6).** மேலும், குறிச்சி ஏரி, செல்வசிந்தாமணி ஏரி மற்றும் குமாரசாமி ஏரி போன்ற ஏரிகளுக்குள் சுத்திகரிக்கப்படாத நீர் கலந்தது **(விளக்கப்படங்கள் 3.7 மற்றும் 3.8)**.

**விளக்கப்படம் 3.6: செல்வசிந்தாமணி ஏரியில் WWTP இயங்கவில்லை**




**விளக்கப்படம் 3.7: குறிச்சி ஏரிக்குள் சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் கலக்கிறது**




**விளக்கப்படம் 3.8: குமாரசாமி ஏரிக்குள் சுத்திகரிக்கப்படாத நீர் கலக்கிறது**




(ஆதாரம்: நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வு)

அரசு தனது பதிலில் (மே 2025) ஏரிகளில் உள்ள அனைத்து WWTPகளும் கட்டமைக்கப்பட்டு செயல்படுவதாகவும், இது நீரின் தரத்தையும், சுற்றுச்சூழல் அமைப்பையும் பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் கூறியது.

மேலும், எட்டு ஏரிகளில் உள்ள ஆகாயத்தாமரையை அகற்றுவது ₹4.43 கோடி செலவில் ஒரு தனிப் பணியாக மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இருப்பினும், ஏரிகளின் மறுசீரமைப்பு பணிகளைச் செயல்படுத்துவதில் இந்தப் பணியும் ஒரு தனி வகைப் பணியாக சேர்க்கப்பட்டுள்ளது என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. இருப்பினும், நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூலை 2024),

[9] குறிச்சி ஏரி, செல்வம்பதி & குமாரசாமி ஏரி மற்றும் கிருஷ்ணாம்பதி ஏரி.

ஆகாயத்தாமரை ஏரி மேற்பரப்புகளில் பெரிய அளவில் பெருகியதின் விளைவாக, தடுப்பணைகள் அடைக்கப்பட்டதும் நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜன் அளவு குறைந்ததால் நீர் சூழ்நிலை அமைப்பின் சீரழிவுக்கு வழிவகுத்தது கண்டறியப்பட்டது (**விளக்கப்படங்கள் 3.9 மற்றும் 3.10**).

**விளக்கப்படம் 3.9: குமாரசாமி ஏரியில் நிரம்பியுள்ள ஆகாயத்தாமரை**




**விளக்கப்படம் 3.10: செல்வசிந்தாமணி ஏரியில் நிரம்பியுள்ள ஆகாயத்தாமரை**




(ஆதாரம்: நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வு)

இது சுட்டிக்காட்டப்பட்ட பிறகு அரசு, தூய்மையான மற்றும் நீடித்த நிலையான நீர்நிலைகளை உறுதி செய்யும் பொருட்டு ஏரி மேற்பரப்புகளில் பெருகியுள்ள ஆகாயத்தாமரையை திறம்பட அகற்றுவதற்காக நீர்நிலை இயந்திரங்கள் வாங்கப்பட்டு பயன்பட்டு வருகின்றன என பதிலளித்தது (மே 2025).

**விளக்கப்படம் 3.11: செல்வசிந்தாமணி ஏரியில் உள்ள கடைகள்**



**விளக்கப்படம் 3.12: வாலாங்குளம் ஏரியில் உள்ள உணவுக் கூடங்கள்**



**விளக்கப்படம் 3.13: பெரியகுளம் ஏரியில் உணவுக் கூடம்**



**விளக்கப்படம் 3.14: பெரியகுளம் ஏரியில் கைவினைப் பொருட்களின் பஜார்**



(ஆதாரம்: நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வு)

மேலும், ஏரிகளின் புத்துயிர்ப்பு மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான பணிகள் மே 2022 முதல் டிசம்பர் 2023 வரைக்குள் நிறைவேற்றப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்டது. இருப்பினும், நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வின் போது, உருவாக்கப்பட்ட வசதிகள் (உணவுக் கூடங்கள், கைவினைப் பொருட்களின் பஜார், கடைகள் போன்றவை) **(விளக்கப்படங்கள் 3.11 முதல் 3.14 வரை)** இன்றைய நிலவரப்படி (ஜூலை 2024) வரை பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை என்பதும், குமாரசாமி ஏரியில் ₹0.60 கோடி செலவில் நிறுவப்பட்ட மிதக்கும் நீரூற்றுகள் செயல்படவில்லை என்பதும் கண்டறியப்பட்டது.

மேலும், TUFIDCO அறிவுறுத்தலின்படி, ஐந்து ஆண்டுகளுக்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பு (O&M) செலவை மதிப்பீட்டில்

சேர்க்கும்படியான நிபந்தனை, ஒப்பந்த உடன்படிக்கையில் இடம்பெறவில்லை. இதனால், இது ஏரிகளைச் சுற்றியுள்ள மீட்டெடுக்கப்பட்ட இடங்கள் பராமரிக்கப்படாமல் இருந்தது **(விளக்கப்படங்கள் 3.15 மற்றும் 3.16)**. மேலும், அதிகப்படியான நடைபாதைகள் மற்றும் மிதிவண்டி ஓட்டுவதற்கான பாதைகள், களைகளால் மூடப்பட்டு விரும்பத்தகாத சூழலை உருவாக்கின.

**விளக்கப்படம் 3.15: செல்வசிந்தாமணி ஏரியின் பராமரிப்பின்மை**




**விளக்கப்படம் 3.16: செல்வம்பதி ஏரி மற்றும் குமாரசாமி ஏரியை இணைக்கும் கரையின் பராமரிப்பின்மை**




(ஆதாரம்: நேரடி கூட்டுத் தேர்ந்தாய்வு)

கோயம்புத்தூர் SCL, வருவாய் பகிர்வு அடிப்படையில் வணிக நிறுவனங்களின் O&M மற்றும் குத்தகையை ஒருங்கிணைக்கும் O&M ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் (பிப்ரவரி 2024), மேலும் பணிகள் படிப்படியாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன எனவும் பதிலளித்தது (ஆகஸ்ட் 2024). O&M மற்றும் குத்தகை ஒப்பந்தங்களை இறுதி செய்வதில் ஏற்பட்ட தாமதமானது, உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பு பயன்பாடில்லாத நிலையில் முடிந்தது. மேலும் பராமரிப்பின்மைக்கும் மற்றும் சாத்தியமான வருமான இழப்பிற்கும் வழிவகுத்தது.

இதற்கு பதிலளித்த அரசு (மே 2025) இயக்கம் மற்றும் பராமரிப்பிற்காக ஒரு பிரத்தியேக ஒப்பந்ததாரரை நியமித்ததை முன்னிலைப்படுத்தினாலும், உருவாக்கப்பட்ட வசதிகளைப் பயன்படுத்துவது குறித்து பதில் ஏதும் கூறவில்லை.

திருநெல்வேலி SCL, ₹36 கோடி செலவில் PPP முறையின் மூலம் (₹20 கோடி), தூர் வாருதல், கரைகளில் கற்கள் பதித்தல் மற்றும் மழைநீரின் மறுபயன்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய நயினார் ஏரி மறுசீரமைப்பு திட்டத்தை செயல்படுத்தவில்லை. ஆனால் இந்த மானியத்தி நயினார் ஏரி முகப்பு மேம்பாட்டுத் திட்டத்தை பொதுப்பணித்துறையின் ஒப்புதல் இல்லாமல் ₹25.78 கோடி செலவில் செயல்படுத்தியது. மேலும் திருநெல்வேலி SCL, நீரின் தரத்தையும் ஏரியின் சூழலியலையும் மீட்டெடுப்பதையே முழுமையான நோக்கமாகக் கொண்ட மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் ஒரு மத்திய நிதியுதவி பெறும் மற்றும் தேசிய ஏரி பாதுகாப்புத் திட்டத்தின் (NLCP) கீழ் ₹18.04 கோடி பலனைப் பெறவில்லை என்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது.

மேலும், SCPன் படி, ₹2 கோடியில் ஒரு MLD அளவுள்ள பரவலாக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்தப்படாத காரணத்தால், சுத்திகரிக்கப்படாத

நீர் சுற்றுச்சூழல் ஓட்டத்தைப் பாதிக்கும் வகையில் நயினார் ஏரிக்கு கொண்டு செல்லப்பட்டது.

பொதுப்பணித்துறை அனுமதி பெறப்பட்டுவிட்டது என்றும், NLCPன் கீழ் நிதி உதவி மற்றும் மானியங்களைப் பெற தீவிரமாக முயற்சித்து வருவதாகவும் அரசு பதிலளித்தது (மே 2025). மேலும் அனைத்து சுத்திகரிக்கப்படாத நீரும் அருகிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு திருப்பி விடப்படுவதாகவும், சுத்தமான மழைநீர் மட்டுமே ஏரிகளுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவதாகவும் அரசு கூறியது.

இருப்பினும், பரவலாக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படுத்தப்படாதது குறித்து பதில் ஏதும் அளிக்கப்படவில்லை.

SCPன் படி, திருநெல்வேலி SCL, மானியம், ஒருங்கிணைப்பு மற்றும் PPP முறையின் மூலம் ₹116 கோடி செலவில் (₹61 கோடியின் விகிதமாக, ₹15 கோடி: ₹40 கோடி) கரைகளை வலுப்படுத்துதல், ஆற்று கால்வாயின் பக்கங்களில் பசுமையான திறந்தவெளி, நீர்வழி நடைபாதை மற்றும் வணிக ரீதியிலான க்யோஸ்க்குகள் போன்றவற்றால் தாமிரபரணி நதிக் கால்வாயை மீட்டெடுத்து மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தவில்லை என்பது கண்டறியப்பட்டது. அதற்கு பதிலாக, மார்ச் 2024 நிலவரப்படி SCM மானியங்களிலிருந்து ₹10.02 கோடி செலவில் தாமிரபரணி நதியை அழகுப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்தியது. நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூன் 2024), வாகன நிறுத்துமிடம் மற்றும் நடைபாதை பாலம் அமைப்பதற்காக கான்கிரீட் கட்டமைப்பை ஏற்படுத்தியதன் மூலம் ஆற்று நிலம் ஆக்கிரமிக்கப்பட்டது மட்டுமல்லாமல், பொதுப்பணித் துறை அனுமதி வழங்கும்போது, விதித்த நிபந்தனைகளுக்கு எதிராக ஆற்றின் பாதையும் தடுக்கப்பட்டது கண்டறியப்பட்டது. இது ஆற்றின் ஓட்டத்தின் சுற்றுச்சூழல் நிலையைப் பாதித்தது. இவ்வாறாக, பணிகள் முடிக்கப்படுவதில் ஏற்பட்ட தாமதம், தாமிரபரணி நதியை அழகுப்படுத்துவதற்கான திறன்மிகு மற்றும் நீடித்த உள்கட்டமைப்பை உருவாக்கும் நோக்கம் நிறைவேறாததில் முடிந்தது.

நடைபாலம் கட்டுவதற்கு பொதுப்பணித் துறையிடமிருந்து தேவையான அனைத்து அனுமதிகளும் ஒப்புதல்களும் பெறப்பட்டுள்ளதாகவும், நதி சூழலியல் மற்றும் நீர்வளம் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் தீவிரமாக பின்பற்றப்பட்டு வருவதாக அரசு தனது பதிலில் கூறியது (மே 2025).

### (ii) நடைபாதை, மிதிவண்டி பாதைகள் மற்றும் பசுமையுடன் கூடிய நிலத்தோற்ற வடிவமைப்பு (landscaping) போன்ற பசுமை சூழல் வசதிகள் (பெருவழி சாலைகள் மற்றும் பிற சாலைகள்)

SCPன் படி, ஈரோடு SCL, நடைபாதைகள்/மிதிவண்டி பாதைகள், பசுமை மற்றும் நிலத்தோற்ற வடிவமைப்பு, பயன்பாட்டு குழாய் அமைத்தல் மற்றும் பகுதியின் நிலப்பரப்புக்கு ஏற்ப தேவையான சாலை சாய்வுகளுடன் மழைநீர் வடிகால் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய சாலை வலையமைப்பை மறுவடிவமைப்பு செய்யும் ஒருங்கிணைந்த திட்டத்தை

பெருவழி சாலைக்கு ₹50 கோடி மற்றும் பிற சாலைகளுக்கு ₹33.75 கோடி செலவில் செயல்படுத்த முன்மொழிந்தது. இதற்கு எதிராக, நடைபாதை மற்றும் மிதிவண்டி பாதைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட போதிலும் பெருவழி சாலைகளுக்கு பசுமை பகுதி மேம்பாட்டிற்காக ₹25.67 கோடி மற்றும் பிற சாலைகளுக்கு ₹2.40 கோடி மதிப்பிலான திட்டங்களை ஈரோடு SCL செயல்படுத்தியது.

நகர்ப்புற அழகியலை மேம்படுத்தவும், பாதசாரிகளுக்கு நிழல் மற்றும் பசுமை சூழலை வழங்கும் வகையில் மூன்று சாலைகளில் நிலத்தோற்ற வடிவமைக்கும் முன்முயற்சியுடன் நடைபாதைகள் கட்டப்பட்டுள்ளன என்று அரசு தனது பதிலில் கூறியது (மே 2025). மேலும், பாதுகாப்பான பாதசாரி நடமாட்டத்தை எளிதாக்க பயன்பாட்டு குழாய் அமைப்பு ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளதாகக் கூறியது. இதற்கு முன்னதாக, மிதிவண்டி பாதைகளுக்கு இடம் இல்லை என ஈரோடு SCLம் பதிலளித்தது (டிசம்பர் 2023). இந்த பதில், மாற்றுத் திட்டங்களை மேற்கொள்ளும் போது கூட எந்த திட்டமிடலும் செய்யப்படவில்லை என்பதைக் குறிக்கிறது. மற்ற சாலைகளின் மேம்பாடுகள் குறித்தும் பதில் ஏதும் இல்லை.

### 3.3.8 பிற திட்டங்கள்

நகர வாரியாக முன்மொழியப்பட்ட பணிகளின் எண்ணிக்கை (எண்ணிக்கை 26) மற்றும் செயல்படுத்தப்பட்ட பணிகளின் எண்ணிக்கை (எண்ணிக்கை 71) பற்றிய விவரங்கள் **இணைப்பு 3.3 (ஏ)ல்** விவரிக்கப்பட்டுள்ளன. செயல்படுத்தப்பட்ட பிற பணிகளில் சந்தைகள், ஷாப்பிங் மையங்கள், விளையாட்டு அரங்கம்/மாநாட்டு மைய மேம்பாடுகள் மற்றும் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் போன்றவை அடங்கும். 71 பணிகளில், 66 பணிகள் முடிக்கப்பட்டன. அவற்றில் 24 பணிகள் உரிய நேரத்திலும், 42 பணிகள் ஒன்று முதல் 42 மாதங்கள் வரை தாமதமாகவும் முடிக்கப்பட்டன. கோவிட்-19 பெருந்தொற்று, திருநெல்வேலியில் கனமழை போன்றவை தாமதத்திற்கான காரணங்களாகக் கூறப்பட்டன.

இவற்றுள் ஐந்து பணிகளில், அதாவது, 'மூன்று நகரங்களில் வசதிகளுடன் கூடிய சந்தை கட்டுமானத்தின் நிறைவு தேதி ஜூலை 2022 மற்றும் செப்டம்பர் 2024க்கு இடையே இருந்த போதிலும்' இன்னும் முடிக்கப்படவில்லை. முடிக்கப்பட்ட பணிகள் மற்றும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பணிகள் குறித்த தணிக்கை குறிப்புகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

#### (i) சந்தை கட்டுமானம்/மேம்பாடுகள்

நான்கு SCLகளில் சந்தை கட்டுமானம்/மேம்பாடுகளில் பின்வரும் குறைபாடுகள் தணிக்கையில் கண்டறியப்பட்டன. அவை **அட்டவணை 3.9ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.9: சந்தை கட்டுமானம்/மேம்பாடுகளில் காணப்பட்ட குறைபாடுகள்**

| நகரம் - பணி விவரங்களுடன் | பணியின் நிலை | குறிப்புகள் | மே 2025 தேதியிடப்பட்ட அரசின் பதில் |
|---|---|---|---|
| **ஈரோடு:** ₹14.48 கோடி செலவில் காய்கறி சந்தை கட்டுமானம். | இந்தப் பணி பிப்ரவரி 2023ல் நிறைவேற்றப்பட்டது. இருப்பினும், சந்தை பொதுமக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படவில்லை (ஜூலை 2024). | ஜூலை 2024ல் நடைபெற்ற நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது, (i) மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை, (ii) நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் வாயில்கள் பொருத்தப்படவில்லை, (iii) பொதுமக்களுக்கு சுகாதாரக் கேடு விளைவிக்கும் வகையில் திறந்தவெளி வடிகால் வசதி செய்யப்பட்டிருந்தது மற்றும் (iv) காய்கறி சந்தையாக இருப்பதால், காய்கறி கழிவுகள் அதிகமாகக் குவியும். ஆனால் உள்ளேயும் வெளியேயும் குப்பைத்தொட்டிகள் அமைக்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. | மின் இணைப்பு பெறப்பட்டுள்ளதாகவும், தணிக்கையால் சுட்டிக்காட்டப்பட்ட மற்ற அனைத்து வசதிகளும் தற்போது மாநகராட்சியின் பொது நிதியைப் பயன்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அரசு பதிலளித்தது.<br>இருப்பினும், SCM நிதியிலிருந்து இந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி குறித்தும் மாநகராட்சி நிதியிலிருந்து இந்த வசதிகளை செயல்படுத்தியதற்கான காரணங்கள் குறித்தும் பதில் ஏதும் இல்லை. |
| **ஈரோடு:** காய்கறி சந்தையில் ₹0.72 கோடி செலவில் சோலார் பேனல்கள், குளிர்பதன கிடங்கு மற்றும் ஜெனரேட்டர் ஆகியவற்றை நிறுவுதல் போன்ற கூடுதல் பணிகள். | குளிர்பதன கிடங்கு மற்றும் ஜெனரேட்டர் மட்டுமே இருந்தன, மேலும் சோலார் பேனல்கள் பொருத்தப்படவில்லை. மேலும், காய்கறி சந்தை இயங்காததால், நிறுவப்பட்ட நாளிலிருந்து (ஏப்ரல் 2023) குளிர்பதன கிடங்கு மற்றும் ஜெனரேட்டர் செயல்படாமல் இருந்தன. | இந்தப் பணிக்கான திட்டமிடப்பட்ட சோலார் பேனல்கள் மிகவும் சிறியது (இரண்டு கிலோவாட்) என்றும், கட்டிடத்தின் மின்சக்தித் தேவையைக் கருத்தில் கொண்டு, அதை அதிக திறனுக்கு உயர்த்துவதற்கான பணி முன்மொழிவு நிலையில் உள்ளது என்றும் ஈரோடு SCL கூறியது. மேலும் ஒப்புதல் பெற்ற பிறகு, அதிக திறன் கொண்ட சோலார் பேனல்கள் நிறுவப்படும் என்றும் கூறப்பட்டது. சந்தைக்கு ஏற்ற சோலார் பேனல்களைத் தேர்ந்தெடுப்பதில் சரியான திட்டமிடல் இல்லாததை இப்பதில் சுட்டிக்காட்டுகிறது. | இது தொடர்பாக அரசின் பதிலில் எந்த குறிப்பிட்ட பதிலும் இல்லை. |
| **ஈரோடு:** ஜவுளி சந்தை கட்டுமானம் (₹55.60 கோடி) மற்றும் ஷாப்பிங் மையம் (₹16.52 கோடி). | சந்தை மே 2022ல் பயன்பாட்டிற்கு வந்தது. | கட்டப்பட்ட 509 கடைகளில், 279 கடைகள் மட்டுமே ஏலம் விடப்பட்டுள்ளன (ஜூலை 2024), மீதமுள்ள 230 கடைகள் மூடப்பட்டுள்ளன. மேலும், கடைகள் ஏலம் விடப்படாத காரணத்தினால் ஷாப்பிங் மையமும் பயன்படுத்தப்படவில்லை (ஜூலை 2024). | 293 கடைகள் ஏலம் விடப்பட்டு முழுமையாக செயல்பட்டு வருவதாகவும், மீதமுள்ள 216 கடைகள் ஏலம் விடப்படுவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் அரசு பதிலளித்தது. இவ்வாறாக, கடைகள் ஏலம் எடுக்கப்படாததால் வருவாய் ஈட்டும் பலன் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக அதிகரிக்கவில்லை. |

| நகரம் - பணி விவரங்களுடன் | பணியின் நிலை | குறிப்புகள் | மே 2025 தேதியிடப்பட்ட அரசின் பதில் |
|---|---|---|---|
| **சேலம்:** ₹15.79 கோடி செலவில் வ.உ.சி சந்தை கட்டுமானம். | ஜனவரி 2023ல் சந்தை கட்டி முடிக்கப்பட்டது. பூச்சந்தையில் 251 கடைகள் மட்டுமே ₹9.08 கோடிக்கு ஏலம் விடப்பட்டிருந்ததாலும், இறைச்சி சந்தையில் 33 கடைகள் ஏலம் விடப்படாதிருந்ததாலும் (ஜூலை 2024) இந்தச் சந்தை ஓரளவு மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூலை 2024) இரண்டாவது மாடியில் உள்ள பூச்சந்தைக்காக ஏலம் விடப்பட்ட கடைகள் குத்தகைதாரரால் பயன்படுத்தப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது. தரை தளத்தில் காலியாக இருந்த இறைச்சி சந்தைக்கான இடம் முறையாக பராமரிக்கப்படாமல், மிகவும் சுகாதாரமற்ற முறையில் இருந்தது. இதற்கான பதிலில், வருவாய் பிரிவு அறிக்கையின்படி, பூச்சந்தையில் உள்ள அனைத்து கடைகளும் (தரை, முதல் மற்றும் இரண்டாவது தளம்) ஏலம் விடப்பட்டதாகவும், இறைச்சி சந்தையில் உள்ள கடைகள் விரைவில் ஏலம் விடப்படும் என்றும், சேலம் மாநகராட்சியின் சுகாதாரப் பிரிவு மூலம் இறைச்சி சந்தைப் பகுதியை சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டது. | அரசு தனது பதிலில் இறைச்சி கடைகளை ஏலம் விடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறியது. இவ்வாறாக, ஏலம் எடுக்கப்படாததால், வருவாய் ஈட்டும் பலன் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அதிகரிக்கவில்லை. |
| **திருநெல்வேலி:** ₹56.56 கோடி மதிப்பீட்டில் சந்தை மேம்பாடுகள் (நான்கு பணிகள்). | நான்கு பணிகளில் இரண்டு பணிகள்[10] மட்டுமே (பிப்ரவரி/ஆகஸ்ட் 2023) ₹26.25 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் அவை பயன்படுத்தப்படவில்லை. | மார்ச் 2024 நிலவரப்படி மற்ற இரண்டு பணிகளும் நடைபெற்று வந்தன. | பணி நிறைவடைந்த சந்தைகளில் உள்ள கடைகளை ஏலம் விடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசு பதிலளித்தது.<br>இருப்பினும், மீதமுள்ள இரண்டு சந்தைகள் குறித்து பதில் ஏதும் இல்லை. |
| **திருப்பூர்:** ₹29.29 கோடி செலவில் தினசரி சந்தை கட்டுமானம். | டிசம்பர் 2020க்குள் முடிக்கப்பட வேண்டிய பணி இன்னும் முடிக்கப்படவில்லை (ஜூன் 2024). | தினசரி சந்தை கட்டுமானப் பணிகள் நிறைவடையாததால், பொதுமக்கள் எதிர்பார்க்கப்பட்ட பலன்களை இழக்க நேரிட்டது. | அரசு, இந்தப் பணி ஏற்கனவே நிறைவடைந்துவிட்டது என்றும், முந்தைய கடை உரிமையாளர்களுடைய (மறுமேம்பாட்டிற்கு முன்) வேண்டுகோளின் அடிப்படையில், கூடுதல் பணிகள் முடிந்த பிறகு வணிக இடங்களை ஏலம் விடுவதற்கான செயல்முறை மேற்கொள்ளப்படும் என்றும் பதிலளித்தது. எனவே, பணி தாமதமாக முடிக்கப்பட்டதாலும் ஏலம் விடப்படாததாலும் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைய முடியவில்லை. |

[10] மொத்த விற்பனை சந்தை மற்றும் போஸ் சந்தை.

**(ii) விளையாட்டு அரங்கம்/மாநாட்டு மையத்தை மேம்படுத்தும் பணிகள்**

கோயம்புத்தூர் SCL, வருவாய் பகிர்வு அடிப்படையில் ஒரு அறக்கட்டளையின்[11] கூட்டுமுயற்சியுடன், கோயம்புத்தூர் நேரு விளையாட்டு அரங்கில் உள்கட்டமைப்பு வசதிகளை[12] உருவாக்குவதற்காக ₹2.25 கோடியை முதலீடு செய்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி (MoU), வருவாய் பகிர்வு முறையில் ₹2.26 கோடி எதிர்பார்க்கப்படும் நேரடி பணப் பலனும்[13] அடங்கும். மேலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, அறக்கட்டளை மார்ச் 2023 உடன் முடிவடைந்த ஐந்து ஆண்டு காலத்தில் கோவை SCLக்கு திருப்பிச் செலுத்தப்படாத முதலீட்டு நிலுவைத் தொகையை ஈடுசெய்ய வேண்டும். இருப்பினும், அறக்கட்டளை ₹0.70 இலட்சம் (2018-19ஆம் ஆண்டுக்கு) மட்டுமே செலுத்தியுள்ளது, மேலும் நிலுவைத் தொகைக்கான நினைவூட்டல்கள் வழங்கப்பட்ட போதிலும், மேற்கொண்டு வருவாய் ஏதும் பகிரப்படவில்லை. கோயம்புத்தூர் மாநகராட்சியின் சட்டப்பிரிவு, நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்காக அறக்கட்டளைக்கு எதிராக சட்ட நடவடிக்கை தொடங்கியிருப்பதாக கோயம்புத்தூர் SCL தெரிவித்துள்ளது (ஆகஸ்ட் 2024).

CCFCன் பயன்படுத்தாமை மற்றும் இணக்கமின்மை தொடர்பான பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, இந்தப் பணியின் கீழ் செலவிடப்பட்ட தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு முறையான தகவல் அனுப்பப்பட்டுள்ளதாக அரசு பதிலளித்தது (மே 2025).

(அ) சேலம் SCL, 'காலியாக உள்ள போஸ் மைதானம்' பகுதியை, குழந்தைகள் விளையாட்டுப் பகுதி, திறந்தவெளி உடற்பயிற்சி கூடம், ஓடுபவர்களுக்கான பாதை போன்ற ஒரு புதுமையான பொழுதுபோக்கு இடமாக ₹21 கோடியில் மறுமேம்பாடு செய்ய முடிவு செய்தது. இருப்பினும், விரிவான திட்ட அறிக்கை (DPR) மற்றும் நிர்வாக ஒப்புதலின்படி, இந்தப் பணி 'போஸ் மைதானத்தை திறந்தவெளி அரங்கம் மற்றும் கண்காட்சி மைய மறுமேம்பாடு', 'ஒரு மேடை (அறைகளுடன் கூடிய மேடை)', 'சுற்றுச் சுவர்' மற்றும் 'ஒரு ஷாப்பிங் வளாகம்' கட்டுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. சேலம் SCL, ₹10.58 கோடி செலவில் இந்தப் பணியை மேற்கொண்டு, ஏப்ரல் 2024ல் முடிக்கப்பட்டது. நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது, (ஜூலை 2024) ஷாப்பிங் வளாகத்தின் தரை தளத்தில் ஒரு கடை மட்டுமே திறந்திருப்பதும், மூன்று தளங்களில் இருந்த மீதமுள்ள கடைகள் காலியாக இருப்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது. மேடையும் இன்னும்

[11] சென்னை நகர கால்பந்து கிளப் (CCFC) அறக்கட்டளை - தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் கோயம்புத்தூரில் உள்ள நேரு விளையாட்டு அரங்கத்தில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள ஒப்படைக்கப்பட்ட அமைப்பு.

[12] 98 பொருத்துதல்களுடன் இரண்டு புதிய உயர் மாஸ்ட் விளக்குகளை வழங்குதல் மற்றும் தற்போதுள்ள நான்கு மாஸ்ட்களில் 29 பொருத்துதல்களை மாற்றுதல்.

[13] 2018-23 ஆண்டுகளில் முன்மொழியப்பட்ட கால்பந்து அகாடமியிலிருந்து நுழைவு வசூல் மற்றும் கட்டண வசூலில் பங்கு.

பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை. அதற்கு பதிலளிக்கும் விதமாக (ஜூலை 2024), சேலம் SCL, புதிதாக கட்டப்பட்ட மேடை மற்றும் மைதானம் அரசு கண்காட்சிகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று கூறியது. ஷாப்பிங் வளாகத்தில் உள்ள 76 கடைகளில் 10 கடைகள் ஏற்கனவே ஏலம் விடப்பட்டுள்ளன. மீதமுள்ள கடைகளையும் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசு, ₹48.26 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 66 கடைகளுக்கான ஏலத்திற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் பதிலளித்தது (மே 2025). இருப்பினும், ஏலம் எடுக்கப்படாததால் வருவாய் ஈட்டும் பலன் ஒரு வருடத்திற்கும் மேலாக பெறப்படவில்லை.

(ஆ) மேலும், சேலம் SCLஆல், நேரு கலையரங்கத்தின் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால், இன்னும் பணிகள் முடிக்கப்படவில்லை (ஜூலை 2024). மே 2021க்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டியதாக இருந்தது. மார்ச் 2024 நிலவரப்படி, ₹35.23 கோடி செலவிடப்பட்ட போதிலும், குடிமராமத்து பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டு மின் பணிகள் நடைபெற்று கொண்டிருந்தன (ஜூலை 2024).

அனைத்துப் பணிகளும் நிறைவடைந்துள்ளதாகவும், பயனாளிகளிடமிருந்து வாடகையாக ₹2.97 இலட்சம் வருவாய் வசூலிக்கப்பட்டுள்ளதாகவும் அரசு பதிலளித்தது (மே 2025). மேலும், தொடர்ந்து திறமையான மேலாண்மைக்காக, இந்த சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக ஏல செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது என்றும் பதிலளிக்கப்பட்டது. இதனால், முதலில் எதிர்பார்க்கப்பட்ட கட்டுமானம் முடிவடைய வேண்டிய தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கடந்த பின்பும் முன்மொழியப்பட்ட நோக்கம் முழுமையாக அடையப்படவில்லை. மேலும் சொத்து ஏலம் விடப்படாததால் வருவாய் பலனை ஈட்ட முடியவில்லை.

திருப்பூர் SCLஆல், வணிக சமூகம் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக நிரந்தர கண்காட்சி மற்றும் சமூகக் கூடம் அமைக்கும் நோக்கத்துடன் ₹53.46 கோடி செலவில் 'மாநாட்டு மையக் கட்டுமானம்' என்ற திட்டமிடப்படாத பணி செயல்படுத்தப்பட்டது. இருப்பினும், ஜனவரி 2019ல் பணி ஆணை வழங்கப்பட்ட போதிலும், இடத்தை ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக செப்டம்பர் 2020ல் மட்டுமே கட்டுமானம் தொடங்கப்பட்டது. உடன்படிக்கையின்படி, இப்பணி 24 மாதங்களில், அதாவது செப்டம்பர் 2022க்குள் முடிக்கப்பட வேண்டும். மார்ச் 2023 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்ட போதிலும், மேற்கொண்டு வழங்கப்பட்ட இறுதி கால நீட்டிப்பிலிருந்து 14 மாதங்கள் கடந்த பிறகும் பணிகள் முடிக்கப்படாமல் நடைபெற்று வந்தன (ஜூன் 2024). மேலும், பணியை முடிக்க தாமதமான காலத்திற்கான அறுதியிட்ட இழப்பீடாக ₹42 இலட்சம் விதிக்க வேண்டிய நிலையில், ₹16 இலட்சம் மட்டுமே விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது.

தாமதமான பணிகளுக்கு அபராதமாக ₹26 இலட்சம் விதிக்கப்பட்டதாக அரசு பதிலளித்தது (மே 2025). அவற்றின் வசூல் விவரங்கள் அரசிடமிருந்து

எதிர்பார்க்கப்படுகின்றன. இருப்பினும், பணிகள் முழுமையடையாததால், இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைய முடியவில்லை.

### (iii) சுற்றுலா மேம்பாடுகள்

மதுரை SCL (அக்டோபர் 2020/ஏப்ரல் 2022) ₹18.91 கோடி மதிப்புள்ள பாரம்பரிய வளாக மேம்பாட்டுப் பணிகள், அதாவது ₹2.44 கோடியில் வருகை வளாகம் & பாரம்பரிய பஜார் கட்டிடம், ₹9.06 கோடியில் நான்கு சித்திரை வீதி & மீனாட்சி பூங்காவை புனரமைத்தல் மற்றும் ₹7.41 கோடியில் புதுமண்டபம் கடைகளை குன்னத்தூர் சத்திரத்திற்கு மாற்றுதல் போன்றவற்றை நிறைவேற்றியது. நேரடி கூட்டு தேர்ந்தாய்வின் போது (ஜூன் 2024), பாரம்பரிய பஜாரில் உள்ள 10 கடைகளில் இரண்டு கடைகள் இயங்கவில்லை என்பதும், இந்த பயன்படுத்தப்படாத கடைகள் வார்டு சுகாதாரப் பிரிவு மற்றும் வரி வசூல் மையமாகப் பயன்படுத்தப்பட்டன என்பதும் தணிக்கையில் கண்டறியப்பட்டது. மேலும், ஏப்ரல் 2022ல் முடிக்கப்பட்ட வருகை வளாகம் இன்றுவரை (ஜூலை 2024) இயங்கவில்லை. உருவாக்கப்பட்ட சொத்துக்கள் பயன்படுத்தப்படாததற்கான காரணங்கள் எதுவும் கூறப்படவில்லை.

வருகை வளாகம் மற்றும் பாரம்பரிய பஜாரில் உள்ள 13 வணிகக் கடைகளில் ஒன்பது வெற்றிகரமாக ஏலம் விடப்பட்டுள்ளன என்று அரசு பதிலளித்தது (மே 2025).

இருப்பினும், மற்ற இடங்களில் உள்ள கடைகள் ஏலம் விடப்படுவது குறித்து பதில் ஏதும் இல்லை.

திருநெல்வேலி SCL, நெல்லையப்பர் கோயிலுக்கு அருகில் பல நினைவுச்சின்னங்களைக் கொண்ட இயற்கை, கலாச்சார, பொழுதுபோக்கு, பூர்வீக பாரம்பரிய மைய மேம்பாட்டிற்கு, ₹105.50 கோடி மதிப்பீட்டிலான முன்மொழிவிற்கு ஒப்புதல் அளித்தது. இதில், புதிய சுற்றுலா ஈர்ப்புகளை உருவாக்குவதுடன், பொது வசதிகள், ஸ்மார்ட் ஸ்கை வாக், தகவல் கியோஸ்க்குகள், தண்ணீர் விற்பனை இயந்திரங்கள் போன்ற தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதும் அடங்கும். இந்த முன்மொழிவிற்கு மாறாக, திருநெல்வேலி SCL மார்ச் 2024 நிலவரப்படி, மூன்று போக்குவரத்து குறியீட்டுப் பணிகள், ஒரு புத்துணர்ச்சி பெறும் பிரசித்தி பெற்ற சுற்றுலா ஈர்ப்பு இடங்கள் போன்ற ₹25.70 கோடி மதிப்புள்ள பணிகளைச் செயல்படுத்தியது என்பது கண்டறியப்பட்டது. ஆனால், SCP தொலைநோக்கில் எதிர்பார்க்கப்பட்டபடி, சீர்மிகு ஸ்கை வாக் பணி, சுற்றுலா பயணிகளுக்கான தகவல் மற்றும் வணிக கியோஸ்க்குகள், தண்ணீர் விற்பனை இயந்திரங்கள், பொது கலை, தெரு தளவாடங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் சிற்பங்கள், நிலத்தை அழகுப்படுத்துதல் போன்ற ₹79.80 கோடி மதிப்புள்ள பிற பணிகளை மேற்கொள்ளவில்லை. எனவே நகர்ப்புற பாரம்பரியத்தை புத்துணர்ச்சியூட்டல், பாரம்பரிய பகுதிகளை மாற்றியமைத்தல் மற்றும் சாத்தியமான சுற்றுலா வளர்ச்சி என்ற எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறவில்லை. இதற்கான பதிலில்

(டிசம்பர் 2023), மக்கள் தொகை நெருக்கம் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாக, பணிகளைச் செயல்படுத்த முடியவில்லை என்று கூறப்பட்டது. முன்மொழிவினைத் தயார் செய்யும் நிலையிலேயே குடிமக்களுடன் ஆலோசனை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதாலும், பணிகள் உரிய திட்டமிடலுக்குப் பிறகு இறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதாலும் இந்தப் பதில் ஏற்கத்தக்கதாக இல்லை.

### (iv) வணிகக் கட்டிட மேம்பாடு

சேலம் SCL, கட்டிடத் திட்ட ஒப்புதல் மற்றும் TNPCB அனுமதி இல்லாமல் மானியங்களில் இருந்து ₹57.80 கோடி செலவில் ஒன்பது பணிகளை[14] நிறைவேற்றியது. நான்கு பணிகளில்[15], கட்டப்பட்ட வணிக இடம்/கடைகள் முழுமையாக குத்தகைக்கு விடப்படவில்லை என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. வணிக இடம்/கடைகளை ஏலம் விடப்படாததால், சேலம் SCL, இந்தப் பணிகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருவாயை ஈட்ட முடியவில்லை. அதற்கு பதிலளிக்கும் விதமாக, கடைகளின் மறு ஏலம் நடைபெறும் என்றும், கோட்டையில் உள்ள வணிக வளாகம் மற்றும் உடற்பயிற்சி மையத்தைப் பொறுத்தவரை, அனைத்து கடைகளும் ஏலம் விடப்பட்டு இயங்கி வருகின்றன என்றும் கூறப்பட்டது.

அரசு (i) திருமணி நாளங்காடி பகுதியில் உள்ள வணிக வளாகத்தில் 36 கடைகளில், 24 கடைகள் ஏலம் விடப்பட்டுள்ளன, (ii) அறிவியல் பூங்கா ஒரு பொது கல்வி வசதியாக செயல்படுகிறதே அன்றி வருவாய் ஈட்டும் முயற்சியாக நோக்கப்படவில்லை, (iii) கிருஷ்ண ராஜேந்திர சத்திரம் தற்போது சூரமங்கலம் மண்டல அலுவலகமாக செயல்படுகிறது (iv) பெரியார் வளாகத்தில், ஏழு தளங்களில் இரண்டு தளங்கள் ₹4.07 இலட்சம் மாத வாடகை வருமானத்துடன் வெற்றிகரமாக ஏலம் விடப்பட்டுள்ளன என்று பதிலளித்தது (மே 2025).

SCM நிதியிலிருந்து முடிக்கப்பட்ட ஒரு பணியில், எந்த வருவாயையும் ஈட்டாமல், மாநகராட்சியின் மண்டல அலுவலகத்தை இயங்கச் செய்வது SCM வழிகாட்டுதல்களை மீறுவதாகும் என்பதாலும், அறிவியல் பூங்காவை உருவாக்குவதில் வருவாய் ஈட்டுவதும் ஒரு நோக்கமாக இருந்தது என்பதாலும் இந்தப் பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

### (v) காற்றின் தரக் கண்காணிப்பு

கோவை SCLல், காற்றின் தரத்தை கண்காணிக்க, சூரிய சக்தியால் இயங்கும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு அமைப்பு (உணர்கருவிகள்) ₹0.11 கோடி செலவில் 30 இடங்களில் நிறுவப்பட்டது. இந்தப் பணி

---

[14] திருமணி நாளங்காடி மற்றும் கோட்டை பழைய சந்தை சாலையில் வணிக வளாகங்கள், தொங்கும் தோட்டம் மற்றும் கோட்டையில் பல்நோக்கு அரங்குகளின் மறுமேம்பாடு, அறிவியல் பூங்கா, அண்ணா பூங்காவின் மறுமேம்பாடு, கிருஷ்ணராஜேந்திர சத்திரத்தின் மறுமேம்பாடு, கோட்டையில் உள்ள உள்விளையாட்டு அரங்கம், பெரியார் வளாகத்தின் மறுமேம்பாடு.

[15] திருமணி நாளங்காடியில் உள்ள வணிக வளாகங்கள், அறிவியல் பூங்கா, கிருஷ்ணராஜேந்திர சத்திரத்தின் மறுமேம்பாடு மற்றும் பெரியார் வளாகத்தின் மறுமேம்பாடு.

ஜூலை 2017ல் நிறைவடைந்தது. மேலும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி, ஒரு வருட உத்தரவாதக் காலத்திற்குப் பிறகு உணர்கருவிகள் இரண்டு ஆண்டுகளுக்கு வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தத்தின் கீழ் இருந்தன. இந்த உணர்கருவிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட எந்தவொரு அறிக்கைகளோ அல்லது காற்றின் தரம் குறித்து மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு பகுப்பாய்வு பற்றிய தகவலோ கொண்ட எந்த பதிவுகளும் தணிக்கைக்கு வழங்கப்படாததால், நிறுவப்பட்ட 30 உணர்கருவிகளும் டிசம்பர் 2021 முதல் செயல்படவில்லை என்பது ஆய்வில் தெரியவந்தது. உணர்கருவிகளின் செயல்பாட்டு நிலை குறித்த தணிக்கை கேள்விக்கு, நிறுவப்பட்ட உணர்கருவிகள் பயனுள்ள வகையில் ஆயுட்காலத்தை விட அதிக காலம் இயங்கியதால், வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் தொடரப்படவில்லை என்றும் உணர்கருவிகளும் செயல்படவில்லை என்றும் கோவை SCL பதிலளித்தது (ஆகஸ்ட் 2024).

அரசு, தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொடக்க நிலை நிறுவனங்களுடன் இணைந்து, கண்காணிப்பு அமைப்புகளின் நீடித்த நிலையான செயல்பாடு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காக அவர்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, தேவையான பழுதுபார்ப்பு மற்றும் திருத்தப் பணிகளை மேற்கொள்ள மாநகராட்சி முன்மொழிந்துள்ளதாக பதிலளித்தது (மே 2025). இதனால், எட்டு ஆண்டுகளுக்குப் பிறகும், உணர்கருவிகளை நிறுவுதலில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் முழுமையாக அடையப்படவில்லை.

### (vi) லாரி முனையக் கட்டுமானம்

திருநெல்வேலி SCLல், டிசம்பர் 2019ல் ₹15.22 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்ட லாரி முனையம், ஐந்து ஆண்டுகள் கடந்த பிறகும் பயன்பாட்டிற்கு வரவில்லை.

லாரி முனையத்தின் பயன்பாடு அல்லது அதனுடைய வேறு எந்த விதமான பயன்பாடும் குறித்து அரசினால் எந்தவொரு குறிப்பிட்ட பதிலும் வழங்கப்படவில்லை (மே 2025).

**பரிந்துரை 9: அரசு, நடப்பில் உள்ள பணிகளை விரைவாக முடிப்பதற்காக, காலவரம்பைத் தீவிரமாக பின்பற்றுமாறும் மற்றும் உருவாக்கப்பட்ட சொத்துக்களை திறம்பட பயன்படுத்துமாறும் SCLகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.**

## 3.4 கவனம் ஈர்க்கும் மற்ற குறிப்புகள்

### 3.4.1 ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஒப்பந்த மேலாண்மை

SCMன் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகளில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 (TNTTA) மற்றும் விதிகள், 2000 (TNTTR) ஆகியவற்றைப் பின்பற்றாத நிகழ்வுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

**கோயம்புத்தூர்:** கோயம்புத்தூர் SCL, ₹51.43 கோடி ஒப்பந்த மதிப்புக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதன் மூலம் 'பெரியகுளம் ஏரி மறுசீரமைப்பு மற்றும் புத்துயிர்ப்பு' பணியை ஒரு ஒப்பந்ததாரரிடம் ஒப்படைத்தது (பிப்ரவரி 2019). பதிவுருக்களை ஆய்வு செய்ததில், 'செல்ஃபி பூங்கா' அமைப்பது என்ற பணியின் ஒரு பகுதி கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 15ஐ மேற்கோள் காட்டி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரால் ஒப்புதலளிக்கப்பட்டது தெரியவந்தது (மார்ச் 2023). மேற்கண்ட பணிக்கான மதிப்பிடப்பட்ட செலவு ₹0.60 கோடி மற்றும் மறுசீரமைப்பு பணிகளின் ஒப்புக்கொள்ளப்பட்ட அளவுப் பட்டியலுக்கும் மேலான ஒரு துணை பணியாகும். TNTTA பிரிவு 16(a)ன் விதிகளை மேற்கோள் காட்டி, வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்வு செய்யப்பட்ட வேறு ஒப்பந்ததாரர் மூலம் ₹0.63 கோடி செலவில் பணி நிறைவேற்றப்பட்டது (மே 2023). இருப்பினும், ஒட்டுமொத்த பணிக்கு ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த பட்டியலில் பணி மதிப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

இதேபோல், 'செல்வம்பதி & குமாரசாமி ஏரியின் மறுசீரமைப்பு மற்றும் புத்துயிர்ப்பு' பணி (அக்டோபர் 2019/மே 2020) ஒரு ஒப்பந்ததாரரிடம், கட்டுமானப் பணிகளுக்கு ₹24.43 கோடிக்கும், 'தோட்டக்கலை, நீர்ப்பாசனம் மற்றும் மின்சாரப் பணிகளுக்கு ₹7.22 கோடிக்கும் ஒப்பந்த மதிப்புக்கு ஒப்பந்தப்புள்ளி செயல்முறை மூலம் ஒப்படைக்கப்பட்டது. ஒப்புக்கொள்ளப்பட்ட அளவுப் பட்டியலுக்கு மேல் கூடுதல் பணிகள் அதாவது ₹0.51 கோடி மதிப்பில் 15 மிதக்கும் நீரூற்றுகளை நிறுவுதல் என்ற ஒரு பணியைச் செயல்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டது (ஏப்ரல் 2023). வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி செயல்முறை மூலம் தேர்வு செய்யப்பட்ட வேறு ஒப்பந்ததாரர் மூலம் ₹0.60 கோடி செலவில் பணி நிறைவேற்றப்பட்டது. இருப்பினும், ஒட்டுமொத்த பணிக்காக ஒப்படைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் ஒப்பந்த பட்டியலில் இப்பணி மதிப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, தணிக்கையில் கண்டறியப்பட்டதாவது:

- TNTTA மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி விதிகளிலிருந்து மேற்கோள் காட்டப்பட்ட விதிகள், பேரிடர்கள் மற்றும் அரசால் அறிவிக்கப்பட்ட அவசரநிலைகளின் போது செய்யும் கொள்முதல் தொடர்பானவை. இருப்பினும், மேற்கூறிய பணிகளை 'அவசர சூழ்நிலைகள்' என வகைப்படுத்த முடியாது.
- மேலும், மேற்கண்ட பணிகளை நிறைவேற்றுவதற்கான மதிப்பிடப்பட்ட தொகை ₹25 இலட்சத்திற்கும் அதிகமாக இருந்தாலும், வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி செயல்முறை மூலம் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் பணிகள் வழங்கப்பட்டன. இது TNTTA விதிகளை மீறுவதாகும்.

- மேலும், மேலே குறிப்பிடப்பட்ட பணிகளுக்கான கட்டணம் வரையறுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மூலம் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படாமல், பணியை முழுவதுமாக மேற்கொண்ட அந்தந்த ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டது. அதற்கான காரணங்கள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பதிவுகளில் கிடைக்கப்பெறவில்லை.

அரசு, உரிய ஒப்பந்தப்புள்ளி செயல்முறை பின்பற்றப்பட்டு, செலவுத் திறனை உறுதி செய்வதற்காக குறைந்தபட்ச தொகைக்கு ஏலம் தேர்வு செய்யப்பட்டது என்றும், இந்தக் கூறுக்கான பணியை முடிப்பதற்கான பொறுப்பு அசல் ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் பதிலளித்தது (மே 2025).

அசல் ஒப்பந்ததாரருடன் எந்த ஒப்பந்தப் பொறுப்பும் இல்லை என்பதாலும், மேற்கண்ட பணிகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல வசதிகள் இன்னும் பயன்பாட்டிற்கு வரவில்லை என்பதாலும், TNTTA விதிகளைப் பின்பற்றாததற்கு விளக்கப்பட்ட சூழ்நிலைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

**பரிந்துரை 10: TNTTAன் விதிகள் எதிர்காலத்தில் முற்றிலுமாகப் பின்பற்றப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

### 3.4.2 உயர் அதிகாரம் கொண்ட திட்ட ஒப்புதல் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தாமை

SCM வழிகாட்டுதல்களுக்கான இணைப்பு 5ன் பத்தி 4.1.4ன் படி, மாநில அரசின் ஒப்புதல் தேவைப்படும் இடங்களில், சீர்மிகு நகரங்களுக்கான மாநில அளவிலான உயர் அதிகாரம் கொண்ட வழிகாட்டுதல் குழுவிற்கு (HPSC) அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், **பத்தி 3.1.4ல்** விவாதிக்கப்பட்டபடி, சீர்மிகு நகர பணிகளுக்கான முடிவெடுக்கும் அதிகாரங்கள் தொடர்ந்து ULBகள்/நகராட்சி நிர்வாகத் துறையிடம் இருந்தன. மேலும் **அட்டவணை 3.10ல்** விவரிக்கப்பட்டுள்ளபடி பணிகளுக்கு ஒப்புதலளிப்பதற்கான நிதி அதிகாரங்களை தமிழ்நாடு அரசு உத்தரவிட்டது (ஏப்ரல் 2017/ஜூன் 2018).

**அட்டவணை 3.10: நிதி அதிகாரங்கள்**

| வ. எண் | பணி ஒப்புதல் அதிகாரம் | ஏப்ரல் 2017 நிலவரப்படி நிர்வாக ஒப்புதல் வரம்பு | திருத்தப்பட்ட நிர்வாக ஒப்புதல் வரம்பு (ஜூன் 2018 முதல்) |
|---|---|---|---|
| | | (₹ கோடியில்) | |
| 1 | GCCன் குழு | 10.00 | 25.00 |
| 2 | மற்ற மாநகராட்சிகள் | 1.35 | 3.00 |
| 3 | நகராட்சி நிர்வாக ஆணையரகம் | 6.50 | 15.00 |

(ஆதாரம்: தமிழ்நாடு அரசின் உத்தரவுகள்)

மேற்கூறிய நிதி அதிகாரங்களைக் குறிப்பிடும் அதே வேளையில், தமிழ்நாடு அரசு, மேலே குறிப்பிடப்பட்ட நிதி வரம்பை விட அதிக செலவாகும் திட்டங்களுக்கு மதிப்பீட்டு அறிக்கையை பரிசீலிக்கவும், கடன்கள் மற்றும் மானியங்களின் அளவு உட்பட நிதி வழிமுறைகளை இறுதி செய்யவும், நிர்வாக அனுமதியை வழங்கவும் உயர் அதிகாரம் கொண்ட திட்ட ஒப்புதல் குழுவை[16] (HPPSC) அமைக்க அறிவுறுத்தியது.

2016-2023 காலகட்டத்தில், HPPSCஆல் 14 கூட்டங்கள் நடத்தப்பட்டன. இக்கூட்டத்தில், 11 சீர்மிகு நகரங்களாலும், ₹6,037.80 கோடி பண மதிப்பிலான (பணிகளின் செலவு) 86 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன. HPPSC ஆய்வுக்குப் பிறகு, ₹1,010.78 கோடி அளவிற்கு செலவு குறைப்புடனும், ₹9.95 கோடி கூடுதல் செலவில் ஐந்து பணிகளுடன், ₹3,877.50 கோடி (முன்மொழியப்பட்ட செலவு - ₹4,888.28 கோடி), மதிப்புள்ள 70 பணிகளுக்கு ஒப்புதல் அளித்தது.

மேலும், கீழ் மட்ட அளவில் (SCL/கவுன்சில்/CMA) ஒப்புதலளிக்கும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட நிதி வரம்பிற்குள் பணியின் மதிப்பிடப்பட்ட செலவை வைத்திருக்கும் பொருட்டு, நகரங்கள் பணிகளைப் பல பணிகளாகவோ மற்றும்/அல்லது தனித்தனி தொகுப்புகளாகவோ பிரித்திருப்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. மேலும், ₹590.58 கோடி உள்ளடக்கிய 12 பணிகளில், தனிப்பட்ட பணிச் செலவு நிர்ணயிக்கப்பட்ட ஒப்புதலளிப்பதற்கான வரம்பை விட அதிகமாக இருந்தாலும், HPPSC இடம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கு பதிலாக, அப்பணிகள் அந்தந்த SCLகள்/ULBகளின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்பட்டன. பிரிக்கப்பட்டதன் விளைவாக, HPPSC இடம் சமர்ப்பிக்கப்படாத நகர வாரியான பணிகளின் விவரங்கள் **அட்டவணை 3.11** மற்றும் **இணைப்பு 3.4ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.11: HPPSCக்கு சமர்ப்பிக்கப்படாத பணிகள்**

**(₹ கோடியில்)**

| நகரம் | தனிப்பட்ட பணிகள் | | ஒரே மாதிரியான பணிகள் | | |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | திட்டப்பணிகள் | மதிப்பு |
| கோயம்புத்தூர் | 4 | 277.48 | 1 | 2 | 23.61 |
| ஈரோடு | 3 | 84.41 | 1 | 2 | 21.87 |
| மதுரை | 0 | 0 | 1 | 2 | 30.25 |
| சேலம் | 0 | 0 | 5 | 23 | 206.42 |
| திருநெல்வேலி | 1 | 28.90 | 11 | 29 | 302.06 |
| திருப்பூர் | 4 | 199.79 | 1 | 2 | 41.52 |
| **மொத்தம்** | **12** | **590.58** | **20** | **60** | **625.73** |

(ஆதாரம்: தெரிவு செய்யப்பட்ட சீர்மிகு நகரங்களால் வழங்கப்பட்ட விவரங்கள்)

16 நிதித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளரைத் தலைவராகவும், MA&WS துறையின் அரசு முதன்மைச் செயலாளரை உறுப்பினராகவும், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) நிர்வாக இயக்குநரை உறுப்பினர் செயலாளராகவும் கொண்டு உருவாக்கப்பட்டது.

இவ்வாறு, பணிச் செலவை ஒப்புதல் வரம்பிற்குள் வைத்திருக்க ஒத்த பணிகளைப் பிரித்ததன் மூலம், HPPSC நிபுணரின் சரிபார்ப்பு/கருத்து மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செலவுச்சேமிப்புக்கான வாய்ப்பை இழந்தது.

பெரிய அளவிலான பணிகளைச் சிறிய, நிர்வகிக்கக்கூடிய தொகுப்புகளாகப் பிரிப்பதற்கான முடிவானது, பணி நிறைவேற்றத்தின் செயல்திறன் மற்றும் விளைவுத்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, நடைமுறை, தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆலோசனைகளால் தீர்மானிக்கப்பட்டது என்று அரசு பதிலளித்தது (மே 2025).

மேற்கண்டவாறு, பணியைப் பிரித்தபோதும், பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்பட்டு, இச்செயல்படுத்தலின் நோக்கத்தைத் தோற்கடித்தது என்பதால் இந்த பதில் ஏற்கத்தக்கதாக இல்லை.

## 3.5 கண்காணிப்பு

### 3.5.1 கண்காணிப்பு அமைப்பு

கண்காணிப்பு என்பது, அடையாளம் காணப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நோக்கிய ஒரு திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான தொடர்ச்சியான செயல்முறையாகும். இது தொடர்புடைய குறியீடுகள் மற்றும் அவற்றின் தரவு ஆதாரங்களை அடையாளம் காண்பது, தரவு சேகரிப்பு மற்றும் திட்டத்தின் செயல்படுத்தலை மதிப்பாய்வு செய்வதற்காக தகவல்களை நிகழ்நேரத்தில் செயலாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. சீர்மிகு நகரத் திட்ட வழிகாட்டுதல்களின் பிரிவு 13ன் படி, விளக்கப்படத்தில் காட்டப்பட்டுள்ளபடி மூன்று நிலைகளில் கண்காணிப்பு அமைப்பு கூறப்பட்டுள்ளது (**விளக்கப்படம் 3.17**). மூன்று நிலை கண்காணிப்பு அமைப்பு அடுத்தடுத்த பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.17: கண்காணிப்பு அமைப்பு**



### 3.5.2 தேசிய மற்றும் மாநில அளவிலான கண்காணிப்பு

தொடர்புடைய அமைச்சகங்கள்/அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட, MoUD செயலாளரின் தலைமையிலான உச்சக் குழு (AC), சீர்மிகு நகரத் திட்டத்திற்கான முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் அளித்தும், அவற்றின் முன்னேற்றத்தைக் கண்காணித்தும் நிதியையும் விடுவிக்கும். மேலும், AC முழுவதுமான வழிகாட்டுதலை வழங்கும் மற்றும் திட்ட ஆலோசனையில் அங்கம் வகிக்கும் இந்தக் குழு வழிகாட்டுதல்களின் பிரிவு 13.1ல் வழங்கப்பட்டுள்ளபடி, மத்திய அரசு, மாநிலங்கள், ULBகள் மற்றும் புறநிலை பங்குதாரர்கள் இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும். தலைமைச் செயலாளர் (பிரிவு 13.2) தலைமையிலான மாநில அளவிலான உயர் அதிகாரம் கொண்ட வழிகாட்டுதல் குழு (HPSC) திட்டத்தை முழுவதுமாக வழிநடத்தும். HPSC, மாநில அரசுத் துறைகளின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும். சீர்மிகு நகர ULBன் மேயர் மற்றும் மாநகராட்சி ஆணையர் HPSCல் பிரதிநிதியாக இருப்பார்கள். மாநில அரசின் செயலாளர் என்ற பதவிக்குக் கீழே அல்லாத ஒரு அதிகாரி மாநில அரசால், மாநில திட்ட இயக்குநராக தேர்ந்தெடுக்கப்படுவார். மாநில திட்ட இயக்குநர் மாநில HPSCன் உறுப்பினர்-செயலாளராகச் செயல்படுவார்.

HPSC மற்றும் திட்ட இயக்குநர் ஆகிய இருவரின் கண்காணிப்பு அம்சத்தைப் பற்றி திட்ட வழிகாட்டுதல்களில் குறிப்பு ஏதும் இல்லை என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. பதிவுருக்களை ஆய்வு செய்தபோது, சீர்மிகு நகரத் திட்ட மறு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டதாகவும், அதில் (i) சீர்மிகு நகரத் திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் வணிகப் பணிகளை குத்தகைக்கு விடுவதற்கான பொதுவான திட்ட அறிக்கையைத் (SoP) தயாரிப்பது (ii) அனைத்து சீர்மிகு நகரத் திட்டங்களுக்கும் தேவைப்படும் இடங்களில் DTCP திட்டமிடல் அனுமதியைப் பெறுவது (iii) சீர்மிகு நகர SPVகளின் நீடித்த நிலைத்தன்மைக்கு, அந்தந்த நகரங்களின் வணிக சொத்துக்களை SPVகள் நிர்வகிக்கும் சாத்தியக்கூறுகள் போன்றவை குறித்து அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும், **பத்திகள் 3.1.5 மற்றும் 3.2.2ல்** விவாதிக்கப்பட்டபடி சீர்மிகு நகரங்களால் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

### 3.5.3 நகர அளவிலான கண்காணிப்பு

ஒவ்வொரு சீர்மிகு நகரத்திற்கும் நகர அளவில் பல்வேறு பங்குதாரர்களிடையே ஆலோசனை வழங்கவும், ஒத்துழைப்பை ஏற்படுத்தவும் ஒரு சீர்மிகு நகர ஆலோசனைக் குழு அமைக்கப்படும். இக்குழுவில், வழிகாட்டுதல்களின் பிரிவு 13.3ன் நிபந்தனைப்படி, SPVன் தலைமை செயல்பாட்டு அதிகாரி அதன் ஒருங்கிணைப்பாளராக இருப்பார். 31 ஜூலை 2015 தேதியிடப்பட்ட தமிழ்நாடு அரசின் அரசாணை எண் 112ன் வழிகாட்டுதல்களின்படி, பல்வேறு பங்குதாரர்களிடையே ஆலோசனை வழங்கவும், ஒத்துழைப்பை ஏற்படுத்தவும், சென்னையைப் பொறுத்தவரை

மாவட்ட ஆட்சியர்/ஆணையர் தலைமையிலான ஒரு நகர அளவிலான ஆலோசனைக் குழு அமைக்க தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியது. வழிகாட்டுதல்களோ அல்லது அரசாணையோ கூட்டத்தை நடத்துவதற்கான எந்த கால இடைவெளியையும் குறிப்பிடவில்லை.

ஏழு நகரங்களுக்கான SPVகள், ஜூலை 2016 மற்றும் ஜூன் 2018க்கு இடையில் உருவாக்கப்பட்டிருந்தாலும், முதல் நகர அளவிலான ஆலோசனைக் குழு (CLAF) கூட்டம் அக்டோபர் 2018 மற்றும் செப்டம்பர் 2020க்கு இடையில் மட்டுமே நடத்தப்பட்டது என்பது தணிக்கையில் கண்டறியப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட ஏழு நகரங்களில் நடைபெற்ற CLAF கூட்டத்தின் விவரங்கள் **அட்டவணை 3.12ல்** விவரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.12: CLAF கூட்டங்களின் விவரங்கள்**

| நகரம் | உருவாக்கப்பட்ட தேதி | கூட்டங்களின் எண்ணிக்கை | கூட்டங்கள் நடைபெற்ற தேதிகள் |
|---|---|---|---|
| சென்னை | 15-07-2016 | 4 | 13-01-2020; 17-02-2020; 10-03-2020 மற்றும் 07-04-2022 |
| கோயம்புத்தூர் | 15-07-2016 | 1 | 28-09-2021 |
| ஈரோடு | 01-06-2018 | 7 | 15-10-2018; 16-10-2019; 27-02-2020; 20-03-2020; 29-05-2020; 31-08-2020 மற்றும் 30-12-2021 |
| மதுரை | 02-02-2017 | 1 | 17-09-2021 |
| சேலம் | 01-02-2017 | 2 | 19-06-2020 மற்றும் 13-09-2020 |
| திருநெல்வேலி | 22-12-2017 | 6 | 08-06-2020; 28-08-2020; 27-11-2020; 27-10-2021; 08-12-2021 மற்றும் 11-03-2022 |
| திருப்பூர் | 21-12-2017 | 7 | 23-10-2018; 06-03-2020; 18-03-2020; 24-07-2020; 14-10-2020; 29-08-2022 மற்றும் 24-03-2023 |

(ஆதாரம்: சீர்மிகு நகரங்களால் வழங்கப்பட்ட விவரங்கள்)

மேலே உள்ள அட்டவணையில் இருந்து, கூட்டங்கள் அரசாணை தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகுதான் நடத்தப்பட்டன என்பதையும், நான்கு நகரங்களில் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நடத்தப்பட்டதையும் கண்டறிய முடியும். SCM பணிகளை முடிப்பதற்கான முதல் காலவரம்பு உருவாக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் என்பதைக் குறிப்பிடுவதும் சரியானதாக இருக்கும். இந்நிலையில், செயல்படுத்தலில் CLAFன் பங்கு மிகக் குறைவானதாகும். ஏனெனில் கூட்டங்கள், செயல்படுத்தப்பட்ட பணிகள் முடியும் தருவாயில் இருக்கும் போது நடத்தப்பட்டதால், செயல்படுத்தலுக்காக எடுக்கப்பட்ட பணிகள் குறித்த CLAFன் ஆலோசனையிலிருந்து நகரங்கள் பயனடைய முடியவில்லை. இதனால், பங்குதாரர்களிடையேயான தொடர்புக்கான

நோக்கத்தை அடைய முடியவில்லை. மேலும், அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளபடி, கூட்டங்களும் காலமுறைப்படி அல்லாமல், சீரற்ற முறையில் நடத்தப்பட்டன.

CLAF கூட்டங்களிலிருந்து வெளிவந்த சில விளக்கமான பரிந்துரைகள் மற்றும் அதன் நிலை கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

(i) **சென்னை**: 07 ஏப்ரல் 2022 அன்று நடைபெற்ற நான்காவது கூட்டத்தில், 2020 நவம்பரில் கட்டி முடிக்கப்பட்டு செயல்படாத உயிரி எரிவாயு (bio-gas) ஆலையை செயல்பாட்டுக்கு கொண்டு வருவதை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும், மேற்கண்ட உள்கட்டமைப்பைப் பயன்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் மின் உற்பத்தி விவரங்கள் தணிக்கைக்கு வழங்கப்படவில்லை.

(ii) **ஈரோடு:** இரண்டாவது CLAF கூட்டத்தில் (அக்டோபர் 2019) பூங்காக்களில் சுற்று கண்காணிப்பு கேமராக்களை (CCTV) நிறுவ பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும், இந்த கேமராக்கள் சாலைகள் மற்றும் சந்திப்புகளில் பொருத்தப்பட மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டது, ஆகையால், பூங்காக்களில் கேமராக்கள் பொருத்தப்படவில்லை. ₹17.25 கோடிக்கு முன்மொழியப்பட்ட மொத்த திட்ட செலவில், ₹1 கோடி மட்டுமே செலவிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு, CLAFன் முதல் கூட்டம் தாமதமாக நடத்தப்பட்டதாலும், மேலும், CLAF கூட்டத்தின் போது வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள்/பரிந்துரைகள் பின்பற்றப்படாததாலும், அந்தந்த சீர்மிகு நகரங்களால் SCMன் முக்கிய கண்காணிப்புப் பிரிவின் நோக்கத்தை அடைய முடியவில்லை. அரசு மட்டத்தில் நடத்தப்பட்ட மறு ஆய்வுக் கூட்டங்கள் அந்தந்த நகரங்களின் CLAF கூட்டங்களின் போது வழங்கப்பட்ட பரிந்துரைகளைப் பற்றி விவாதித்ததா என்பதையும் உறுதிப்படுத்த முடியவில்லை.

அரசு தனது பதிலில் கூறியது (மே 2025): (i) அமைப்பிலிருந்து உருவாக்கப்படும் மின்சாரம் தற்போது அதன் செயல்திறன், நம்பகத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விரிவான சோதனை மற்றும் மதிப்பீட்டிற்கு உட்பட்டுள்ளது மற்றும் செயல்பாட்டு தாக்கங்கள் அதற்கேற்ப தொகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படும், (ii) ஈரோட்டில் உள்ள பூங்காக்களில் உள்ள CCTV, 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்டது.

இருப்பினும், பின்னர் நடைபெற்ற CLAF கூட்டங்களின் விவரங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களின் போது வழங்கப்பட்ட பரிந்துரைகளின் இணக்கம் குறித்து பதில் ஏதும் இல்லை.

